கல்கி

KALKI
27.7.86
ரூ. 1,50



அமலா:

நாட்டியத்தை விட்டு விட்டு சினிமாவுக்கு வருவானேன்?



"இப்போது, லக்ஸையும் விட நான் அதிகம் விரும்பும் சோப் ஒன்று உள்ளது", என்கிறுர் ரேவதி.

புதிய லக்ஸ்

நேர்த்தியான புது மணம்

அதன் புத்தம் புது, மலர்களின் சாற்று மணம் பற்றி ஒவ்வொரு சினிமா நட்சத்திரமும், தம் விருப்பமான முறையில் விளக்குகிறுர்—"மென்மைய மிக்கது", "கிளர்ச்சியூட்டுவது".

கவர்ச்சியான புதுத் தோற்றம்

உங்களைப் போலவே கவர்ச்சியானது நவநாகரீகமானது அது—கண்ணைக் கவர்வதும்கூட! மூன்று வகை அழகிய வண்ணங்களில் கிடைக்கிறது—இளஞ் சிவப்பு, பச்சை மற்றும் மஞ்சள்.



ILL-2168

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தய



சலுகையும் தருவார்; சாட்டையும் சொடுக்குவார்!

வி. பி. சிங் வருகிறாரே, வேடிக்கை பார்க்கலாம் என்று விமான நிலையத்துக்குப் போனால் திடீரென்று ''இனமானம் காக்கும் தலைவர் வாழ்க'' என்று முழக்கம்! திடுக்கிட்டுத்திரும்பினால்... அட, வீரமணியேதான்! அமெரிக்கா போகிறாராம்.

மணி 10:17. வைஜயந்திமாலா பெரிய டிசைன் போட்ட பச்சைப் புடைவையில் அவசரம் அவசரமாக வந்தார். கூடவே நான்கு உதவியாளர்கள் ஓட்டமாக வந்து நுழைந்தார்கள். நாலுரூபாய்டிக்கெட்டாவது ஒன்றாவது அதெல்லாம் நமக்குத்தான்!

இ. காங்கிரஸ் தலைவர் பழனியாண்டியோடு பாண்ட், வட்டக் கழுத்துக் கோட்டு அணிந்து வந்தார் வி. பி. சிங். மாலை மாதிரி ஒரு பலநிறத் துண்டு! — யார் போட்டதோ? பொருத்தமாயில்லை. அதை நீக்கிவிட்டுப் பார்த்தால் அமைச்சரின் தோற்றம் தொழில் வர்த்தக வட்டாரத்தில் எழுப்பிய கமெண்ட்: ''பார்த்தால் ஒரு அதிகாரி மாதிரிதான் இருக்கிறார்; அமைச்சர் மாதிரியா இருக்கிறார்?

சென்னை தொழில் வர்த்தக சங்கத்தின் நூற்று ஐம்பதாவது ஆண்டு விழா — தாஜ் கொரமண்டலில். 150 வருஷ சரித்திரத்தில் ஒரு மத்திய நிதி அமைச்சர் இவ்விழாவில் பங்கேற்பது இதுவே முதல் தடவையாம்! ஆச்சரியமாயில்லை?

''ஏற்றுமதியில் உங்கள் கவனத்தைச் செலுத்த மாட்டேனென்கிறீர்களே'' என்று குறைபட்டுக்கொண்டார் வி. பி. சிங். ''உங்களுக்காக வரிச் சுமைகளை எவ்வளவு குறைத்திருக்கிறோம்! ஏற்றுமதி வர்த்தகத்தை ஊக்குவிக்க என்னவெல்லாம் சலுகைகள் கொடுத்திருக்கிறோம்! 'எஸ்டேட் டியூடி,' 'கம்பல்சரி டெபாஸிட்' போன்றவற்றை ஒழித்தேவிட்டோம்! இன்னும் என்ன செய்ய? இவற்றை இன்னொரு தடவையா ஒழிக்க முடியும்?'' என்று கேட்டபோது குபீர்ச் சிரிப்பு.

''கணவன் மனைவிக்கோ மனைவி கணவனுக்கோ வருஷா வருஷம் 20,000 ரூபாய் பெறுமானமுள்ள பரிசுகள் கொடுத்துக் கொள்ளலாம். அதற்கு வரி கிடையாது என்று வரம்பைத் தளர்த்தியிருக்கிறோம். ஆனால் அவர்களிடையே வேறுவிதமான பரிசுகளுக்கு நான் உத்தரவாதம் அளிக்க முடியாது!'' என்று அமைச்சர் கூறியபோது மீண்டும் சிரிப்பு அலைகள்.

வி. பி. சிங் என்பதை சிரிப்பு சிங் என்று கூட மாற்றி விடலாமோ என்று தோன்றியது. ஆனால் நாட்டின் ஏற்றுமதி வர்த்தக விஷயத்தில் அவருடைய ஆழ்ந்த கவலையும் புலப்பட்டது. ஒரு நன்றிக் கடனாகவாவது அவரது கவலையைப் போக்க வேண்டிய பொறுப்பு தொழில் வர்த்தக வட்டாரத்துக்கு இருக்கிறது.

வள்ளுவர் கோட்டம். வங்கி அதிகாரிகள் — ஊழியர் கூட்டம். வேலை நேரம் தாண்டியும் பணிபுரிந்து, கொலையுண்ட கர்நாடகா வங்கியின் அதிகாரியின் குடும்பத்துக்குப் போதுமான நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க அங்கேயே அப்போதே ரிசர்வ் வங்கி அதிகாரி கோஷுக்கு உத்தரவிட்டபோது பலத்த கைதட்டல். அதேபோல, வங்கியில் கொள்ளையடிக்க வருவோரிடம் போராடி உயிரிழப்போருக்கு ஒரு லட்ச ரூபாயும்; போராடிக் காயமடைந்தால் 50,000 ரூபாய் ப்ளஸ் பிரமோஷன் என்றும் அறிவித்த போது கைதட்டலில் வள்ளுவர் கோட்டம் அதிர்ந்தது.

ஜனார்த்தன் பூஜாரி வங்கி ஊழியர்களை அநாவசியமாகப் பொதுக் கூட்டங்களில் குறை கூறிவரும் போக்கை ஊழியர்கள் அமைச்சர் முன் கண்டித்த விதம் இருக்கிறதே... அவர்களுக்குக் கொடுத்த வாய்ப்பைப் பிரமாதமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று சொல்ல வேண்டும். ஆனால், வி. பி. சிங் பூஜாரியை, ''ஆனெஸ்ட்; சின்ஸியர், டிவோடட்...'' என்று புகழ்ந்து தள்ளிவிட்டார்!

வி. பி. சிங் என்று சுருக்கமாக அழைக்கப்படும் விசுவநாத் பிரதாப் சிங்குக்கு வயது 51. அலகாபாத்திலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் மாண்டா என்ற அழகிய கிராமம்தான் இவர் சொந்த ஊர். மாண்டாவின் ராஜாவும் ராணியும் இவரை தத்து எடுத்துக் கொண்டார்கள். உதய்பூர் ராணா குடும்பத்துப் பெண்ணை மணந்தார். ராஜ யோகமாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியதுதானே? ஊஹூம்! பூதான இயக்கத் தலைவர் வினோபா மாண்டாவுக்கு வந்தபோது வாரிசு உரிமையில் தமக்குக் கிடைத்திருந்த நிலபுலன்களை ஒட்டு மொத்தமாக அப்படியே அவருடைய இயக்கத்துக்குத் தானம் பண்ணிவிட்டார் வி. பி. சிங்! இதில் டிராக்டர் போன்ற நவீன இயந்திரங்களை வைத்து விவசாயம் நடத்தி வந்த 150 ஏக்கர் பண்ணையும் அடக்கம்!

சட்டம் படித்துவிட்டு, பிறகு பூனா ஃபெர்கூசன் கல்லூரியில் விஞ்ஞானமும் படித்



திருக்கிறார் சிங். விஞ்ஞானி ஆகத்தான் ஆசைப்பட்டாராம்!

இரண்டு பிள்ளைகள். ஒருவர் டாக்டர்; ஒருவர் இஞ்ஜினீயர். இருவரும் இருப்பது வெளிநாட்டில். மனைவி தில்லியில் இவருடன் இருக்கிறார். மிக எளிமையானவர், நேர்மையானவர், சொன்னதைச் செய்பவர் என்று பெயரெடுத்தவர். ஓய்வு கிடைத்தால் வி. பி. சிங் வண்ண ஓவியங்கள் படைப்பார்.

பட்ஜெட் தயாரித்தல், நிதி நிர்வாகம், பொருளாதாரக் கொள்கை இவற்றில் ஒரு புரட்சியையே தோற்றுவித்திருக்கிறார் வி. பி. சிங். ஒரு சிறந்த நிதி அமைச்சர், பொருளாதார நிபுணராக இருக்கத் தேவையில்லை; பல யோசனைகளைக் கேட்டுப் பொது அறிவுடன் அவற்றில் நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து செயல்படத் தெரிந்தால் போதும் என்பதை நிரூபித்திருக்கிறார் சிங்.

சரியான சமயத்தில், தேச சரித்திரத்தில் ஒரு சோதனையான கட்டத்தில் வி. பி. சிங்கும் ராஜீவ் காந்தியும் நெருங்கி வந்தது நாட்டின் நல்லதிர்ஷ்டம்.

'வரி செலுத்துவோரை நான் நம்புகிறேன். ஆனால் எனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக அவர்களும் நடந்து கொள்ள வேண்டும்' என்பதுதான் வி. பி. சிங்கின் கொள்கை. அபரிமிதமான வரிகள் விதித்தால் வரி ஏய்ப்பும் கறுப்புப் பணமும் தான் அதிகரிக்கும் என்பதை உணர்ந்து செயல்பட்டார். வரிகளைக் குறைத்தார். ஆனால் அதனால் அரசுக்கு வருவாய் குறையவில்லை! மாறாக யோக்கியமாக வரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து, வரி வசூல் எதிர்பார்த்ததைவிட உயர்ந்திருக்கிறது!

இதே நேரத்தில் இவ்வளவு சலுகைகள் தந்த பிறகும் வரி ஏய்ப்பவர்கள் மீது இவர் மிகக் கடுமையாக நடந்து கொள்கிறார். தொழில் வர்த்தக அதிபர்களுக்கு லாப நோக்கு இருப்பது நியாயம்; ஆனால் தேச நலனை விட சுயநலன் அதிகரித்து விடாமல் அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாத போது ரெய்டுகள் நடக்கத்தான் செய்யும்; கறுப்புப் பணம் கைப்பற்றப்படும்; கணக்குக் காட்ட முடியாத சொத்து பறிமுதலாகும்.

வி. பி. சிங் யதார்த்த ரீதியில் சிந்திக்கும் காரியவாதி. ஓர் உதாரணம்: கஸ்டம்ஸ் அதிகாரிகள் கள்ளக் கடத்தல் தங்கத்தைக் கண்டுபிடித்தால் அதன் மதிப்பில் பத்து சதத்தை அரசிடமிருந்து வெகுமதியாகப் பெறுவார்கள் என்று இருந்தது — முன்பு. கள்ளக் கடத்தல் காரர்களோ அதிகாரிக்கு 15 சதமாகக் கொடுத்துவிட்டுத் தங்கத்தைத் தள்ளிக் கொண்டு வந்துவிடுவார்கள்! இப்போது வி. பி. சிங் 20 சதம் வெகுமதி என்று உயர்த்தி விட்டார். கள்ளக் கடத்தல் காரருக்கு அதையும் விட அதிகமாகத் தந்தால் கட்டுப்படியாகாது! எனவே லஞ்ச ஊழல் இவ்விஷயத்தில் குறைந்து போயிற்று. அதிகாரிகளோ அதிகரித்த வெகுமதி காரணமாகக் கள்ளத் தங்கத்தைக் கைப்பற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்!

ராஜ்பவனில் அமைச்சருடன் ஒரு மினி பேட்டி. நான்கைந்து கேள்விகளுக்குத்தான் நேரம் இருந்தது, அவருக்கு.

கல்கி: கறுப்புப் பணத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஆரம்பத்தில் இருந்தது போலவே இப்போதும் தீவிரமாக இருக்கிறீர்களா....?

வி.பி. சிங்: இப்போதுகூட உங்கள் தமிழ் நாட்டிலேயே கோயமுத்தூரில் இரண்டு கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கம் பிடிபட்டது. வேட்டைகள் தொடர்ந்து நடக்கின்றன. கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள், மற்ற விதமான பொருளாதாரக் குற்றங்கள் இழைப்பவர்களைக் கண்டு பிடித்து நாங்கள் கோர்ட்டுக்குப் போகும்போது பிராசிகியூஷன் தரப்பில் தேவையான அளவு ருசுக்கள் இருக்க வேண்டும். அந்த ஆதாரங்களைத் தேடுவதால் எங்கள் வேட்டையில் ஒரு தீவிரம் இருக்கவே செய்யும்.

பெரும் புள்ளிகள் உள்பட பலர், கண்டு பிடிக்கப்பட்ட பிறகு குற்றங்களைத் தாங்களே ஒப்புக் கொண்டும் இருக்கிறார்கள். நாட்டுக்கு வெளியே அனுமதியின்றி பணத்தைக் கொண்டு போவது போன்ற சட்ட விரோதமான காரியங்களை அரசு எப்படி சகித்துக் கொள்ள முடியும்? பின்னே, மக்கள் எங்களை எதற்குத்தான் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள்?

கல்கி: நிதி அமைச்சர் ஆன புதிதில் தொழிலதிபர்களைத் தனியே சந்திக்க மாட்டேன் என்றீர்கள்; இப்போது அடிக்கடி சந்திக்கிறீர்கள் போலிருக்கிறதே?

வி.பி. சிங்: 'தனியாக வந்தால் சந்திக்க மாட்டேன். ஓர் அமைப்பின் சார்பில் வந்தால் சந்திக்கிறேன்' என்றுதான் முன்னர் சொன்னேன். ஒவ்வொரு தொழிலதிபராக சந்தித்து அவர் பிரச்னைகளை நான் அலசிக் கொண்டிருந்தால் 70 கோடி மக்களின் பிரச்னையை எப்போது கவனிப்பது? இப்போது நான் ஓர் அமைப்பின் சார்பில் வர வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை. தொழிலதிபர்கள் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் என்னைச் சந்திக்க அனுமதிக்கிறேன். தனித் தனியே அல்லாமல் ஒட்டு மொத்தமாக அனைவரையும் ஒரே சமயத்தில் பார்க்கிறேன். பிரச்னைகள் விவாதிக்கப்பட்டு கூடுமானவரை அப்போதே முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

கல்கி: தொழிலதிபர்களிடம் தனித் தனியே பேசுவதைத் தவிர்ப்பதன் மூலம் ஒளிவு மறைவு ஏதுமில்லை என்று நிரூபிக்க விரும்புகிறீர்கள் போலும். அதேபோல் பட்ஜெட் விஷயத்திலும் ரகசியம் ஏதுமில்லை என்று கருதுகிறீர்களா? பட்ஜெட்டுக்கு யோசனைகள் கேட்டு பரிசுகளும் வழங்குகிறீர்களே?

வி.பி. சிங்: பட்ஜெட்டைப் பொருத்த மட்டில் புதிதாக எந்தப் பொருள் மீது வரி விதிக்கப் போகிறோம் என்பது போன்ற ஒரு சில அம்சங்கள் மட்டும் ரகசியமாகக் காப்பாற்றப்பட வேண்டியதுதான். இல்லையென்றால் விபரீத விளைவுகள் ஏற்படும். ஆனால் பொதுப்படையாகப் பார்க்கும் போது ஜனநாயகத்தில் அரசு இயங்கும் முறையில் ரகசியம் ஏதும் அவசியமில்லை. இருக்கவும் கூடாது. அதிலும் முக்கியமாக நிதி விஷயத்தில் ரகசியங்களுக்கு இடமில்லை. நாங்கள் கையாள்கிற பணம் மக்களுடைய பணம். அதை எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை அறியும் உரிமை அவர்களுக்கு உண்டு; தெரிவிக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

கல்கி: உத்தரப்பிரதேச முதலமைச்சராக இருந்தபோது கொள்ளைக்காரர்களின் அட்டகாசத்தை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் அடக்க முடியவில்லையானால் ராஜினாமா செய்கிறேன் என்று கூறி அதன்படியே செய்தீர்கள். இப்போது பாங்குக் கொள்ளைக்காரர்கள் அதிகரித்து வருகிறார்களே....?

வி.பி. சிங் (சிரித்து): பாங்குக் கொள்ளைகள் அதிகரித்து வருகின்றன. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் உ.பி.யில் நடந்ததற்கும் இதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. உ.பி.யில் அக்கிரமம் நடந்து கொண்டிருந்தது. நாற்றைம்பது போலீஸார் கொள்ளைக்காரர்களால் உயிரிழந்தார்கள். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வீர மரணம் அடைந்தார். அவர் சடலத்தை நானும் தாங்கிச் சென்றேன். கொள்ளையர்களும் நிறையப் பேர் இறந்தார்கள், அல்லது பிடிபட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால் ஒரு கட்டத்தில் அவர்களின் அட்டகாசம் அதிகரித்தபோது நான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தேன். ஒன்றைச் சொன்னால் அதன்படி செய்ய வேண்டும் என்ற கருத்துடையவன் நான்.

கல்கி: சென்னையில் உங்களை வரவேற்கும் போஸ்டர்களில் 'பொருளாதார மந்திரவாதி' என்று போட்டிருக்கிறார்களே, பார்த்தீர்களா?

வி.பி. சிங் (சிரித்து): என்னென்னவோ பட்டங்கள் கொடுக்கிறார்கள்.... இதில் மந்திரம் என்ன, மாயம் என்ன? பார்க்கப் போனால் ஒரு நிதி மந்திரியின் வேலை, கிட்டத்தட்ட வீட்டை நிர்வகிக்கும் பெண்மணியின் பணி மாதிரிதானே? எது எதற்குச் செலவழிக்கலாம், எங்கெங்கே குறைக்கலாம்; எது அவசியம், எது விரயம் என்ற ஈடுபாடு இருந்துவிட்டால் அப்புறம் தானாக மற்ற சாமர்த்தியங்கள் வந்துவிடும்!

பேட்டி, கட்டுரை வடிவம்: சாருகேசி

சித்திரம் நன்றி: ஹிந்துஸ்தான் டைம்ஸ்



"ஆத்ம திருப்தி வேணும்னு ஆசிரமத்துக்குத்தான் போகணும்!"

ஏ.வி.எம். ஸ்டுடியோவில் 'மெல்லத் திறந்தது கதவு' படத்தின் ஒரு பாடல் காட்சி படமாகிக்கொண்டிருந்தது. அமலா 'தகதக'வென்று சம்கி வைத்துத் தைத்த வெள்ளை உடையும் நீல நிறத்தில் முகத் திரையும் (முஸ்லிம் பெண் பாத்திரமாம்) அணிந்து கொண்டு அழகிகள் கும்பலுக்குள் நுழைந்து நுழைந்து வெளிவந்து கொண்டிருந்தார். அவர் பின்னாலேயே தேடுகிறதோரணையில், கவலை தோய்ந்த முகத்துடன் மோகன். இடையிடையே 'ஓ.கே.' என்று குரல் ஒலிக்கவும் அமலா 'செட்டை' விட்டு வெளியே வந்து, எங்கள் கேள்விகளுக்குப் பதில் அளித்தார். அவர் பேச்சில் துணிவும் தன்னம்பிக்கையும் மேலோங்கியிருந்தன. முழுக்க முழுக்க ஆங்கிலத்தில்தான் பேசினார். பேட்டியின் சாராம்சம்:

- மை. ஏ. கா. வில் அறிமுகமாகி இன்று தமிழ் சினிமா உலகில் தனக்கென ஓர் இடம் பிடித்துள்ளார் அமலா. இவர் நடித்து வரும் ஐந்து படங்கள் முடியும் தறுவாயில் உள்ளன.
- கமல் உள்பட பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்து வருகிறார்.
- அமிதாபோடு ஒரு ஹிந்திப் படத்தில் நடிக்கச் சொல்லி இவரைக் கேட்டிருக்கிறார்கள்.
- ஹாலிவுட் தயாரிப்பான ஓர் ஆங்கிலப் படம் (Fire Below Zero) இந்தியப் பின்னணியில் படமாக்கப்பட உள்ளது. இப் படத்தில் வரும் ஓர் இந்தியப் பெண் பாத்திரத்தில் நடிக்க அமலாவுக்கு அழைப்பு வந்துள்ளது.
- கடுமையான உழைப்பாளி, நேரம் தவறாதவர் என்பதாலும் செட்டில் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோருடனும் சிரித்துப் பேசிப் பழகுவதாலும் திரை உலகில் இவருக்குச் சுலபமாக நல்ல பெயர் கிடைத்துவிட்டது.

கல்கி: உங்கள் குடும்பப் பின்னணி இப்போது பிரசித்தமாகிவிட்டது. வங்காளத் தந்தைக்கும் ஐரிஷ் அம்மாவுக்கும் பிறந்த நீங்கள் உங்கள் குறைந்த தமிழ் அறிவைக் கொண்டு எப்படி தமிழ்ப்பட உலகில் சமாளிக்கிறீர்கள்?

அமலா: ஏழு வயது முதல் தமிழ்நாட்டில் கலாக்ஷேத்ரா பள்ளி ஹாஸ்டலில்தான் தங்கிப் படித்தேன். அதனால் எனக்குத் தமிழ் நன்றாகவே தெரியும். உச்சரிப்புத்தான் கொச்சையாக இருக்கும். அதனால் எனக்கு யாராவது 'குரல் கொடுக்க' வேண்டியிருக்கிறது.

கல்கி: உங்களுக்குத் தமிழ் தெரிந்திருப்பதால் ஒரு படத்தில் நடிக்க ஒப்புக் கொள்வதற்குமுன் ஸ்க்ரிப்டைப் படித்துவிட்டு அதை எடுத்துச் செய்வதா வேண்டாமா என்று தீர்மானிக்க வசதியாகத்தான் இருக்கும், இல்லையா?

அமலா: ஸ்கிரிப்டா? தமிழ்ப் பட உலகில் 'ஸ்க்ரிப்ட்' என்பதே கிடையாதே! டைரக்டர் சொல்லும் கதைச் சுருக்கத்தின் அடிப்படையிலும் அவர் விளக்கும் பாத்திரப் படைப்பின் அடிப்படையிலும்தான் நான் ஒரு படத்தில் நடிக்க ஒப்புக் கொள்வதைப் பற்றித் தீர்மானிக்கிறேன். அதையும் ஒரு நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஏற்க வேண்டும். படத்தின் இடையே கதையின்போக்குமாறுவதுண்டு. அதற்கேற்ப பாத்திரப் படைப்பும் மாறக்கூடும். ஆனால் நான் என் கொள்கைகளை விட்டுக் கொடுக்காத அளவில்தான் இத்தகைய மாற்றங்களுக்குச் சம்மதிப்பேன்.

கல்கி: அப்படியா! எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு பாத்திரத்தை ஏற்கச் சம்மதிக்கிறீர்கள்—சொல்லுங்களேன்?

அமலா: கதாபாத்திரம் என்னை inspire செய்ய வேண்டும்.

கல்கி: 'inspire' என்றால்.... இப்போது நீங்கள் நடித்து வரும் ஏ.வி.எம்.மின் 'மெல்லத் திறந்தது கதவு' படத்தில் நடிக்க உங்களை எது 'inspire' செய்தது.....?

அமலா (சற்று படபடப்பாக): நீங்கள் ஒரு டைரக்டரின் ஸ்டோரி டிஸ்கஷன் செஷனைப் பார்த்திருக்கிறீர்களா?

கல்கி: அதை நான் பார்க்க அவசியம் என்ன; நீங்கள் அல்லவா பார்க்க வேண்டும்....?

அமலா: இல்லை! அப்படி ஒரு செஷனைப் பார்த்துவிட்டு இந்தக் கேள்வியை என்னிடம் கேளுங்கள். டைரக்டர் கதையைச் சொல்லிக் கொண்டே வரும்போது அந்தப் பாத்திரத்தைப் பற்றிய ஒரு உருவம் எனக்குள் தோன்றி என்னை உந்தும். அப்படிச்

செய்தால்தான் அப்படத்தில் நடிக்கச் சம்மதிப்பேன்.

கல்கி: உங்கள் தமிழ் உச்சரிப்பை சரி செய்து நீங்களே பேசி நடித்தால் இன்னும் நிறைவாக இருக்காதா? அதற்கான முயற்சிகள் ஏதும் எடுத்து வருகிறீர்களா?

அமலா: அப்படி ஒரு ஆசை இருந்தாலும், அதற்கான நேரம் எனக்கு இல்லை. விடியற்காலை ஆரம்பித்து இரவு பத்து மணி வரை தினமும் ஷூட்டிங் இருக்கிறது. மேலும், நான் இன்னும் எத்தனை காலம் இந்தத் துறையில் வெற்றிகரமாக நீடிக்க முடியும் என்பதைச் சொல்வதற்கில்லை. என் படங்களில் ஏதேனும் இரண்டு தோல்வியடைந்தால் போதும். உடனே எனக்கு மவுசு குறைந்து விடும். இங்கு தினமும் புதுமுகங்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நான் நடிப்பதைத்தவிர வேறுவிஷயங்களில் கவனம் செலுத்துவது எனக்கு நல்லதல்ல.

கல்கி: நிலையானதல்ல என்று தெரிந்தும் ஏன் இந்தத் துறைக்கு வந்தீர்கள்?

அமலா: இங்கு மூன்று வருடத்தில் நான் சம்பாதிக்கும் பணத்தை என் ஆயுள் முழுவதும் முயன்றாலும்நான் வேறு எங்கேயும் சம்பாதிக்க முடியாது என்பதால்தான்.

கல்கி: பணம் அவ்வளவு முக்கியமா...?

அமலா: இன்றைய உலகில், நிச்சயமாக முக்கியம்தான். ஆனால் அதைத் தேடி நானாகப் போகவில்லை. சினிமா வாய்ப்பு என்னைத் தேடி வந்து என் வீட்டு வாசற் கதவைத் தட்டியது. நான் அதை வரவேற்றேன். நான் சில விளம்பரங்களில் 'மாடல்' செய்ததைப் பார்த்துவிட்டு டி. ஆர். என்னை அணுகிய போது பிளஸ் டூ முடித்துவிட்டுக் கோடை விடுமுறையை எப்படிக் கழிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். 'மைதிலி' பட வாய்ப்பை விடுமுறையில் கிடைத்த ஒரு வேலையாக நினைத்துத்தான் ஏற்றேன். அடுத்த கோடையில் என் இஷ்டப்படி எந்த ஊருக்கு வேண்டுமானாலும் போகலாம். அதற்கு அப்பா அம்மாவிடம் பணம் கேட்க வேண்டாம் என்ற எண்ணம்தான் அப்போது மேலோங்கியிருந்தது.

கல்கி: உங்கள் பெற்றோர் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லையா?

அமலா: இல்லவே இல்லை. நான் எடுத்த முடிவு முழுக்க முழுக்க என் சுய சிந்தனையின் விளைவானது. எந்தவிதமான உந்துதலோ, தூண்டுதலோ அல்லது எதிர்ப்போ அதற்கு இருக்கவில்லை. முதல் பட ஒப்பந்தத்தை கையெழுத்திட்டதும் வெளியூரிலிருந்த என் அப்பாவுடன் டெலிபோனில் பேசினேன். 'உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது' என்றார்.

கல்கி: உங்கள் குடும்பப் பின்னணியும் கலாக்ஷேத்ரா பின்னணியும் சினிமாத் துறையில் நீங்கள் பெற்றுள்ள வெற்றிக்குக் காரணங்கள் என்பீர்களா?

அமலா: ஒரு கண்ணோட்டத்தில் பார்த்தால் இது சரிதான். வீட்டின் செல்லக் குழந்தையாக இருந்த போதும் ஏழாவது வயதிலேயே என்னை ஹாஸ்டலில் சேர்த்துவிட்டார்கள். அப்போது முதலே ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றில் நல்ல பயிற்சி; நாட்டியம் கற்றுக் கொண்டு ஓரளவு தேர்ச்சி பெற்றதும் வெளி ஊர்களுக்குச் செல்லும் பழக்கம்; அதிகாலையில் எழுந்திருப்பது, சளைக்காமல் உழைப்பது, பலவிதமான மனிதர்களுடன் பேசிப் பழகுவது போன்ற பல விஷயங்களில் கலாக்ஷேத்ரா எனக்கு உதவி இருக்கிறது. முறையாக நாட்டியம் பயின்றதால் சினிமா நடனங்களிலும் அது உதவுகிறது. ஒரு ஸ்டெப் அல்லது அசைவைக் கற்றுக் கொள்வது சுலபமாக இருக்கிறது.



"பரத நாட்டியத்தில் மட்டும் ஆத்ம திருப்தி எங்கே கிடைக்கிறது? அங்கேயும் பணம்தான் புகுந்து விளையாடுகிறது...!"

கல்கி: பரத நாட்டியம்தான் உங்கள் முதல் காதல் என்பீர்களா?


அமலா: ஆமாம், நிச்சயமாக.

கல்கி: பின் ஏன் பரதத்தை விட்டுவிட்டு சினிமாவுக்கு வர வேண்டும்?

அமலா: தங்கத் தட்டில் ஒரு வாய்ப்பை வைத்து ஏற்றுக் கொள்ளச் சொன்னால் அதை மறுப்பது முட்டாள்தனம் இல்லையா?

கல்கி: அப்போது நாட்டியம்....?





New Improved
Farex®
CEREAL WITH MILK


க்ளூகோன்-டி ஸூப்பர்ஹீரோ.
களைப்பூட்டும்
வெய்யிலிலும்
களிப்பூட்டும்
சக்திப்பெருக்கு
Glaxo
Glucon-D®
Glucose-D
GL
High-grade, finely powdered glucose enriched with vitamin D and calcium phosphates
GLAXO LABORATORIES
(INDIA) LTD
Maximum
Price Rs
Local Taxes Extra
LOT
MONTH
புதிய, அசல்,
வண்ணமயமான
பேக்கைப் பார்த்து
வாங்குவீர்.
களைப்பூட்டும் வெய்யில் நாளிலே உங்கள் குழந்தைக்குத் தேவை க்ளூகோன்-டி: க்ளூகோஸ், விட்டமின்-டி, கால்ஸியம் ஃபாஸ்ஃபேட்டுகள் அடங்கிய உடனடி சக்திபானம்.
பழரசம், தேநீர், காபி அல்லது தண்ணீரிலே கலந்து அருந்த, குடும்பத்தினர் அனைவர்க்குமே புத்துணர்ச்சி தரும் பானமாக அமைகிறது. 100, 200, 500 கிராம் பேக்கெட்டுகளில் கிடைக்கிறது. க்ளாக்ஸோ வழங்கும் க்ளூகோன்-டி.
க்ளூகோன்-டி®
ஸூப்பர்ஹீரோ மிகவிரும்பும் சக்திபானம்.
GLL-2389

அமலா: ஆயிரம் சொன்னாலும் நம் நாட்டில் ஒரு நாட்டியக் கலைஞருக்கு கிடைக்கும் ஊக்கமும் ஊதியமும் ரொம்பச் சொற்பமானவை. எல்லோரும் 'பரதநாட்டியமா! ஆஹா! ஓஹோ!' என்று தேனொழுகப் பேசுவதோடு சரி. இன்று எத்தனை பரதக் கலைஞர்கள் கலையைத் தொழிலாகக் கொண்டு வாழ்கிறார்கள் என்று விரல் விட்டு எண்ணிவிடலாம்.

கல்கி: நாட்டியத்தைத் தொழிலாகக் கொள்ளாவிட்டாலும் அந்த உன்னதமான கலையைப் பயிற்றுவிப்பதைத் தொழிலாகக் கொண்டு பலர் இருக்கிறார்களே?

அமலா: இந்த வயதில் தட்டுக் கழியை வைத்துக் கொண்டு சின்ன குழந்தைகளுக்குத் 'தையா தை' சொல்லித் தருவதை நான் விரும்பவில்லை. நான் கலாக்ஷேத்ராவில் தொடர்ந்து இருந்திருந்தால் அதைத்தான் செய்திருக்க முடியும். குழந்தைகளுக்குச் சொல்லித் தருவது மிக நல்ல விஷயம்தான். ஆனால் நான் ஒரு மேடைக் கலைஞர். எனக்கு ஒரு மேடையும் பார்வையாளர்களும் வேண்டும். என்னுள் இருக்கும் மனோதர்மத்தை-படைப்பார்வத்தை-வெளிப்படுத்த வாய்ப்பு வேண்டும்.



"இன்றைக்கு எனக்கென்று ஒரு பெயர் இருக்கிறது; அந்தஸ்து இருக்கிறது; நான் செட்டுக்குள் நுழைந்தால் லைட் பாயிலிருந்து அனைவரும் எழுந்து நிற்கிறார்கள்."

கல்கி: சினிமாவில் மட்டும் அந்த வாய்ப்பு எங்கே இருக்கிறது? டைரக்டர் சொல்வதைத்தானே நீங்கள் செய்ய வேண்டும். ஒரு நடனம் எப்படித் தயாரிக்கப்பட்டுள்ளதோ அதன்படித்தானே நீங்கள் ஒவ்வொரு அசைவையும் செய்ய வேண்டும். இதில் படைப்பார்வத்துக்கு எங்கே வடிகால் இருக்கிறது?

அமலா: சொன்னபடிதான் நான் செய்ய முடியும் என்பது சரியே. ஆனால் 'நான்' அதை அழகாகச் செய்வதில்தான் அந்தக் காட்சி அல்லது படத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய பொறுப்பு இல்லையா? இந்தப் பொறுப்பைச் சரியாகச் செயல்படுத்துவதில் எனக்கு அலாதியான திருப்தி கிடைக்கிறது.

கல்கி: அதே திருப்தி நாட்டியத்திலும் கிடைக்கக்கூடியதுதானே? பார்க்கப் போனால் நாட்டியம் செய்யும்போது உங்கள் ஆற்றலுக்குக் கட்டுண்ட பார்வையாளர்கள் உணர்ச்சிகளை நீங்கள் கண்கூடாகக் காண முடியுமே. ஆனால் சினிமாவில் அப்படி இல்லையே.

அமலா: இதெல்லாம் உண்மைதான். ஆனால் வாய்ப்புக்கள்....? என்றோ ஒருநாள் தான் நாட்டிய நிகழ்ச்சிக்கு வாய்ப்பு கிடைக்கும். அதுவும் போட்டிக்கும் பொறாமைக்கும் இடையே போராட வேண்டியிருந்தது. இன்றைக்கு என் நிலைமை அப்படி இல்லை. எனக்கென்று ஒரு பெயர் இருக்கிறது; அந்தஸ்து இருக்கிறது; நான் செட்டுக்குள் நுழைந்தால் லைட் பாயிலிருந்து அனைவரும் என்னை மதித்து எழுந்து நிற்கிறார்கள்; புரொடியூசர்கள் என்னைத் தேடி வருகிறார்கள்.

கல்கி: போட்டியும் பொறாமையும் எந்தத் துறையில்தான் இல்லை. நீங்கள் சினிமாத் துறையில் அதை இன்னும் சந்தித்திருக்கமாட்டீர்கள்.

அமலா: இது எப்படிப்பட்ட உலகம் என்பது எனக்குத் தெரியும். அதை உணர்ந்து நான் ஜாக்கிரதையாகத்தான் நடந்து கொள்கிறேன். ஏற்கெனவே சொன்னதுபோல் என் வெற்றி தற்காலிகமானதாக இருக்கக்கூடும் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

கல்கி: திரை உலகில் உங்களுக்கு வரவேற்பு குறையும்போது என்ன செய்வீர்கள்....?

அமலா: நான் அவ்வளவு தூரம் யோசித்துத் திட்டமிடுவதில்லை. எல்லோரையும் போல் எனக்கும் கனவுகள் உண்டு. ஆனால் ஒவ்வொரு நாளையும் அன்றைய பொழுதிற்காகத்தான் வாழ்கிறேன். மூன்று வருடங்களுக்கு முன்னால் 'நீ என்னவாக இருக்க விரும்புகிறாய்?' என்று என்னை யாராவது கேட்டிருந்தால் 'மிருக வைத்தியராகப் போகிறேன்' என்றுதான் பதில் சொல்லியிருப்பேன்! ஆனால் காலத்தின் போக்கில் என் வாழ்க்கையில் மாறுதல்கள் நேர்ந்துவிட்டன.

கல்கி: மிருக வைத்தியராக விரும்பியதுண்டு என்றால் உங்களுக்கு மிருகங்களிடம் மிகுந்த அன்பு இருக்க வேண்டுமே? இப்போது செல்லப் பிராணிகள் வளர்க்கவோ மிருகங்களுடன் பழகவோ உங்களுக்கு நேரம் ஏது?

அமலா: ஆமாம். நான் விரும்பும் பல விஷயங்களைச் செய்ய எனக்கு நேரமில்லை.

ரொம்ப நாள் கழித்து நேற்றுதான் என் அம்மாவுடன் 'லஞ்ச்' சாப்பிட்டேன்.

கல்கி: சினிமா உலகிற்குள் நுழைந்துவிட்டால் இப்படிச் சொந்த சந்தோஷங்களைத் தியாகம் செய்ய வேண்டியுள்ளதே; உங்கள் சுதந்திரத்தை விலையாகக் கொடுத்து இப்படி ஒரு வாழ்க்கையைத் தேடிக் கொண்டதற்காக நீங்கள் வருந்தவில்லையா?

அமலா: அப்படி நான் நினைத்தால் இன்றைக்கு ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டு, நாய்க் குட்டிகளைக் கொஞ்சிக் கொண்டிருந்திருப்பேன். சொந்த வாழ்க்கை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் பொருளாதாரச் சுதந்திரம். இந்த நாட்டில் எத்தனை பதினெட்டு வயதுப் பெண்கள் சொந்தக் காலில் நிற்கிறார்கள் சொல்லுங்கள்? உலகில் வேறு எந்த பதினெட்டு வயதுப் பெண்ணையும்விட நான் சந்தோஷமாக இருக்கிறேன்.



“ ...எனக்கு இந்த ஏமாற்று வார்த்தைகளில் நம்பிக்கை இல்லை. நான் சாதாரண உணர்ச்சிகளை உடைய ஒரு சராசரிப் பெண். ”

கல்கி: இப்படி சம்பாதிக்கும் பணத்தை நீங்கள் மிகவும் விரும்பும் மிருகங்களுக்காகச் செலவிடுவீர்களா?

அமலா: பேச்சை விட செயல் முக்கியம் என்று நினைப்பவள் நான். எதையும் செயல்படுத்த பணம் மிகவும் முக்கியம் என்றும் தெரிந்துகொண்டேன். அதனால்தான் முதலில் பணத்தைச் சேர்ப்பதில் கருத்தாய் இருக்கிறேன்.... ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகிறது. சென்ற வருடம் சென்னையில் வெள்ளம் வந்தபோது ப்ளூ கிராஸில் பதினெட்டு பூனைக் குட்டிகள் செத்துப் போய்விட்டன! காரணம் — ப்ளூ கிராஸ் நிர்வாகக் குழு 'ஹீட்டர்' உபகரணங்களை வாங்குவதா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க முடியாமல்' பேச்சு வார்த்தைகளை ..நீடித்துக் கொண்டே போனதால்தான்.

கல்கி: மிருகங்களிடம் நீங்கள் கொண்டுள்ள ஈடுபாடு மூலம் ருக்மிணி தேவியின் மாணவி என்று அடையாளம் காட்டியுள்ளீர்கள். ருக்மிணி தேவி உங்களை மிகவும் மெச்சிப் புகழ்ந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. உங்கள் பதினான்காம் வயதில் கலாக்ஷேத்ராவின் குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் கதாநாயகி வசந்தவல்லியாக ஆடினீர்கள். அன்று ருக்மிணி தேவி உங்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு பெருமையும் பூரிப்பும் பொங்க உங்கள் ஆட்டத்தைப் புகழ்ந்ததைக் கண்டு பார்வையாளர்களின் கண்களே பனித்துவிட்டன. இதிலிருந்து உங்களுக்குப் பரதநாட்டியத்தில் அபாரத் திறமை இருந்தது என்று அறிந்து கொள்ள முடிந்தது. சினிமா உலகிற்கு அமலா இல்லாவிட்டால் ஒரு விமலாவோ கமலாவோ கிடைப்பது சிரமமில்லை; ஆனால் ஒரு பாரம்பரியம் மிக்க, பொக்கிஷமான கலையைக் காக்க, வளர்க்க உங்களைப் போல் உழைப்பும் திறமையும் இணைந்து பெற்ற இன்னொருத்தர் கிடைக்காமல் போகலாம். இதற்கென்ன சொல்கிறீர்கள்?

அமலா: 'பரதத்தில் எனக்கு அசாதாரண திறமை இருந்தது' என்று நீங்கள் கடந்த காலத்தில் சொல்வதைக் கவனித்தேன். அன்று ருக்மிணி தேவி அவர்கள் என்னைப் பாராட்டியது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை எனக்கு அதற்குப் பிறகு போதுமான அளவு ஊக்கம்தரப்படவில்லை என்பது. அடுத்த சில ஆண்டுகளில் 'நான் இன்னும் சிறிது வளர்ந்து, முதிர்ச்சி அடைந்த நிலையில் அதிகமாக உழைத்து, இன்னும் நன்றாகத் தான் செய்தேன். ஆனால் எல்லோரும் என் முதல் முயற்சியை மெச்சி அதைப் போல் பிற முயற்சிகள் இல்லை என்றே பேசி வந்தார்கள். நான் முன்னைப் போதையும்விடச் சிறப்பாக ஆட வேண்டும் என்பதற்காக அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் இது மாதிரி சமயங்களில் நான் மனமுடைந்து போனதுண்டு. மேலும், அன்று குற்றாலக் குறவஞ்சிக்காக எனக்குக் கிடைத்த சிறந்த விமர்சனங்கள் ருக்மிணி தேவி அவர்கள் என்னை மனம் திறந்து பாராட்டியிரா விட்டால் கிடைத்திருக்குமா என்பது சந்தேகம். அந்தப் பத்திரிகை விமர்சனங்களை விட என் முதல் திரைப்படம் 'மைதிலி என்னைக் காதலி'யில் என் நடிப்புக்குக் கிடைத்தவிமர்சனங்கள் இன்னும்சிறந்தவை, அதிகமானவை.

கல்கி: சிருங்கார ரசம் நிறைந்த கீத கோவிந்தத்தைக் கூட விரசம் தட்டாமல் கலை புணர்வோடு வழங்கக் கூடிய கலாக்ஷேத்ராவில் சிறு வயது முதல் பயின்ற நீங்கள் மைதிலி என்னைக் காதலி போன்ற சினிமாப் படங்களில் நடிக்க எப்படி ஒப்புக் கொண்டீர்கள்?

அமலா: மைதிலியில் நான் ஏற்ற பாத்திரத்

தில் என் பங்கில், விரசமோ, வன்முறையோ இல்லையே.

கல்கி: நீங்கள் நடிக்கும் வேறு படங்களில் கூட உங்கள் பாத்திரம் உயர்வாகவே இருக்கலாம். ஆனால் உங்கள் பாத்திரத்தை மட்டும் ஒரு படத்திலிருந்து தனியாக எப்படிப் பிரிக்க முடியும்? உங்கள் பாத்திரம் உயர்வானது என்பதால் மட்டமான படத்தில் நடிக்க ஒப்புக் கொள்வதா? அதை எப்படி நியாயப் படுத்துவீர்கள்?

அமலா: அப்படிப் பார்த்தால் யாருமே எதையுமே செய்ய முடியாது. நாம் எல்லோரும் இந்தச் சமூகத்தின் ஓர் அங்கம்தான். ஆனால் சமூக அவலங்களைக் களைய நம்மில் எத்தனை பேர் என்னென்ன செய்து வருகிறோம் சொல்லுங்கள்! தென் ஆப்பிரிக்காவில் மனிதன் மனிதனுக்கு இழைக்கும் அநீதியைத் தடுக்க நீங்களோ, நானோ என்ன செய்திருக்கிறோம்? என் அளவில் நான் சரியாக இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

கல்கி: சரி, தப்பு என்று எந்த அளவு கோலைக் கொண்டு தீர்மானிக்கிறீர்கள்?

அமலா: அடுத்தவனை எந்த விதத்திலும் புண்படுத்தாமல் என் சந்தோஷத்தை நான் தேடிக் கொண்டால் அது சரி. என்னுடைய அந்தத் தேடலின் போது நான் பிறரை வருத்தவோ அழிக்கவோ செய்தால் அது தவறு. இதுதான் என் வாழ்க்கைத் தத்துவம்.

கல்கி: ஆக, பரத நாட்டியத்தை சினிமாவுக்காக கைவிட்டது தவறில்லை என்கிறீர்கள். பரத நாட்டியம் அளித்த ஆத்ம திருப்தியைச் சினிமா உங்களுக்குத் தர முடிகிறதா?

அமலா: இதோ பாருங்கள்! ஆத்ம திருப்தியைத் தேடினால் நான் இங்கே இருக்க முடியாது. ஆசிரமத்தில்தான் இருக்க வேண்டும். பரத நாட்டியத்தில் மட்டும் ஆத்ம திருப்தி எங்கே கிடைக்கிறது? அங்கேயும் பணம்தான் புகுந்து விளையாடுகிறது....! அரங்கம் ஏற வேண்டுமானால் சரியான சமயத்தில் சரியான நபரின் ஆதரவு வேண்டும். பொது ஜனத் தொடர்பு வேண்டும். விளம்பரம் வேண்டும். இதெல்லாம் இல்லாவிட்டால் ஆடவே முடியாது. அப்புறம் ஏது ஆத்ம திருப்தி? எனக்கு இந்த ஏமாற்று வார்த்தைகளில் நம்பிக்கை இல்லை. நான் சாதாரண உணர்ச்சிகளை உடைய ஒரு சராசரிப் பெண். எனக்கு எங்கே ஊக்கமும் ஆதாயமும் அன்பும் கிடைக்கிறதோ அங்குதான் நான் சந்தோஷமாக இருக்க முடியும். இவற்றைச் சினிமா உலகம் இன்று எனக்குத் தருகிறது. என் விசிறிகள் என்மேல் அன்பைப் பொழிகிறார்கள். எல்லாம் தற்காலிகம்தான் என்றாலும் இவை நீடிக்கும்வரை நான் சந்தோஷமாக இருக்க முடியும்.



“சொந்த வாழ்க்கை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் பொருளாதாரச் சுதந்திரம். இந்த நாட்டில் எத்தனை பதினெட்டு வயதுப் பெண்கள் சொந்தக் காலில் நிற்கிறார்கள், சொல்லுங்கள்?”

கல்கி: அப்படி உங்கள் சினிமா சகாப்தம் முடிந்துவிட்டால் மீண்டும் பரத நாட்டியம் பக்கம் திரும்புவீர்களா?

அமலா: ஆமாம். இப்போதே எனக்கு நிறைய நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புக்கள் வருகின்றன. ஆனால் அவை என் மனத்திற்குப் பிடிக்கவில்லை. பெரிய மனிதர்கள் வீட்டுக் கல்யாண ரிஸப்ஷனில் ஆடினால் எல்லோரும் சாப்பாட்டு ஹாலை நோக்கித்தான் போய்க் கொண்டிருப்பார்கள். அப்படிச் செய்வதைப் பரதக் கலைக்கு இழைக்கும் அவமரியாதையாகக் கருதுகிறேன்.

கல்கி: 'சினிமாப் புகழ்' அமலா பரத நாட்டிய உலகில் மீண்டும் அங்கீகாரம் பெற முடியுமா? ஹேமமாலினி பரத நிகழ்ச்சி கொடுத்தால் கூட்டத்தில் இருப்பவர்கள் 'மெஹபூபா ஆடுங்கள்' என்று கூச்சல் போடுகிறார்களே?

அமலா: அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.

மேலட்டை வண்ணப்படம்: **யோகா**

புகைப்படங்கள்: **பிரவீண்குமார்.**




இந்திய எல்லையில் ஊடுருவல்
பாரதம்
சீனா
சிங்கள வெறியர்கள்
பேச்சு வார்த்தை
அமிர்தலிங்கம்
ரத்தத்தின் ரத்தம்
தமிழக முதல்வர்
என் கழகத் தொண்டர்கள் கத்தி வெச்சுக் கணும்!
விளக்கம்



கல்கி

1986 ஜூலை 27
மலர் 44 இதழ் 52
அக்ஷய ஆடி 11



கத்தி அரசியல்!

"இதுவரை எம். ஜி. ஆரின் உடல்நிலை பற்றி மட்டும்தான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம்; இப்போது அவர் மனநிலை பற்றியும் சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது'' என்று தலைநகரிலிருந்து வெளிவரும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் தேசிய நாளிதழ் தனது தலையங்கத்தைத் தொடங்க வேண்டிய அளவுக்கு எம். ஜி. ஆர். தமது 'கத்தி அரசியல்' பேச்சு மூலம் தரம் தாழ்ந்து போயிருக்கிறார்.

மதுரையில் நடந்த அகில உலக எம். ஜி. ஆர். மன்ற மாநாடு, அங்கு கூடிய மக்கள் தொகையை வைத்துப் பார்க்கும் போது, அவர்கள் எம். ஜி. ஆர். தரிசனத்துக்காக ஏங்கித் தவம் கிடந்ததைப் பார்க்கும் போது எம். ஜி. ஆருக்கு இன்னமும் மக்களிடையே உள்ள மாபெரும் செல்வாக்கை நன்கு உணர்த்தியது. அந்த வானளாவிய பிரமிப்போடு முடிந்திருக்க வேண்டிய மாநாட்டை அசிங்க அரசியல் என்ற அதள பாதாளத்துக்கு அழைத்துச் செல்லும் கைங்கரியத்தைத் தொடங்கி வைத்தார் அமைச்சர் சௌந்தரராஜன், தி. மு. க. வைத் தடை செய்யக் கோரியதன் மூலம். சௌந்தரராஜன் ஆரம்பித்து வைத்ததை எம். ஜி. ஆர். பூர்த்தி செய்து, இதைவிடத் தாழ்ந்த நிலைக்கு யாரும் போக முடியாது என்ற அளவுக்குச் சென்றுவிட்டார்!

கருணாநிதி, 'நமக்குப் போலீஸ் பாதுகாப்பு கிடைப்பதில்லை, எனவே நம்மை நாமே எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்ள ஒரு போலீஸ் படையை நாமே ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கிக் கொள்ள வேண்டியதுதான்' என்று பேசினாராம். இதையொட்டித்தான் தி. மு. க. வைத் தடை செய்யக் கோரிப் பேசினார் அமைச்சர் சௌந்தரராஜன். எம். ஜி. ஆரோ, தமது கட்சிக்கர்ரர்கள் ஒவ்வொருவரையும் கத்தி வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்!

கருணாநிதி, ''நான் போலீஸ் படை என்று கூறவில்லை; தொண்டர் படை என்றுதான் சொன்னேன்'' என்று அறிக்கை விட்டிருக்கிறார். ''தி. மு. க. கூட்டங்களில் எங்களுக்குப் பாதுகாப்பு தந்து அமைதியை நிலைநாட்ட போலீஸ் முன்வராததால் நாங்களே தொண்டர் படை அமைத்துக் கொள்வது அவசியமாகிறது'' என்கிறார். இது காலம் கடந்த ஞானோதயம் என்றும் முதலில் போலீஸ் படை என்ற சொல்லைத்தான் அவர் பிரயோகித்தார் என்றும் வைத்துக் கொள்வோமாயினும், பொறுப்புள்ள ஒரு மாநில முதல்வர் இதற்கு எப்படி பதில் சொல்ல வேண்டும்? 'நீங்கள் ஒரு தனிப்பட்ட போலீஸ் படையை உருவாக்கும் அபாயகரமான போக்கைக் கைவிடுங்கள். தமிழக போலீஸ் படை கட்சி சார்பற்றது; அனைவருக்கும் பொதுவானது; அது உங்கள் கட்சிக் கூட்டங்களின் போது போதிய பாதுகாப்பு அளிக்கும், கவலை வேண்டாம்' என்றல்லவா கூறியிருக்க வேண்டும்? 'இந்த வேண்டுகோளை மீறி தி. மு. க. தனிப்பட்ட போலீஸ் படை உருவாக்குமானால், தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்' என்று எச்சரித்தும் இருக்கலாம்.


இதற்கு மாறாக, ரத்தத்தின் ரத்தங்களைப் பார்த்து, ''கத்தியை வைத்துக் கொள்ளுங்கள்'' என்று ''அறிவுரை'' வழங்குவது எவ்வளவு பொறுப்பற்ற செயல்! அதிலும் இவர்கள் தலைவரின் அறிவுரையை மறுயோசனை இன்றி அப்படியே ஏற்கும் இயல்புடையவர்கள் அல்லவா! அவர்களைப் பார்த்து இப்படிக் கூறியபோது, தமிழக போலீஸ், தி. மு. க. வுக்கு மட்டுமென்ன, தமது கட்சிக்காரர்களுக்கும் கூடப் பாதுகாப்பு அளிக்கும் திறமை அற்றது என்று முதல்வரே ஒப்புக் கொண்டதாகிறதல்லவா? அதுவும் இவரே போலீஸ் துறையை கவனித்துக் கொள்கிறவர் ஆயிற்றே! எனவே, 'எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை' என்று கருணாநிதி கூறியதும் சத்தியமான வார்த்தையாகிவிடுகிறதே!

'இப்படி வன்முறையை ஊக்குவிப்பது போல் முதல்வர் பேசுவது முறையா?' என்றால், ''நான் தற்காப்புக்காகத்தான் கத்தி வைத்துக் கொள்ளச் சொன்னேன்'' என்று ஒரு விளக்க உரை தந்து, அபத்தத்தின் எல்லைக்கே சென்று விட்டார் எம். ஜி. ஆர்.! தற்காப்புக்காகக் கூட கத்தி வைத்துக் கொள்வதை சட்டம் அனுமதிக்கவில்லை என்பதைப் போலீஸ் துறையைக் கவனித்துக் கொள்ளும் முதல்வர் அறியாமலிருப்பது தமிழகத்துக்கே தலைகுனிவு.

முதல்வரின் பேச்சைக் கேட்டு அவரவரும் கத்தி காட்ட ஆரம்பித்தால் சட்ட ஒழுங்கினை போலீஸ் எப்படி நிலைநாட்ட முடியும்? அதுவும் முதல்வரே போலீஸ் இலாகாவிடம் நம்பிக்கை இழந்ததாகக் காட்டிக் கொண்ட பிறகு?

பிரதமர் 21 ஆம் நூற்றாண்டை எதிர்கொள்வோம் என்கிறார்; நமது முதல்வரோ கற்காலத்துக்குத் திரும்புவோம் என்கிறார்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.



கல்கி
ஆகஸ்டு 3உ
ஆண்டு மலர்
பட்டுக்கோட்டை பிரபாகர்
எழுதும்
என்னைக் காணவில்லை
மர்மத் தொடர்கதை
ஆரம்பம்

மினி தொடர்

சுஜாதா



எழுதும்

குறுநாவல்

உயிர் ஆசை!



பம்பாய்த் தமிழர் சிறப்பிதழ்

நாடாளும் தமிழர் முதல்
நடைபாதைத் தமிழர் வரை!

ரூ 1000 முதல் பரிசுச் சிறுகதை!

அதிக பக்கங்கள்; அதே விலை!

வட்டமேஜை

• தலையங்கம் கண்டேன். வரிக்கு வரி சபாஷ் போட்டுக் கொண்டே போகலாம். 'சாதனை! சாதனை!' என்று மார் தட்டிக் கொள்ளும் அரசுகளால் மக்களுக்குச் சோதனைதான் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை.
சென்னை—4. தீ.சு. ஸ்ரீராம்.

• பத்தாண்டு சாதனைகளைப் பாராட்டித் தலையங்கம் எழுதி, அரசு விளம்பரம் நிறைய வாங்கி காசு சம்பாதிப்பதை விடுத்து, தைரியமாக அவர்களின் குறைகளை எடுத்துரைத்து, நடுவு நிலைமை வகித்த தங்களைப் பாராட்டுகிறேன்.
செ. அன்பு மதியழகன்
கொப்பம்பட்டி.

• 'இசைத் தூண்களும், அவை சொல்லும், ஒரு கதையும்....' கட்டுரை படித்தேன். கூடிய சீக்கிரம் பராமரிக்கப்பட்டு, அந்த இசைத் தூண்கள் பாடப் போகும் ஆனந்த பூபாளத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்.
எம். வேணுப்ரியன்.
திருமருகல்.

• தர்மபுரி அரங்கநாதனைப் பற்றிப் படித்ததும் அவரது லீலா விநோதங்களை எண்ணி விலா நோகச் சிரிப்பதா, அதிகாரப் புஷ்பம் அவர் கரங்களில் கிடந்து 'அவதிப்படுவதைக் குறித்து வேதனைப்படுவதா என்றே தெரியவில்லை.
கே. வெங்கடசுப்ரமணியன்.
குடியாத்தம்—2.

• வெள்ளிக்கிழங்கு சாப்பிடும் குடும்பங்களைப் பற்றி முதல் பக்கத்திலேயே படித்தவுடன் அடுத்த பக்கங்களைத் திருப்ப முடியாமல் என் மனத்தைச் சோகம் கவ்விக் கொண்டது.
திருச்சி—8. வேடிக்தாஜுத்.

• நடுப் பக்கங்களில் புகைப்படங்களை அதிகமாக்கி விஷயத்தைச் சுருக்கி இருந்தது அதிகம் பாதித்தது!
சென்னை—17. எஸ்.வி. ராஜசேகர்.

• அதிகம் படிப்பறிவில்லாமல் மூட நம்பிக்கைகளால் உயிரினங்களை பலியிடுவதை குறைகூறுகிறோம். அதிகம் படித்தும்கூட, இந்த அரசியல்வாதிகளை நம்பி, நமது வாக்குகளை தந்துவிட்டு அவர்கள் 'வளர' நாம் பலிகடாவாகிறோமே, அந்த மூடநம்பிக்கைக்கு என்ன செய்வது?
ஈரோடு. அருண்.

• பஸ் இருந்தும் சரியான சாலை வசதி இல்லாத ஊர்களைப் பற்றியே இதுவரை கேள்விப்பட்டிருந்த எனக்கு, பாதை இருந்தும் பஸ் வசதி இல்லாத 'பஞ்சப்பட்டி, கொஞ்சம் விநோதமாகத்தான் தோன்றியது. ஹூம்...! அது இருந்தால் இது இல்லை; இது இருந்தால் அது இல்லை!
சென்னை—15. வி. முரளி.

• 'பத்தாயிரம் பேரைப் பாதிக்கும் பிரச்னை' என்ற கட்டுரையைப் படித்ததும், ஊதுவத்தி குச்சி சீவும் ஏழை மக்களிடம் இரக்கம் இல்லாமல் நடந்து கொள்ளும் அதிகாரிகளைக் கண்டு என் மனம் கொதித்தது. இது போல் தமிழ்நாடெங்கும் பல இடங்களில் உள்ள பிரச்னைகளை வெட்ட வெளிச்சமாக்கி வரும் உங்கள் சி.ஐ.டி. நிருபருக்கு நன்றி.
கும்பகோணம். வை. சரவணகுமார்.

• ஏதேது.... இன்றைய அரசியல்வாதிகள் எல்லாம் அந்தத் தண்டல்கார ஹெட்மாஸ்டரிடம், 'அந்த' விஷயத்தில் பிச்சை வாங்க வேண்டும் போலிருக்கிறதே?
திருச்சி—20. ஆர். அப்துல் சலாம்.

• 'ஓர் இளம் பெண்ணின் கண்ணீர் கதை' படித்தவுடன் மிகவும் மனம் வருந்தினேன். சவு இரக்கமில்லாமல் என்ன உலகம் இது! இந்தக் கட்டுரை வெளியான பிறகாவது அந்தச் சகோதரியின் வாழ்வில் ஒரு மலர்ச்சி ஏற்பட வேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.
சென்னை—43. ஆர். வைதேகி ராமன்.

• 'ஓர் இளம் பெண்ணின் கண்ணீர் கதை'யை சஸ்பென்சோடு எடுத்துச் சென்று, கடைசி பத்திக்கு வந்ததும்..... கண்கலங்கச் செய்துவிட்டீர்களே!
பள்ளிபாளையம். கே. ரமேஷ்.

• 'நடராஜ்தான் பணத்தை எடுத்திருப்பான்!', 'அப்போது கூட இந்தக் கதவு மூடியிருக்கலாம்...', 'மனிதர்கள் அங்கே இல்லை' — மூன்று சிறுகதைகளிலும், கதாபாத்திரங்கள், வெகு இயல்பாக, சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவை மனத்தில் தங்கி நிற்கும் கதைகளாகி விட்டன.
காங்கயம். ஜி. பாரதி.

• இவ்வளவு மனக் கஷ்டம் தரும் செய்திகளுக்கிடையே ஒரு நகைச்சுவை கட்டுரையையும் வெளியிட்டுவிட்டீரே! 'கங்காணி என்றால் என்ன அர்த்தம்' கட்டுரையைத்தான் சொல்கிறேன்.
தக்கலை. உ. சங்கரசுப்பு.

• இன்னும் இரண்டு மூன்று வாரங்களுக்கு நீங்கள் ஜோக் வெளியிடவே வேண்டியதில்லை சார்! ஏனெனில் இந்த வாரம் தான் நான்கு ஜோக்குகள் (அப்பாடி! எவ்வளவு அதிகம்!) வெளியிட்டு அபார சாதனை புரிந்திருக்கிறீர்களே!
கொப்பம்பட்டி. த. ஜெயக்குமார்.

இந்த மூடநம்பிக்கைக்கு என்ன செய்வது?

'கடவுள் ரொம்ப பிஸி!'

சாவித்ரியின் கண்களில் நீர் திரையிட்டிருந்தது. குழந்தைகள் இருவரும் தூங்கிவிட்டிருந்தனர். பெரிய சூட்கேஸுக்குள் புத்தகங்களை அடுக்கி அதனை அழுத்திமூட முயன்று கொண்டிருந்த கணவனின் அருகில் போய் அமர்ந்தாள். பெட்டியை மூடிவிட்டு நிமிர்ந்த டாக்டர் மோகன் குமார் சாவித்ரியைப் பரிவோடு பார்த்தார். அவள் கண்களைத் துடைத்துவிட்டுத் தைரியம் சொன்னார்:

''நான் எதுக்காக இங்கிலாந்து போறேன்னு நினைச்ச சாவித்ரி...? உன்னையும் குழந்தைகளையும் விட்டுப் பிரியணும்னு எனக்கு ஆசையா என்ன...? எம். ஸி. எச். படிப்பு முடிஞ்சதும் திரும்பிடப் போறேன். அப்புறம் நாம சேர்ந்தேதானே இருக்கப் போறோம். 'இன்னிக்கு நம்ம ஊரில எம். ஸி. எச். பட்டம் வாங்கியிருக்கிற டாக்டர்களை விரல் விட்டு எண்ணிடலாம். அதனாலே நீங்க கட்டாயம் அந்தப் படிப்பை மேற்கொண்டு பட்டம் வாங்கணும்' னு நீயே என்னை உற்சாகப் படுத்தியிருக்கே. இப்ப நீயே கண் கலங்கலாமா?''

''அதெல்லாம் சரிதாங்க. ஆனால் இங்கிலாந்து என்ன பக்கத்து ஊரா? எவ்வளவு தூரத்துல இருக்கு...? நாளைக்குப் புறப்பட்டுப் போனா எப்ப, எத்தனை வருஷம் கழிச்சுத் திரும்பி வருவீங்களோ...? அதுவரை உங்களைப் பிரிஞ்சு...

லேசாக விசும்ப ஆரம்பித்திருந்தாள் சாவித்ரி. டாக்டர் மோகன் குமார் அவளைப் பரிவோடு அணைத்தபடி பேசினார்:

''இங்கிலாந்து அடி நிலத்துல இல்லேங்கறது உண்மை



ஒரு மாவீரனின் உண்மைக் கதை

தான் சாவித்ரி. ஆனால், நாம அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கலாம், முடிந்தபோது டெலிபோன்ல பேசுவோம். மேலும், குழந்தைகள்தான் உனக்குத் துணையா இருக்காங்களே. அதுங்களையும் நமக்குப் பிறக்கப் போற மூணாவது கண்மணியையும் கவனிக்கறதுலேயே ஒனக்கு நாளும் மாசமும் என்ன, வருஷங்கள் போகறது கூடத் தெரியாது!

எனக்குக் கடிதம் எழுதக் கூட உனக்கு நேரம் இருக்காது பார்... இந்தப் பிரிவு என்னை மட்டும் பாதிக்கலேன்னு நினைக்காதேம்மா. நான் திரும்பி வந்ததும் இந்த இழப்புக்கெல்லாம் ஈடு கட்டுகிற மாதிரி நாம ஒருக்கணம் கூடப் பிரியாம இருப்போம்" — சற்றே உணர்ச்சிவசப்பட்டுப் போனார் மோகன் குமார்.

ஆனால் இளமைத் துடிப்பும் மாறாத சுறுசுறுப்பும் ததும்ப இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப் போனவர் நான்கு வருடங்கள் கழித்து இந்தியாவுக்குத்திரும்பியபோதுபெயரளவில் உயிர் மட்டுமே உடம்பில் ஒட்டிக் கொண்டிருக்க 'கோமா' நிலையில் இருந்தார்!

* * * * *


சென்னை மாநிலக் கல்லூரியில் பி. எஸ்.ஸி. விலங்கியல் படித்துவிட்டுச் சென்னையிலேயே எம். பி. பி. எஸ்.ஸுக்கு முயற்சி செய்து, ஆந்திராவைச் சேர்ந்தவர் என்பதால் இடம் கிடைக்காமல் போக, விசாகப்பட்டினத்தில் மருத்துவம் பயின்று, ஆர்தோபீடிக்ஸ் எனப்படும் எலும்பு முறிவுச் சிகிச்சைத் துறையில் விசேஷப் பயிற்சி பெற்று, ஆந்திர அரசின்கீழ் அத்துறையில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார் மோகன் குமார்.

இதற்கிடையே சாவித்ரி அவரது வாழ்க்கையின் ஓர் அம்சமாக வந்து சேர்ந்தார்.

சில பேப்பர் மில்களுக்கு உரிமையாளரான ஆந்திர எம். எல். ஏ. ஒருவரின் மகள் சாவித்ரி. செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தின் அருமைக் குழந்தை. மோகன் குமாரின் தந்தை டாக்டர் கே. வி. சுவாமி சென்னைக்குக் குடியேறி சென்னைவாசியாகிவிட்ட ஆந்திரர். அவரும் பொது வாழ்வில் ஈடுபட்டவர். கவுன்சிலர் பதவி வகித்தவர். இரண்டு குடும்பங்களும் இணைவது இயல்பான விஷயமாக இருந்தது.

திருமணமாகி ஏழு வருடங்கள் கழித்து மோகன் குமார் இங்கிலாந்திலுள்ள லிவர்பூல் இன்ஃபர்மரியில் எம். சி. எச். பட்டப் படிப்பை மேற்கொண்டார். சாதாரணமாக இப்பட்டப்படிப்புக்குள் நுழைய எஃப். ஆர். சி. எஸ். பட்டத்தை முதலில் பெற வேண்டும். ஆனால் மோகன் குமாரின் தேர்ச்சியையும் அனுபவத்தையும் கருதி அவருக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

எம். சி. எச். சுக்குப் படித்துக் கொண்டே லிவர்பூல் இன்ஃபர்மரியில் பணியாற்றி வந்தார் மோகன் குமார். பல சிக்கலான ஆபரேஷன்களைச் செய்யக் கற்றுக் கொண்டார். அப்படி ஒரு எமெர்ஜென்ஸி ஆபரேஷனைச் செய்ய ஒருநாள் நள்ளிரவில் அவரை அழைத்தார்கள். ஆபரேஷனை வெற்றிகரமாக முடித்துவிட்டு அதிகாலையில் தம் இருப்பிடத்திற்குக் காரில் திரும்புகையில்தான் அந்தக் கோர விபத்து நடந்தது. பக்கத்தில் ஒரு சக டாக்டர் அமர்ந்திருக்கக் காரை மோகன் குமார் ஓட்டி வந்தார்.



• அருகில், வாக்கருடன் டாக்டர் மோகன் குமார்.

என்ன நேர்ந்தது, எப்படி நேர்ந்தது என்று புரிவதற்குள் — கண்ணிமைக்கும் நேரத்தில் — விபத்து நேர்ந்துவிட்டது. தலத்திலேயே நினைவிழந்துவிட்ட மோகன் குமாருக்குக் காரின் 'ஸ்டியரிங் வீல்' முகவாய்க் கட்டையில் வந்து தாக்கியது மட்டுமே தெரியும்... அவர் ஸேஃப்டி பெல்ட் அணிந்திருந்தால் அந்த விபத்தின் விளைவுகள் இவ்வளவு பயங்கரமாக இல்லாமல் போயிருக்கலாம். காரில் அவருடன் வந்த சக பயணி உடம்பில் துளிக் காயம் இல்லாமல் தப்பினார். அவர் ஸேஃப்டி பெல்ட் அணிந்திருந்தார்!

இங்கிலாந்தின் மிகச் சிறந்த டாக்டர்கள் முயன்றும் கூட மோகன் குமாருக்கு நினைவு திரும்பச் செய்ய முடியவில்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு 'கோமா' நிலையிலேயே இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். எம். சி. எச். பரீட்சைகள் சில எழுத வேண்டியது பாக்கியிருந்ததால் அவரது லட்சியம் நிறைவேறாமலேயே போயிற்று.

சென்னையில் ஜி. எச். சில் சேர்க்கப்பட்டு நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தியின் மேற்பார்வையில் சிகிச்சை பெற்று வந்தார் டாக்டர் மோகன் குமார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவருக்கு மெதுவாக நினைவு திரும்பியது. ஆனால், அவரால் முன்னைப் போல் ஒரு டாக்டரின் சுறுசுறுப்பான வாழ்க்கையை வாழ முடியாவிட்டாலும், ஒரு சராசரி மனிதனின் சாதாரண வாழ்க்கையைக் கூட வாழ முடியாது என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. மூளைக்கு ஆணையிடும் மோட்டர் நெர்வ்ஸ் என்ற நரம்புகள் விபரீதமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இதனால் டாக்டர் மோகன் குமாரால் நடக்க முடியவில்லை, பேச இயலவில்லை, கைகளை உபயோகிக்க முடியவில்லை. ஆனால் அவருடைய உணர்ச்சிகள் மட்டும் ஒரு சராசரி மனிதனுக்குரியவையாகத் தொடர்ந்து இருந்து வந்தன.

நினைவு திரும்பியபோது அவர் மனத்தில் தோன்றிய உணர்ச்சிகளின் கலவைதான் எத்தகையது! முதலில் ஆச்சரியம்; பிறகு தனக்கு என்ன நேர்ந்தது என்று புரியாத குழப்பம்; அதைப் பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள தனக்குப் பேசும் ஆற்றல் இல்லை என்பதை அவர் உணர்ந்ததும் ஏற்பட்ட சொல்லொணு அதிர்ச்சி, கை, கால்கள் விளங்காமல் போய், பாத்ரூமுக்குப் போய்வரக் கூட தனக்குப் பிறர் உதவி தேவைப்படுகிறது என்ற பயங்கர உண்மை புரிந்ததும் ஏற்பட்ட அவமானம், துக்கம்... இத்தனை உணர்ச்சிகளையும் தாங்கிக் கொண்டு அவர் இதயம் வெடித்து விடாமல் இருந்தது!



மகளின் துணையுடன் மிக மெதுவாக நடக்க முடிகிறது.

தன்னைச் சுற்றி நின்ற கூட்டத்தைத் துழாவிய அவர் கண்களில் நம்பிக்கையின் கீற்று நிழலாடியது... 'சாவித்ரி! சாவித்ரி! — சுகதுக்கங்களிலும், இன்ப துன்பங்களிலும் இணை பிரியாமல் இருப்போம் என்று மந்திரம் ஓதி அக்கினி சாட்சியாகக் கல்யாணம் செய்து கொண்டோமே! இன்று எவ்வளவு பெரிய துக்கத்தை, சுமையை உன்னேடு பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது! எங்கே இருக்கிறாய் சாவித்ரி? நீ ஏன் என் அருகில் வந்து எனக்குச் சமாதானம் சொல்ல மாட்டேன் என்கிறாய்?'

மோகன் குமாரின் கண்களில் நிழலாடிய நம்பிக்கைக் கீற்று அல்பாயுசில் அணைந்து போயிற்று. சாவித்ரி அவர் துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராயில்லை; அவர் சுமைகளைத் தோள் கொடுத்துத் தாங்கிக் கொள்ள விரும்பவில்லை. குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு, அப்பாவின் செல்வமும் செல்வாக்கும் தந்த பாதுகாப்பைத் தேடி ஆந்திராவுக்குப் போய்விட்டிருந்தார். போனவர் பிறகு திரும்பவேயில்லை.

* * * * *

'உபயோகமற்ற ஜடப் பொருளாய், அப்பாவுக்குச் சுமையாய் இருப்பதில் என்ன பயன்? இப்படி ஒரு வாழ்க்கை வாழ்வதை விடச் சாவதே மேல்!' வெகு சீக்கிரமே மோகன் குமார் இந்த ரீதியில் சிந்திக்க ஆரம்பித்தார். விரக்தியின் விளிம்பைத் தொட்டுவிட்ட அவரை மெல்லக் கைபிடித்து வாழ்க்கை வட்டத்துக்குள் திருப்பி அழைத்து வந்தவர் அவர் அன்புத் தந்தைதான். நண்பனுக்கு நண்பனுகவும்; மகனுக்குத் தந்தையாகவும், நோயாளிக்கு நல்ல நர்ஸாகவும் இத்தனையுமாக இருந்தார் டாக்டர் கே. வி. சுவாமி. தமது மகன் இனி சுயமாக, ஒரு துணையில்லாமல் வாழ்க்கை நடத்த முடியாது என்ற கசப்பான உண்மையை உணர்ந்து, அதனை அவனுக்கும் உணர்த்தி, ஒரு சிறந்த துணையை அவனுக்குத் தேடித் தந்து அவன் தேவைகளைக் கவனித்துக் கொள்ள அந்த நபரைப் பழக்கினார்.

அருணு தனது பதின்மூன்றாவது வயதில் டாக்டர் சுவாமியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மோகன் குமார் அப்போது படுத்த படுக்கையாக இருந்தார். அவருக்குப் பணிவிடைகள் — செய்வதில் டாக்டர் சுவாமி...

உதவ ஆரம்பித்தாள் அருணா.

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, ஒருவேளை சாப்பாட்டுக்குக்கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தந்தையற்ற இளம் பெண்ணுக்கு, வந்த இடத்தில் பசியாறச் சாப்பிட முடிந்தது. அருணாவின் அம்மாவுக்கு டாக்டர் சுவாமியின் குடும்பத்துடன் பரிச்சயம் இருந்ததால், "நம்பிக்கையான இடத்தில் நம் குழந்தை பசிக் கொடுமை அறியாமல் இருக்கிறாள்" என்ற திருப்தி. இவை எல்லாவற்றையும் விட முக்கியம் — அருணாவின் இளம் உள்ளத்தில் மனிதாபிமானம் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சின்ன வயதிலேயே கஷ்டங்களை அனுபவித்ததால் அடுத்தவரின் துன்பங்களை உணர்ந்து அரவணைத்துப் போகும் தன்மை இருந்தது; இயல்பாகவே அமைந்த பெண்மையின் மென்மை இருந்தது. அருணாவுக்குள் இருந்த் இந்த இனியகுணசித்திரக்கலவை டாக்டர் மோகன் குமாரின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது.

முதலில் மோகன் குமாரைக் கவனித்துக் கொள்வதில் டாக்டர் சுவாமிக்கு உதவி வந்த அருணா, மெல்ல மெல்லத் தானே அவரிடமிருந்து முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாள். மோகன் குமாருக்குப் பணிவிடை செய்யும் போது ஒரு மகளைப் போலவும், அவருக்குச் சமைத்து சாப்பாடு ஊட்டுகையில் ஒரு தாயாகவும், அவர் மனம் தளர்ந்த வேளைகளில் தைரியம் சொல்லத் தோழியாகவும் மாறி மாறிச் செயல்பட்டு அவர் வாழ்க்கையோடு தன் வாழ்க்கையைப் பின்னிப் பிணைத்துக் கொண்டாள். அவர்கள் வீட்டிலேயே இளம் வயது முதல் வாழ்ந்து வந்த உறவுப் பையன் வாசு, கடை கண்ணிக்குப் போவது போன்ற வேலைகளைச் செய்யலானான். அருணாவும், வாசுவும் இணைந்து மோகன் குமார் கூடியவரை தம் இயலாமையை உணராதவாறு கவனித்துக் கொண்டனர்.

படுக்கையை விட்டு அகல முடியாமல் கிடந்த மோகன் குமாரை பூனா ராணுவ ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனார் டாக்டர் சுவாமி. அங்கு மோகன் குமார் மெல்ல ஊன்றுகோல்கள் கொண்டு நடக்கப் பயிற்சி பெற்ற போதும், ஒரு குழந்தையைப் போல மெதுவாக எழுதக் கற்றுக் கொண்ட போதும், உதட்டசைவால் முக்கியமான விஷயங்களை உணர்த்தக் கற்றுக் கொண்ட போதும், உறுதுணையாக இருந்தாள் அருணா. ஏழு வருடங்களுக்கு பூனாவில் தங்கி அந்த ராணுவ மருத்துவ மனையில் பயிற்சிகள் பெற்றார் மோகன் குமார். அருணாவிடமும் வாசுவிடமும் மகனை ஒப்புவித்துவிட்டு இரண்டு வருடங்களுக்கு முன் காலமானார் டாக்டர் சுவாமி.


மோகன் குமாருக்கு உறுதுணையாக இருந்த அருணா, தனக்கென்று ஒரு துணையைத் தேடிக் கொள்ள நினைக்காவிட்டாலும் பூனா

• அருணாவின் உதவியோடு நோயாளியைப் பரிசோதிக்கிறார்.



க்ளினிக் ஸ்பெஷல் ஷாம்பூ பொடுகினை எதிர்த்து அகற்றுகிறது. எனவே நீங்கள் அனைவரையும் கவர முடிகிறது.





HLL-2607

பொடுகின் காரணமாக எவரையும் கவர முடியாமற் போனால், ஒரு ஸ்பெஷலிஸ்ட் ஷாம்பூவைப் பயன் படுத்தும் வேளை வந்துவிட்டது என்று பொருள். க்ளினிக் ஸ்பெஷல் ஷாம்பூ. இதன் மென்மை நுரை கேசத்தைக் கழுவுகிறது; அடங்கியுள்ள சிறப்புப் பொருள் பொடுகினைக் கட்டுப்படுத்துகிறது. உங்கள் கேசம் அழகு பெறுகிறது. சுத்தமாகவும், ஆரோக்கிய மாகவும், அரிப்பற்றும் திகழ்கிறது.

க்ளினிக் ஸ்பெஷல்

ஷாம்பூ.

பொடுகற்ற, சுத்தமான, ஆரோக்கியமிக்க கேசத்திற்கு.

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமிக்க தயாரிப்பு.

முன்பெல்லாம் என் இரண்டரை வயது பையனை சலூனுக்கு அழைத்துச் சென்றால் அழாதது மட்டுமல்ல, உற்சாகமாகக் கூட முடி வெட்டிக் கொண்டு விடுவான். சென்ற வாரம் சலூனுக்குச் சென்றபோது அங்கு ஒரு சின்னப் பெண்ணுக்கு 'பாப்' வெட்டிக் கொண்டிருந்தார் சலூன்காரர். ஒரு பக்கம் பெண்ணின் தகப்பனாரும், மறுபக்கம் அவளின் சித்தப்பாவும் பிடித்துக்கொண்டிருக்கக் குழந்தையோ, 'வீல், வீல்' என்று கத்திக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த என் பையனும் அழ ஆரம்பித்து விட்டான். என்ன சமாதானம் செய்தும் அவன் அடங்காமல் உடனே வெளியே போகலாம் என்று அடம் பிடிக்க அன்று அவனுக்கு முடி வெட்டிக் கொள்ளாமலேயே நான் திரும்ப நேரிட்டது. குழந்தைகளின் மனோபாவம் எப்படியெல்லாம் இருக்கிறது என வியந்து போனேன்.

— சே. பகவான்.



வில் இருந்தபோது அவன் மனத்தினுள் பூ மலர்கிற மாதிரி காதல் மலர்ந்துவிட்டது. மோகன் குமாருக்குச் சிகிச்சை அளித்து வந்த ராம்நிவாஸ் தலால் என்ற 'ஃபிஸியோ தெரபிஸ்ட்,' ஹரியானாவைச் சேர்ந்தவர். ஜாதி, இன, மொழி பேதங்களைக் கடந்து அருணாவும் தலாலும் உள்ளத்தால் ஒன்றிவிட்டனர். அதுவரை 'தன் திருமணம், தன் வாழ்க்கை' என்ற ரீதியில் சிந்தித்திராத அருணாவுக்குத் தர்ம சங்கடமாகிப் போய் விட்டது.

டாக்டர் மோகன் குமார் இந்த தர்ம சங்கடங்களையெல்லாம் அனுமதிப்பதாக இல்லை. ராம் நிவாஸ் தலாலை வரவழைத்தார். அருணாவுக்கும் அவருக்கும் சமீபத்தில் தம் பொறுப்பிலேயே சிறப்பாக, ஊரறிய கல்யாணம் செய்து வைத்தார்.

திருமணம் முடிந்து இருபது நாட்கள் அருணாவுடன் இருந்துவிட்டு தலால் பிரியா விடைபெற்றுத் திரும்பினார். அரசாங்க வேலையில் இருக்கும் தலால் சென்னைக்கு மாற்றல் பெற்று வர முயன்று வருகிறார். ஆகஸ்டு முதல் வாரத்தில் அருணா புக்ககம் புறப்படுகிறாள். மோகன் குமாரை இரவு பகலாகக் கவனித்துக் கொண்டு, அவருடனேயே இருக்க வேறு ஓர் அன்பான துணை கிடைக்குமா...?

அதிர்ஷ்ட வசமாக, இங்கிலாந்தில் நான்கு வருடம் தங்கியிருந்த டாக்டர் மோகன் குமாருக்கு அந்நாட்டின் நேஷனல் ஹெல்த் ஸ்கீமின் கீழ் விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய பென்ஷன் கிடைத்து வருகிறது. கடந்த சில மாதங்களாக ஆந்திர மஹிள சபா ஆர்தோபீடிக் சென்டரின் அவுட் பேஷண்ட் பகுதியில் கௌரவப் பணி ஆற்றியும் வருகிறார் அவர்.

அங்கு அவரைச் சந்தித்த போது, லாரி விபத்தில் காலில் அடிபட்டுக்கொண்ட டெலிபோன் இலாகா லைன்ஸ்மன் ஒருவர், ''இனி என்னால் போஸ்டு ஏற முடியுமா டாக்டர்?'' என்று கவலையோடு கேட்டுக் கொண்டிருக்க, அந்தச் சிப்பந்திக்குத் தம் புன்சிரிப்பால் தைரியமூட்டிக் கொண்டிருந்தார். அருணா, டாக்டரின் கையைத் தூக்கி மெல்ல அந்த லைன்ஸ்மனின் காலில் அடிபட்ட இடத்தில பொருத்துகிறார். தொடு உணர்ச்சியால் காயத்தை ஆராய்ந்து, நன்றாக ஆறிவிட்டிருப்பதை உணர்ந்து அருணாவைப் பார்க்கிறார் டாக்டர். அருணா அவர் வலது கையை மீண்டும் மெதுவாக நகர்த்தி, பேனாவை விரல்களுக்கிடையே பொருத்த, நிறுத்தி, நிதானமாக ப்ரிஸ்க்ரிப்ஷன் எழுதுகிறார்.

குன்றாதஉற்சாகத்துடன் தம்வாழ்க்கையை நடத்தி வரும் டாக்டர் மோகன் குமாரிடம், ''இப்படி ஒரு பக்குவத்தை அடைய எது உங்களுக்கு உதவியது'' என்று கேட்ட போது அவர் சொன்னார்:

''ஆரம்பத்தில் ரொம்பக் கஷ்டமாகத்தான் இருந்தது. துக்கம், ஆத்திரம், ஏமாற்றம் எல்லாவற்றுக்கும் மேலாகக் கடவுளிடம் அளவில்லாத கோபம் — எல்லாம் ஏற்பட்டன. ஆனால் என் அப்பா சுய பச்சாதாபத்திலிருந்து என்னை விடுவித்து மனிதனாக்கினார்... என்ன செய்வது? கடவுள் ரொம்ப 'பிஸியாக' இருக்கிறார்! அவருக்கு நம்மைக் கவனிக்க நேரமில்லை என்றால் நம்மை நாமே தான் பார்த்துக் கொள்ள வேண்டும்...''

டாக்டர் மோகன் குமார் இப்படிச் சொன்ன போது ஒரு கணம் சோகம் நெஞ்சைப் பிழிந்தது. ஆனால் முகத்தில் பளிச்சென்று படர்ந்த புன்னகையோடு அவர் கடைசியாகச் சொன்னவை அந்தச் சோகத்தை விரட்டி, அவரை எண்ணிப் பெருமை கொள்ள வைத்தன:

''அருணா, வாசு போன்ற உதவியாளர்கள் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அருணாவுக்குப் பதில் அவளைப் போலவே வேறு நல்ல மனம் படைத்த பெண் கிடைக்க வேண்டும்... அப்போது தான் என் போன்ற ஊனமுற்றோர்களுக்கெனப் பிரத்தியேகமாக ஒரு மையம் ஆரம்பிக்க வேண்டும் என்ற எனது ஆசையும் திட்டமும் நிறைவேறும்.''

பேட்டி, கட்டுரை வடிவம்: **சீதா ரவி**

புகைப்படங்கள்: **உத்ரா**
மனோ

புதிய
மேம்படுத்தப்பட்ட

கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்

சில பெண்களுக்கு இது தேவை.


இது மிக நீளமான நேப்கின்


இது மிக அகலமான நேப்கின்


இது மிக தடிப்பான நேப்கின்

கூடுதலான பெரிய சைஸிலே தாமுள்ள நேப்கினின் சுகமும் பாதுகாப்பும் தேவைப்படும் பெண்களுக்கு—இதோ! புதிய கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்.

நீளத்தினையும், அகலத்தினையும், தடிப்புத் தன்மையினையும் கூடுதலாகவே பெற்றிருக்கும் இந்த நேப்கினின் நூலிழைகள் உறிஞ்சும் திறன் அதிகமாகப் பெற்று மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது.


ஒண்டர்ராப் உறைகள் ஈரத்தை உள் அடுக்கிற்குள் செலுத்துவதால் ஈரம் சீராக உறிஞ்சப்பட்டு உலர்வினையும் சுகத்தினையும் உங்களுக்குத் தருகிறது. நாப்கினின் இந்த சிறப்பான டாப்-நுனிகள் சரியாகப் பொருந்த உதவுவதோடு கச்சிதமாகவும் இருக்கிறது.

இப்போது கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜில் ஒரு சிறப்பான (ஈரம் கசியாத) 3 வழி நீலநிற பிளாஸ்டிக்-ஷீல்டு—அடிப்புறம் அணைப்புக்கொடுத்து பக்கங்களோடு மேற்புறம் வரை பரவியமைகிறது. படத்தில் நீங்கள் காண்பதுபோல, இவ்வகையில் உங்களுக்கு அதிகப் பாதுகாப்பு, அதிக பத்திரத் தன்மை.

புதிய கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்—முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு.

கூடுதலான பெரிய சைஸில்.

தேர்ந்தெடுத்த நகரங்களில் மட்டுமே கிடைக்கிறது.





TM

OBA

தவிரவும் கிடைப்பவை: கேர்:ப்ரீ ரெகுலர் 10'கள், 20'கள், 30'கள் அடங்கிய பேக்குகள்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

அலுவலகத்திலிருந்து திரும்பிய மாலா, இரவு சாப்பாட்டை முடித்துவிட்டுக் கதைப் புத்தகமும், டிரான்ஸிஸ்டரும் எடுத்துக் கொண்டு, தன் அறைக்குப் போக யத்தனித்த போது, அவள் தந்தை கணேசன் அவளை அழைத்தார்.

''இப்படி உட்கார்! உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது!'' என்றார்.

''என்ன புதிதாகப் பேசப் போகிறீர்கள்? நல்லதாக ஒரு வரன் வந்திருக்கிறது என்று தானே ....? எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம்.''

''அதுதான் உன் பிடிவாதம் தெரிந்த விஷயம் ஆயிற்றே! உன்னிடம் அதைப் பற்றிப்



ஜனனி

பேசி நான் மூக்குடைபடப் போவதில்லை. கலாவைப் பெண் கேட்கிறார்கள்...''

''ரொம்ப சந்தோஷம்!'' என்றாள் மாலா சுருக்கமாக.

''அக்காவிற்கு ஏன் கல்யாணம் ஆகவில்லை என்று கேட்டால்....?''

''கேட்கும்படி வைத்துக் கொள்ளாதீர்கள். நீங்களாகவே சொல்லி விடுங்கள்.''

''வருகிற வெள்ளிக்கிழமை சாயங்காலம் அவர்கள் பெண் பார்க்க வருவதாகச் சொல்லிப் போயிருக்கிறார்கள். நீயும் ஆபீஸிற்கு லீவு போட்டு விடு'' என்றார் கணேசன்.

''நான் எதற்கு?''

''கட்டாயம் வேண்டும். உனக்கு ஒரு குறையும் இல்லை. ஒரு ஊனமும் இல்லை. உன் பிடிவாதத்தால்தான் கல்யாணம் நடக்கவில்லை என்று தெரிய வேண்டாமா?'' என கணேசன் இடக்காகக் கேட்டார்.

அவள் 'ப்ச்சு' கொட்டிவிட்டுப் புத்தகத்தைக் கையில் எடுத்தபடி மாடி ஏறினாள்.

தங்கையைப் பெண் பார்க்க வருகிறார்கள்

மாலாவிற்குக் கல்யாணத்தில் நாட்டம் இல்லாமல் இல்லை. அவள் மனத்தில் பத்ரி குடிகொண்டு இரண்டு வருஷங்கள் ஆகியிருக்கும். அவன் ஆபீஸராக வேண்டும்; அவனுக்கு ஒரு தங்கை—கல்யாணத்திற்கு நிற்கிறாள். இந்த இரண்டும் நிறைவேறிவிட்டால் அப்புறம் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தலாம் என்று இருந்தார்கள் பத்ரியும் மாலாவும். அதனால்தான் மாலா 'திருமணம் வேண்டாம்' எனத் தட்டிக் கழித்துக் கொண்டு இருந்தாள்.

அடுத்த இரண்டு நாட்கள் மாலாவிற்குத் தன் தங்கை கலாவைப் பரிகசிப்பதிலேயே சரியாகப் போயிற்று. கலா வெட்கப்படவும், மாலாவின் கேலி அதிகமாகியது.

வெள்ளிக்கிழமை மாலை பையனைப் பெற்றவர்கள், உடன் பிறந்தவர்கள் என்று பையனைத் தவிர மற்ற எல்லோரும் பெண் பார்க்க வந்தார்கள். கலாவை அவர்களுக்குப் பிடித்துப் போயிற்று.

"எங்கள் பையன் தங்கக் கம்பி. எங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசமாட்டான். முகூர்த்தத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். அடுத்த வாரம் அவன் ஊரிலிருந்து வந்தவுடன் ஒருநாள் வரச் சொல்கிறோம்!" என உடன்டியாகக் கூறினார்கள்.

போகுமுன், "இந்தாருங்கள்....பையனின் போட்டோ. உங்கள் பெண்ணிற்குப் பிடித்திருக்கிறதா என்று கேட்டு வையுங்கள்" எனச் சொல்லிவிட்டுப் போனார் பெரியவர்.

அப்பாவிடமிருந்து படத்தை அசுவாரசியமாக வாங்கிப் பார்த்த மாலா திடுக்கிட்டுப் போனாள். அதுபத்ரியின்புகைப்படம்!புகைப்படம் ஒவ்வொருவர் கையாக மாறியது.

"நல்ல உயரம்!" என்றான் அண்ணா.

"நம்ம கலாவிற்கு நல்ல பொருத்தம்! கை நிறைய சம்பளம்.... கலா கொடுத்து வைத்தவள். நீ என்ன சொல்கிறாய், மாலா?" என்று கேட்டாள் அம்மா.

"எனக்குத் தலையை வலிக்கிறது!" என்று சொன்ன மாலா மாடியில் தன்னறையின் தனிமையை நாடிப் போனாள். மனம் கிடந்து குழம்பியது. 'இப்போது என்ன செய்வது?'

மாடிக்கு யாரோ ஏறி வரும் சப்தம் கேட்டது.

கையில் காப்பியுடன் வந்தாள் கலா. "இதைக் குடி அக்கா.... தலைவலி சரியாகப் போய்விடும்" என்றவள், "அவர் நன்றாக இருக்கிறார், இல்லையா?" எனக்கேட்டுவிட்டு நாணினாள்.

அடுத்த இரண்டு நாட்களுக்கு மாலாவால் பத்ரியைச் சந்திக்க முடியவில்லை. மூன்றாம் நாள் அவன் ரொம்பவும் சோர்ந்து போய் வந்தான். தன் தங்கையின் கல்யாணத்திற்குக் காத்திருக்காமல், தன் திருமணத்தை நடத்தத் தன் பெற்றோர் உத்தேசித்திருப்பதாகச் சொன்னான். பெண்ணின் போட்டோ கூடப் பார்த்ததாகக் கூறினான்.

"பெண் எப்படியிருக்கிறாள்?" எனக் கேட்டாள் மாலா.

"தப்பு சொல்ல முடியாது."

"அப்போ, 'சரி' என்று தலை ஆட்டப் போகிறீர்கள்?"

"உன்னைப் பற்றிப் பேசவே முடியவில்லை. 'என் பிள்ளை ராமனைப் போல' எனப் பெருமைப்படுகிறார் என் அப்பா. 'நான் போட்ட கோட்டைத் தாண்ட மாட்டான்' என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்கிறார்."

"அதற்காக....?"

"அவர்கள் திருப்திக்காக நாளைக்குப் பெண் பார்க்கப் போகிறேன்."

"அப்புறம்?"

"பெண் பிடிக்கவில்லை என்று சொல்லி விடப் போகிறேன்."

மாலாவிற்கு ஒரு யோசனை உதித்தது.

"அந்த வீட்டில் பெண்ணின் அக்கா ஒருத்தி இருக்கிறாள். அவளை வேண்டுமானால் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொல்லுங்கள்!"

"இது என்ன கூத்து....? முன்னேபின்னே பார்க்காத அந்தப் பெண்ணை....."

"அந்தப் பெண் வேறு யாருமில்லை, நான்தான்!" என்று மாலா நடந்ததையெல்லாம் விவரித்தாள்.

மறுநாள் பையன் வந்து கலாவைப் பெண் பார்க்கப் போவதை மாலாவிடம் யாரும் சொல்லவில்லை. மாலாவே தூண்டித் துருவித் தெரிந்து கொண்ட பிறகு, தான் லீவு போடுவதாகச் சொன்னாள்.

"எதற்கு அம்மா உனக்கு வீண் சிரமம்? அன்றைக்கே ஒரு நாள் லீவு போட்டுவிட்டாய்?" என அவள் தந்தை தடுத்தும் கேளாமல் மாலா வீட்டில் தங்கினாள். தன்னைப் பிரமாதமாக அலங்கரித்துக் கொண்டாள்.

மாலையில் பத்ரி தன் பெற்றோருடன்

காரில் வந்திறங்கினான்.

கலாவை விட்டகலாமல் மாலா உடனிருந்தாள். அவள் யாரும் கவனிக்காதபோது பத்ரிக்கு ஜாடை காட்டினாள்.

''என்ன புறப்படலாமா?'' என்று எழுந்தார் பத்ரியின் அப்பா.

''அப்பா!'' என இழுத்தான் பத்ரி.

''தயக்கமில்லாமல் சொல்லேண்டா!'' என்றார் அவர். பத்ரி அவர் காதுகளை மெதுவாகக் கடித்தான்.

தேள் கொட்டிவிட்டாற்போல் துடித்தார் அவர். ''சே! சே! இதெல்லாம் ரொம்பத் தப்பு.... நான் கேட்க மாட்டேன்'' என்றார்.

''என்ன....?'' என்று விசாரித்தாள் பத்ரியின் தாய்.

''அதை எப்படிச் சொல்வது? உன் பிள்ளைக்குப் பெண்ணைவிடப் பெண்ணின் அக்காவைப் பிடித்திருக்கிறதாம்!''

''இது என்னங்க அக்கிரமம்! ஒரு பெண்ணைப் பார்க்க வந்து, இன்னொரு பெண்ணைக் கேட்கிறதாவது? சுத்த அநாகரீகம். என் பிள்ளை ஏதோ தப்பா கேட்டுவிட்டான். நீங்க வித்தியாசமா எடுத்துக்காதீங்க...'' எனச் சமாதானம் சொல்ல முனைந்தாள் பத்ரியின் தாய்.

பத்ரி என்ன பேசுவது எனத் தெரியாமல் திருதிருவென்று விழித்தான்.

கலா கலவரத்துடன் ''அக்கா'' என மாலாவை அணைத்துக் கொண்டாள். மாலாவும் என்ன செய்வது எனப் புரியாமல் பதறினாள்.

கணேசன் தன் மௌனத்தைக் கலைத்தார்.

''ஸார்....!நான்தான் கொடுத்துவைக்காதவன். உங்கள் வீட்டு சம்பந்தம் சாதாரணமாகக் கிடைக்கக் கூடியதா? இப்போதுகூட என் மூத்த பெண் மாலாவைக் கல்யாணம் செய்து கொடுக்கத் தயார். ஆனால் அவள் கல்யாணம் வேண்டாம் எனப் பிடிவாதமாக இருக்கிறாளே.... என்ன செய்யட்டும்?''

மாலா திடுக்கிட்டு நிமிர்ந்தாள். ''அப்பா!'' என அழைத்தாள்.

''உன் தீர்மானத்தைத் தைரியமாகச் சொல் அம்மா! உன் வாழ்க்கை நீயே தீர்மானிக்க வேண்டிய ஒன்று....'' என்றார் கணேசன்.

''இல்லே.... அப்பா.... வந்து.... வந்து...''

''என்னம்மா, இந்த வெட்கம், நாணம், எல்லாம் புதிதாக இருக்கிறது. தைரியமாகச் சொல்லேன்.''

''எனக்கு இவரைப் பிடித்....'' எனக் கூறுவதற்குள் மாலாவின் முகம் சிவந்தது. தன் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

கணேசன் சிரித்தார். மாலாவின் தாய் சேர்ந்து கொண்டாள். பத்ரியின் அம்மாவும் அப்பாவும்கூடக் குலுங்கக் குலுங்க நகைத்தார்கள்.

கலா மட்டும் ஸ்தம்பித்தபடி இருந்தாள்.

''இந்த ஒரு வார்த்தையை உன் வாயிலிருந்து கொண்டு வர இத்தனை நாடகம். பத்ரியின் அப்பாவும்நானும் ஒன்றாகப் படித்தவர்கள். உங்கள் இருவருடைய நெருக்கத்தை கவனித்து அதைப் பற்றி அவர்தான் என்னிடம் முதலில் சொன்னார். ஆபீஸிற்குப் போய் வேலை செய்யும் ஒரு பெண்ணிற்குத் தன் சொந்த அப்பா அம்மாவிடம் சொல்வதற்கு என்ன தயக்கம்?'' எனக கேட்டார் கணேசன்.

மாலாவிற்குக் கலாவை நினைத்தால்தான் பாவமாக இருந்தது. அவள் எத்தனை மனக் கோட்டை கட்டியிருப்பாள்? தன்னை மன்னிக்கும்படி கலாவிடம் விழிகளால் கெஞ்சினாள் மாலா.

இதைப் புரிந்து கொண்ட பத்ரியின் தந்தை, ''இந்த யோசனையைச் சொன்னதே கலாதான் மாலா!'' என்றார்.

ஓங்கிய கையுடன் துரத்திய மாலாவிடம் அகப்படாமல் வேகமாக நழுவினாள் கலா.



''வாளைவிட பேனா வலிமையுள்ளது'' என்று சொல்கிறார்கள். ஆனால், ''பேனாவைக் காப்பாற்ற வாள் தேவை'' என்கிறார் ஒரு பத்திரிகை ஆசிரியர். பெயர்: முன்னாலால். வயது: ஐம்பத்தேழு. மத்திய பிரதேச மாநிலத்தில் பண்டல்கண்ட் நகரிலிருந்து வெளியாகும் 'இக்தர்ஷன்' என்ற இந்தி நாளிதழின் ஆசிரியர். மார்பின் குறுக்கே எப்போதும் ஒரு தோல் பட்டை அணிந்திருக்கிறார். அதில் ஒரு கைத்துப்பாக்கியும் குண்டுகளும் வைத்திருக்கிறார்! ''நான் சில அயோக்கியர்களின் அக்கிரமங்களை என் பத்திரிகையில் எழுதுகிறேன். அவர்களிடமிருந்து என்னைப் பாதுகாத்துக் கொள்ளத்தான் இந்தத் துப்பாக்கி! இந்தத் துப்பாக்கியை உபயோகிக்க இது வரை எனக்குச் சந்தர்ப்பம் வரவில்லை! இனிமேலும் வரக்கூடாது என்று கடவுளை வேண்டிக் கொள்கிறேன்'' என்கிறார் முன்னாலால்!

ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்

— அனிதா ராமச்சந்திரன்.


வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !
தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.
நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் சுயமான பார்முலா
செயல்படுவது எப்படி என்றும்...
உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்
பாக்டீரியாக்கள் வளருகின்றன.
கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழமாக ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும், சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.
முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.
ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
Colgate
Colgate
B84 55 Tam
கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !



சருக்கம் 16

பொன்வேய்ந்த திருவிழா!

தில்லைப் பேரம்பலம் பொன்வேய்ந்து ஒளி வீசுகிறது. வட்டச் சூரியனின் ஆயிர மாயிரம் கிரணங்கள் அதன்மீது பட்டுத் தெறித்து, எட்டுத் திசைக்கும் 'எங்கள் பெருமை பாரீர்! தங்கத் தமிழ்ப் பெருமை காணீர்' என்று எடுத்தியம்புகின்றன.

நயம்பட அமைந்த நான்கு பெரு வீதி களில் மூலைக்கு மூலை இருக்கும் மண்டபங் கள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழர் இரு கண்களாய்ப் போற்றுவித்த மொழிகளாம் தமிழும் சமஸ்கிருதமும் தேவராப் பாடல்களாய் நாவார மணக்கின் றன; திருமந்திரங்களாகி தேவ சொரூபம் காண்கின்றன.

எங்கு நோக்கினும் பந்தல்கள், செல்வம் படைத்தவர்கள் தாகத்துக்கு மோரும், பசிக்கு அன்னமும் அளித்துப் புண்ணியத்தை மகிழ்விக்கிறார்கள். தமிழகத்தின் பலவேறு திசைகளிலிருந்து இந்த வைபவத்தைக் காணச் சைவப் பெருமக்களும், சைவமும் வைணவமும் எங்களின் இரு கண்கள்தாம் என்று பொதுவில் பூரணம் காணும் பொது மக்களும் குவிந்து இருக்கிறார்கள்.

நேற்றே சோழர்க் குடும்பம் தில்லைக்கு வருகை தந்துவிட்டது.

தில்லை மூவாயிரவரான தீட்சிதப் பெரு மக்கள் மூச்சுவிட நேரமில்லாமல் முழுமை யாக ஆக்கப் பணிகளைக் கவனிக்கிறார்கள்.

சேக்கிழார் எப்போதும் தங்கும் மாளிகை யில் தங்கி, கோயிலுக்குப் புறப்பட ஆயத்த மாகிக் கொண்டிருக்கிறார். ஜோதியும் அங் கேயே தங்கியது சிலரைச் சிலவிதமாகச் சிந் திக்கச் செய்தது. அது குறித்துச் சேக்கிழார் கவலை கொள்ளவில்லை. அவரது கவலையெல் லாம் ஒட்டக்கூத்தர் வர மறுத்துவிட்டது; கபாலீச்சுரன் வாராமல் போனது.

ஜோதியை வல்லரசி வெகுவாக அலங் கரிக்கிறாள்.

''ஜோதி புறப்படலாமா?''

''சித்தம் சுவாமி!''

இருவரும் பல்லக்கில் அமர்ந்து கிழக்கு வாசல் கோபுரம் நாடிச் செல்கிறார்கள்.

கோயிலினுள் யாகசாலை வைபவம் புகை மொழி பேசிக் கொண்டிருக்கிறது. ஓமச் சுள்ளிகள் நெருப்பைப் புனிதமாக்கிக் கொண்டிருக்கின்றன.

மங்கல வாத்தியங்கள் நான்கு கோபுர வாயில்களிலும் வரவேற்பு கூறிக் கொண் டிருக்கின்றன.

மாவேதியர் ஓதும் மந்திரங்கள் மன்னனின் புனிதத்துவத்தைப் போதிக்கின்றன.

எங்கும் சிவோகம், நமசிவாயம், திருச் சிற்றம்பலம்....

பேரம்பலத்துக்கு முன் சோழப் பேரரசின் மாமன்னன் குலோத்துங்கனும், பட்டத்தரசி தியாகவல்லி தேவியும் இரண்டாம் அரசி முக்கோக்கிழானடி தேவியும் சிறுவனான மகன் ராசராசனும் பொன்னாசனமிட்டு அமர்ந்திருக்கிறார்கள்.

பின்னே சேக்கிழாரும், ஜோதியும் ஏனைய அமைச்சர்களும் சேனாதிபதிகளும் அமர்ந் தும் நின்றும் காணப்படுகிறார்கள்!

சற்றைக்கெல்லாம் முரசு முழங்க பூசனை கள் நடைபெறவிருந்தன.

இந்தச் சமயத்தில்தானா அப்படி ஒரு கசப்பான குழப்பம் முகிழ்க்க வேண்டும்? *

வைணவப் பெருமக்கள், தங்கள் மதத் துக்கு ஏதும் செய்யாது சைவத்துக்கு மட்டுமே வாரி வாரி இறைக்கும் சோழ மன்னன்பால் வெறுப்பு கண்டனர். எனவே, நடராசர் பெருமான் சந்நிதிக்கு அணித்தே இருந்த கோவிந்தராசப் பெருமானின் பார்வை சோழ மாமன்னன் குலோத்துங்கன்மீது விழக் கூடாது என்று புரட்சி செய்தனர். அது அவர்கள்வரை ஒரு நியாயமான புரட்சியே என்று சிலர் ஆதரிக்கவும் செய் தனர்.

---

* தமிழக வரலாற்றில் இது ஒரு புரட்சி நிகழ்ச்சி. சோழர் வரலாறு, ஒட்டக்கூத்தர் எழுதியவை, கோயிலொழுகு, திவ்ய சூரி சரிதம், இராமானுசர் கதை முதலிய அனைத்து நூல்களையும் ஆராய்ந்து இதனை எழுதுகிறேன்.

கூத்தம்பலமான நடராசர் சந்நிதியும் சித்திரக் கூடமான திருமால் சந்நிதியும் ஒன்றுக்கொன்று அணித்தே இருந்ததால், நடராசரைச் சேவிக்க வருகிற மக்கள் திருமால் முன்றிலுக்கு வரக்கூடாது என்றால் எப்படிச் சாத்தியமாகும்?

வைணவர்கள் கரங்கோத்துத் தங்கள் பெருமாளைக் காக்கிறார்கள். இதனால் அடிதடியே ஏற்படும் போலிருந்தது.

முதலமைச்சரான சேக்கிழார் இதனைக் கேள்விப்பட்டு மனம் கலங்கி ஓடுகிறார். உரியவர்களிடம்பேசிப்பார்க்கிறார். திருமால் முற்றம் இல்லையேல் மக்கள் எவ்வாறு நின்று நடராச மூர்த்தியைச் சேவிக்க முடியும்?

''நீ ஒரு சைவன்; முதலமைச்சனாகி, மன்னனைக் கெடுக்கிறாய். வந்த வினையே உன்னால்தான்!'' வைணவத் தலைவரின் வார்த்தை நெருப்புகள்.

''பேரம்பலத்துக்குப் பொன்வேய்ந்தது திருமாலுக்கும் சேர்த்துத்தானே?'' என்றார் உடன் ஓடிவந்த வைணவ அமைச்சரான நாலூரரான்.



''நீ ஓர் ஆள்காட்டி! பதவி கிடைக்கவே திருநாமத்தையும் சரியாக இடாதவன்! போய் உங்கள் மன்னன் ராசகேசரி குலோத்துங்கனை வரச் சொல்லுங்கள்! பேரம்பலம் எப்படித் திருமாலுக்குரியதாகும்? ஸ்ரீரங்கத்துக்குப் பொன் வேயச் சொல்லுங்களேன்!''

சைவமும் வைணவமும் சமரசமின்றி சச்சரவில் மூழ்கிய காலம் அது. அதற்குக் காரணம், சில்லுண்டிகளல்ல; பல பெரியவர்களே!

செய்தி சோழ மன்னன் செவிகளுக்கு எட்டுகிறது. ஓ.... சமயம் நோக்கிச் சச்சரவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்....!

ஏதும் களேபரம் நேராவண்ணம் மகா சேனாதிபதி, வீரர்களை ஏவி நிறுவுகிறார்.

''மாமன்னா! நீங்களே வந்து சமாதானம் சொல்லுங்கள்!'' என்று இறைஞ்சுகிறார் இலக்கிய மாப்புருஷர் மாண்புமிகு முதலமைச்சர் சேக்கிழார்.

''சேக்கிழாரே! இதற்கு நான் வரவேண்டுமா? ஒரு முதலமைச்சர் மன்னனுக்கு அடுத்த நிலை என்பது அவர்களுக்குப் புரியாமல் போனதென்ன?''

''ஆயினும் நீங்கள் வந்தால்.....''

''அவர்கள் என்னதான் சொல்லுகிறார்கள்?''

''கோவிந்தராசப் பெருமான் பார்வைக்கு உட்பட்ட சித்திரக்கூட முன்றிலில் எவரையும் அனுமதிக்க முடியாது என்று அடம்பிடிக்கிறார்கள்.''

''அவர்களை என்னிடமே வந்து பேசச் சொல்லுங்கள் முதலமைச்சரே!''

''மறுக்கிறார்களே!''

''காரணம்?''

''மதத் தலைவர் மன்னனைக் காட்டிலும் பெரியவர். எனவே மறுக்கிறார்கள். மேலும் சொல்கிற காரணங்கள்....''

''என்னென்ன? சொல்லுங்கள்.''

''நீங்கள் திருநீற்றுச் சோழன் என்று பகிரங்கமாகச் சைவப் பிரகடனம் செய்து கொண்டிருக்கிறீர்களாம்! தில்லையில் எழுநிலை கோபுரங்கள் எடுப்பித்தீர்களாம்! உமா தேவியார் இமய மலையையே மறக்கும் படியான சிவகாம கோட்டம் கட்டித் தந்து இருக்கிறீர்களாம். சிவகாம சுந்தரி உலா வருவதற்கு பொன்னாலும் மணியாலும் தேர் செய்திருக்கிறீர்களாம்! பொன்னால் கற்பகத் தரு கொடுத்தீர்களாம்! நாற்புறமும் கூடங்களுடன் கூடிய திருக்குளம் அமைத்தீர்களாம்! திருவரங்கத்துக்கு என்ன செய்தார் என்கிறார்கள்!''

இப்போது பட்டத்தரசி தியாகவல்லி தேவி தலையிட்டாள்: ''முதலமைச்சர் பெருமானே! தில்லையம்பலம் வைணவக் கோயிலல்ல; சிவன் கோயில்! இங்கே திருப்பணிகள் சிவனுக்கு மட்டுமே நடைபெறும். வைணவத் திருத்தொண்டு நமது மன்னரது பாட்டனார் முதலாம் குலோத்துங்கர் செய்யாததா? எனது மாமனார் விக்கிரம சோழ மகா சக்கரவர்த்தி செய்யாததா? பின்னால் செய்தால் போகிறது!''

''வாக்குறுதி தேவையாம்!'' என்றார் நாலூரான்.

''வாக்குறுதி என்ன வாக்குறுதி? சாசனமா கேட்கிறார்கள்? யாரை மருட்டுகிறார்கள்! வீணில் குழப்பம் கண்டால் வைணவ வளர்ச்சிக்கு ஆபத்து என்று சொல்லுங்கள்! தில்லையம்பலத்தில் திருமால் கோயில் இடம் பெற்றதே தவறான விலாசம் என்பதை அவர்கள் அறியாதவர்களா? நடராசப் பெருமானை அவமானப்படுத்த ஒருகாலத்தில் பல்லவ மன்னனை நந்திவர்ம பல்லவமல்லன் செய்த நாச வேலை என்பதை மறந்துவிட்டார்களோ? இதனை அப்போதே அகற்றி இருக்க வேண்டும். வைணவப் பழி வந்துவிடக் கூடாது என்பதற்காக, எனது முன்னோரான, விஜயாலயச் சோழர் காலம் முதல், என் காலம் வரை அமைதி காத்து வந்தது.... இப்



"படம் படு செக்ஸியா இருக்கே. இதை எப்படி தணிக்கைக் குழுவினர் அனுமதிச்சாங்க....?"

"இந்தக் கண்றாவியெல்லாம் நாம ஏன் பார்க்கணும்னு ஒருவேளை கண்ணை மூடிக்கிட்டு இருந்திருப்பாங்க!"

— கடுவை கோபால்சாமி



போது அட்டகாசத்துக்குரியதாய்விட்டது!"

குலோத்துங்க சோழ மாமன்னன் இவ்விதம் கோபாக்கினியாய் கூறி முடித்த மறுகணம்...,

ஒரு பெண்ணின் ஆவேச அலறல் அந்த இரைச்சலையும் மீறி ஒலிக்கிறது. அது ஜோதியின் குரல்!

"கோவிந்தராசர் சந்நிதிக் கதவை இழுத்துப் பூட்டுங்கள்! பூட்டுங்கள்! பூட்ட மறுத்தால், இன்றிரவு நாட்டியமில்லை; நானுமில்லை; திருத்தொண்டர் புராணமும் எழ நியாயமில்லை. கதவை இழுத்துப் பூட்டுங்கள்!"

ஜோதியின் ஆவேசம் கண்டு அயர்ந்து போகாதவர் யார்?

தில்லை காளியே ஜோதியின் தேகத்துள் பிரவேசம் கண்டுவிட்டாளா?

குலோத்துங்கன் மருண்டான்; அவனது குடும்பம் மருண்டது.

சேக்கிழார் மருண்டார்; அவரைச் சேர்ந்தோர் மருண்டனர்.

இராசகேசரியான குலோத்துங்கன் மனம் பதைக்கிறது.

நாட்டியமில்லை; போகட்டும்.

அவளுமில்லை; அவசியமில்லை.

திருத்தொண்டர் புராணமில்லாமல் போவதா?

எனது காலத்தில் இப்படி ஒரு தெய்வ மாக்கதை எழ வேண்டும் என்பதற்காகத் தானே இத்தனை முயற்சிகள்! ஆசானை ஒட்டக்கூத்தரையே பகைத்துக் கொள்கிற அளவுக்கு இந்த அரும்பாடுகள்!

சமணமகா காப்பியமான சீவக சிந்தாமணி போல, தமிழ்த் தேன் சொட்டும் சைவ மாக்காப்பியம் தனது காலத்தில் எழாதா என்று தவமிருந்தபோது, இதற்குத் தடையாக இப்படி ஒரு நிகழ்ச்சியா? இது ராமானுசரின் சூழ்ச்சியாக இருக்குமோ? சைவமாக் காப்பியத்தைச் சேக்கிழார் பாடப் போகிறார் என்பதையறிந்த சூழ்ச்சியாக இருக்குமோ?

என்ன செய்வது என்று யோசிக்கிற காலையில் ஜோதி இப்படி சந்நதக்காரி போல ஆணை பிறப்பிக்க அதனையே பற்றுக் கோலாகப் பயன்படுத்திக் கொண்டார் அநபாயர்.

பிடரியைச் சிலிர்த்த சிங்கம்போல எழுந்து கொண்ட குலோத்துங்க சோழ மாமன்னன், "ஏன், நிற்கிறீர்கள்? சந்நதம் பெற்று ஜோதி உத்திரவிட்ட பிறகு செயல் நடைபெற வேண்டியதுதானே? ஜோதியின் உத்தரவு வேறு; அந்த ஜோதியாய் நிற்கும் அம்பலவாணன் உத்தரவு வேறல்ல! இரண்டும் ஒன்றே என நான் கருதுகிறேன்! கதவை இழுத்து மூடுங்கள்!"

கோவிந்தராசப் பெருமாள் சந்நிதி கதவங்கள் 'தணார், தணார்' என்று இழுத்து மூடப்படுகின்றன.

வைணவப் பெரு மக்கள் பெருத்த குரலெழுப்பிச் சோழ மாமன்னனை வசை மாரிப் பொழிகிறார்கள். அவர்களையடக்கி வெளியேற்றுகிறார்கள் வீரர்கள்.

இங்கே ஒன்றுமே நடைபெறாததுபோல, அங்கே தீட்சிதர் பெருமக்கள் யாகசாலையை இனிது முடிக்கிறார்கள்.

எந்த இடையூறும் மக்களிடையே ஏற்படாதவாறு பாலறாவாயன், புரவியில் ஏறிப் பம்பரமாய்ச் சுழன்று கவனித்துக் கொள்கிறான்.

யாகங்கள் முடிந்து, பூசைகள் ஆரம்பமாகின்றன.

எடுத்த பாதமுடன் ஆண்-தன்மையின் எழிலைக் காட்டி நிற்கும் எம்பெருமான், நடராசப் பெருமான் சந்நிதியில் கூட்டம் வழிகிறது.

அபிஷேகம் முடிந்து ஆராதனைகள் நிகழ்கின்றன.

'எம்பெருமானே! இடையூறு நிகழாது உனது திருப்பணி நிறைகிறது.... இந்த முதலமைச்சனைக் காத்து நின்றாய்!' — என்று சேக்கிழார் உள்ளம் உருக வழிபடுகிறார்.

குலோத்துங்க சோழனும் அவனது குடும்பமும் நடராசப் பெருமானைத் தரிசிக்கிறார்கள். குல தெய்வமல்லவா?

எங்கும், சிவோகம், நமசிவாயம், திருச்சிற்றம்பலம்!

தேவாரத்தை நாவாரப் பாடுகிறார்கள்.

ஜோதியோ தனித்து நின்று ஜோதியோடு ஜோதியாய் ஐக்கியமானாற்போல அகமுருகிக் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்குகிறாள்.

'நடரீசமூர்த்தி! என் காதல், காதல், காதல்...'

விளக்குகள் கண்சிமிட்ட ஆரம்பிக்கிற போதுதானே அவளது இனிய முயற்சியின் விடியலே தொடங்கப் போகிறது?


அவளது முயற்சி மட்டுமா.....?

குலோத்துங்க சோழ மாமன்னனின் நாடகம், நாடகம், நாடகம்.....

(தொடரும்)

மனம் போல மாற்றுடை!

இப்படி இப்படித்தான் உடையணிந்து காரியாலயத்துக்கு வரவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்க யோசித்து வருகிறது மத்திய அரசு— செய்தி. இதற்குப் பதிலாக அவரவர் இஷ்டத்துக்கு உடையணிந்து வருமாறு கேட்டுக் கொண்டால்...!





குடு குடு... நல்ல காலம் பொறக்குது...திறமையில்லா முதல்வரின் பதவி பறி போகுது... பழைய முதல்வர் திரும்ப வராரு...
குடு குடு...
நாஞ்சில் மனோகரன்
தாம்பரம் சுந்தரியே! டிஸ்கோ சிங்காரியே! கங்காணிக் காதலியே...! ஹா..ஹா... ஹா!
காளிமுத்து
நான் திங்கட் கிழமை என்.டி.ஆர் உடை, செவ்வாய்க்கிழமை காவியுடை, புதன் கிழமை விவேகானந்தர் உடை, வியாழக்கிழமை நேரு டிரஸ், வெள்ளிக்கிழமை காந்தி உடை...
என்.டி.ஆர்
கன்னித் தமிழ் மேல் ஆணை! சங்கிலிகள் தெறித்து விழும்! சினிமா மாயம் சிதறிப் போகும்!
கருணாநிதி
பொதுத் தேர்தல் தோல்வி
நடனத்தை நம்பறதா?.. வித்தையை நம்பறதா?...
ஜானகி
எம்.ஜி.ஆர்
தேங்கிய கோப்புகள்
ஜெயலலிதா
வீரப்பன்
பொதுஜனத்துக்கு என்ன உடை?
44-ம் பக்கம் பார்க்க!

மைதான மயக்கம்

வையவன்

அழக் கூடாது. நிச்சயமாக ஆண் பிள்ளையாக இருந்தால் அழக்கூடாது. அப்படியென்ன இது ஒரு பந்தயம்? சாதாரண மாவட்ட விளையாட்டுப் போட்டி. இதற்குப் போய் இப்படி நெகிழ்ந்து விட்டால்! அப்புறம் மாநிலம். அடுத்து தேசியப் போட்டி. ஏஷியாட்.... தகதகவென்று அக்னி மூண்டிருப்பதுபோல் மனசு கொதித்துக் கொண்டிருக்கும் ஒலிம்பிக்ஸ்....

ஓ.வி. ராமன் பெயர் ஒலிபெருக்கியில் சொல்லப்பட்டு, ''சூப்பர் ஸீனியர்ஸ்.... ஆயிரத்து இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயம்... பர்ஸ்ட்!'' என்று தொடர்ந்தபோது அவன் தன்னை வெகு சிரமத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.

தான் ஏன் அழவேண்டும்? இந்த வெற்றியா தன்னை அழத் தூண்டிக் கொண்டிருக்கிறது?

அவன் சிலிர்த்துப் போய் நிற்கும்போது ஒலிபெருக்கி மீண்டும் அவனை அழைத்தது. ''வெற்றியாளர்கள் விக்டரி ஸ்டாண்டின் மீது ஏறி நிற்க வேண்டும். ஓ.வி. ராமன்..... ஓ.வி. ராமன்.''

தன் பெயர்தான் ஓ.வி. ராமன் என்று அப்போதுதான் நினைவுக்கு வந்தவன்போல் விக்டரி ஸ்டாண்டை நோக்கித் தனக்கே உரிய பாணியில் அவன் மிடுக்காக ஓடத் தொடங்கினான்.

விக்டரி ஸ்டாண்டை நெருங்குகிறவரை இரண்டு என்று பெரிதாக எழுதி ஒட்டப்பட்டிருந்த ஸ்டூலைக் கடந்து இன்னும் உயரமாய்த் தனித்து நின்ற 'ஒன்று' இலக்கமிட்ட ஸ்டூலில் ஏறி நிற்கிறவரைகூட அவன் சமாளித்தான்.

மீண்டும் அவன் பெயரை ஒலிபெருக்கி உச்சரித்தது. மைதான விதிப்படி வெற்றியாளர்களுக்குரிய பாணியில் அவன் கையை உயர்த்தியபோது, படபடவென்று கைதட்டல்கள் மைதானத்தில் எதிரொலித்தபோது, அவன் தகர்ந்துவிட்டான். தளதளவென்று கண்களில் கண்ணீர் ஊறிவிட்டது.

மைதானம், 'சீஃப் கெஸ்ட்' உட்கார்ந்திருந்த மேடை, கூட்டம் எல்லாமே கண்ணீரில் கரைந்து மங்கிச் சூரிய வெளிச்சத்தில் கூசின.

கீழே இறங்கும்போது, ஏதோ தூசு விழுந்த மாதிரி கை ஈரமாகும்படி துடைத்துக் கொண்டேதான் இறங்கினான். யார் யாரோ அணைத்துக் கொண்டார்கள். கை குலுக்கினார்கள்.

ஆனால் நெஞ்சு விம்மிற்று. ஓவென்று குமுறி அழ வேண்டும்போல். அப்படி வெளியேற்றினால்தான் எந்தப் பெருமையும் கர்வமும் அடைத்து மூச்சுத் திணறி விடாமலிருக்கும் என்பதுபோல்; அப்போதுதான் நிம்மதி என்பது போல்!

ஓ.வி. அதற்கு மறுநாள்வரை காத்திருக்க வேண்டும். அப்பாவிற்கு இதெல்லாம் தெரிய நியாயமில்லை. இன்றைக்குப் பக்கத்து ஊரில் செவ்வாய்ச் சந்தை. சரக்கு ஏற்றிக் கொண்டு வரும்போதே சாராயம் குடித்துவிட்டுத்தான் வருவார்.

சாராய போதையில் வண்டியிலேயே தூங்கிவிடுவார். மாடுகளுக்குச் சாலை தெரியும். வாகன வெள்ளமும் தெரியும். ஒன்றன் பின் ஒன்றாக வரும் வண்டித் தொடரில் அவை பாட்டுக்கு வந்துவிடும். வீட்டுக்கு வந்து போதை தெளிந்துவிட்டால் மறுபடியும் போய் நாலாம் நெம்பர் சாராயக் கடையில் இன்னும் கொஞ்சம் ஏற்றிக் கொண்டுவிடுவார். அப்புறம் அவருக்கு ஒன்றுமே தெரியாது. தெரிய வேண்டாம்.

அம்மாவுக்கு நாளெல்லாம் முதுகு வலிக்க மாட்ச் பேக்டரியின் தீக்குச்சித் தடுக்குகளை அடுக்கிய சிரமம். அப்புறம் அப்பாவின் அடி உதைகளுக்கு அஞ்சி அன்றாடம் 'சொரணை' யோடு சமைக்க வேண்டிய சிரமம். மாவட்ட அளவிலான ஓட்டப் பந்தயத்தில் கலந்து முதல் பரிசு வாங்கியதற்கு மகன் ஏன் அழ வேண்டும் என்று அவளுக்கு நிச்சயம் தெரியாது.

தம்பி, தங்கைகள்.... பாவம் அவர்கள்!

ஓ.வி. காலையில் மீண்டும் பிராக்டிஸுக்காக ஸ்டேடியத்திற்கு அதி காலையில் ஓடத் தொடங்குகிறவரை காத்திருக்க வேண்டும்.

அப்போதுதான் ஹண்ட்ரட்ஜி வருவார். கட்டாயம் விடி காலையில் வந்துவிடுவார்.

அவன் காத்திருந்தான்.

இரவில் கொஞ்சம் தலையணை நனைந்தது. சில்லிட்டுவிடவே திருப்பிப் போட்டுக் கொண்டான். ஒரு நேரமாக விழித்தபோது அந்தப் பக்கமும் நனைந்திருந்தது. மறுபடியும் திருப்பிப் போட்டு விடிவதற்குக் காத்திருந்தான். முதல் வெளிச்சம் வந்ததும் அவன் ஸ்டேடியத்தை நோக்கி நடந்தான்.

அது கல்லூரி ஸ்டேடியம். வெளியே கதவு; காவலாளி எல்லாம் உண்டு.

ஹண்ட்ரட்ஜிதான் அவனுக்கு ஸ்டேடியத்தில் பிராக்டிஸ் செய்ய விசேஷ அனுமதி வாங்கித் தந்திருந்தார். அவன் கதவை நெருங்கியதும் பீடி குடித்துக் கொண்டிருந்த காவலாளி, ''என்ன ராமா.... எப்படா விடியும்னு காத்திட்டிருந்தியா?'' என்று சலித்துக் கொண்டே கதவைத் திறந்துவிட்டான்.

ஓ.வி. ஞாபகமாக ஐந்தாறு சாக்கலேட்டு களைக் கொண்டு போயிருந்தான். டிரவுசர் பையில் கையை விட்டு இரண்டை எடுத்துக் காவலாளியிடம் நீட்டினான்.

''எதுக்கய்யா? இத்தினி கார்த்தாலே சாக்கலேட்....''

''நேத்திக்கி ஓட்டப் பந்தயத்திலே நான் ஃபேர்ஸ்ட் வந்தேன்.''

காவலாளியின் முக இறுக்கம் தளர்ந்தது. இரண்டையும் எடுத்துக் கொண்டே அவன் சொன்னான். ''நான் என்ன சின்னப் புள்ளையா? ரன்னிங் ரேஸ் ஜெயிச்சுட்டு வெறும் சாக்லேட் குடுத்து ஏமாத்தறியே...''

''வேறே என்ன வேணும்?''

''ஒரு கால் பிளேட் பிரியாணி. அப்படியே குவார்ட்டர் பாட்டில்.''

ஓ.வி. துயரமாகச் சிரித்தான். ''மொதல்ல கேட்டியே, அதை வாங்கித் தர்றேன். ரெண்டாவது ம்ஹூம்ஹூம்.''

காவலாளிக்கு, அவன் சிரிப்பில் மிதந்த துயரம் நெருடியிருக்க வேண்டும். ''ம்ஹூம். சும்மா தமாஷுக்குக் கேட்டேன் ராமா? நீ போய் பிராக்டிஸ் பண்ணு....'' என்று இரும்புக் கதவை கரகரவென்று ஒலிக்கத் திறந்து விட்டான்.

ஓ.வி. டிரவுசர் பாக்கெட்டில் கையை விட்டு முட்டை வாங்குவதற்காக வைத்திருந்த ஒற்றை ரூபாய் நாணயத்தை எடுத்துக் காவலாளியின் கையில் வைத்தான்.

''எதுக்கு ராமா?''

''காப்பியாவது சாப்பிடுங்க! தற்சமயம் இதான்!''

இன்றைக்கு முட்டையில்லை. ஆனால் காவலாளி சந்தோஷப்படுவான். அவன் கேட்டதை வாங்கிக் கொடுக்கத் தனக்குச் சக்தியில்லை.

''வேண்டாம் ராமா!''

''வச்சுக்குங்களேன்!''

விடிகாலையில் ஸ்டேடிய மைதானம் புன்முறுவலுடன் வரவேற்பது மாதிரி இருந்தது. புல்வெளியில் பனி உட்கார்ந்திருக்கிறது. ஸ்டேடியத்தைச் சுற்றி நின்ற மரங்களில் உதயம் பறவைகளை எழுப்பிவிட்டிருந்தது.

'வா!' என் அகன்ற மார்பில் இறங்கி ஓடு' என்று மைதானம் பூரிப்போடு, பெருமிதத்தோடு அவன் நேற்றுப் பெற்ற வெற்றிக்கு ஒரு மௌன கர்வத்தோடு வரவேற்பது போலிருந்தது.





பாலமுரளி அளிக்கும் 'டூ இன் ஒன்' பரிசு!

விவரம் எதிர்ப்பக்கம்

ஓ.வி.க்கு அந்த மௌனமான மைதானம் ஒரு சொர்க்கத் தொட்டில். எத்தனை மனப் புழுக்கத்தை அது ஆற்றியிருக்கிறது! சுற்றிலும் இருட்டான உலகில் அவன் எங்கு நின்று எதைச் செய்ய வேண்டுமென்று எத்தனை நிசப்தமாக அவனுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது!

மைதானத்தின் முன் விழுந்து கும்பிட வேண்டும்போல் தோன்றியது. சீ.... இது ஒரு தாய்க்குச் சமம். எந்தத் தாய் தன் பிள்ளை விழுந்து நமஸ்கரிப்பதை ரசிக்கிறாள்?

ஓ.வி. ஓடத் தொடங்கினான்.

மனசு ஹண்ட்ரட்ஜியையே எதிர்பார்த்தது. ஓட்டத்தில் தோயவில்லை. தூரத்து மர்தா கோவிலில் ஆறு மணி அடித்து ஓயும்போது ஹண்ட்ரட்ஜி வேஷ்டி ஜிப்பாவுடன் மார்பில் புரளும் தாடி வெள்ளேரென்று துலங்க, கம்பீரமாக நடந்து வந்தார்.

ஓ.வி. அப்போது இரண்டாவது ரவுண்ட் வந்து கொண்டிருந்தான். பாதி இருந்தது. ஓட்டத்தை இடையில் முடித்துக் கொண்டு நேரே தாய்ப் பசுவை நோக்கித் துள்ளிக் கொண்டு வரும் கன்றுக் குட்டி மாதிரி அவரிடம் ஓட வேண்டும் போலிருந்தது. நெஞ்சு பலூன் மாதிரி விரிந்துவிட்டது போல் விம்மியது.

ஓ.வி. அடக்கிக் கொண்டான். அந்த ரவுண்டு முடிய வேண்டும். ஹண்ட்ரட்ஜிக்கு இப்படி நடுவில் நிறுத்துவது பிடிக்காது.

ஹண்ட்ரட்ஜி இடுப்பில் கை வைத்துக் கொண்டு ஸ்டேடிய மேடை மீது நின்று அவன் ஓட்டத்தைக் கவனித்துக் கொண்டே இருந்தார்.

அவன் அவரை நெருங்கியதும் மூச்சு வாங்க நின்றான்.

''எத்தனை செகண்ட்?'' என்றார்.

''கவனிக்கலே மாஸ்டர்.''

அவர் கனிவாக அவன் மடமையைப் பக்குவமாகக் கண்டிப்பது போல் சிரித்தார்.

''வெறும்ன ஓடினா? வாட்ஸ் த யூஸ்?''

அவனுக்கு மூச்சு ஆறியபோது அந்த விம்மல் மேலெழுந்தது. டிரவுசர் பையில் கையை விட்டு இருந்த சாக்லெட்களையெல்லாம் அள்ளி அவர் முன் நீட்டினான்.

''என்ன....?'' என்று ஒரு வார்த்தைதான் அவர் கேட்டார். ம்ஹூஹூம்....'' என்று மறு வினாடியே புரிந்து கொண்டது போல் ஒரு வாத்சல்யமான புன்னகையோடு வாங்கிக் கொண்டார். ஓ.வி. குமுறிக் கொண்டு அவருடைய செருப்பு அணியாத பாதங்களின் மீது விழுந்தான். நேற்றிலிருந்து அவன் தேக்கி வைத்திருந்த மடை உடைந்தது. நுங்கும் நுரையுமாக அடித்துக் கொண்டு வந்தது.

சட்டென்று அவனைத் தூக்கிப் பிடித்தார் ஹண்ட்ரட்ஜி.

மெதுவாக அவனை மார்போடு தழுவினார். ஒரு குழந்தைக்குக்கூட நோகாதவாறு மென்மையாக மிக மிருதுவாக அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார். எப்படித் தட்டினால் எல்லாம் சரியாகிவிடும் என்று தெரிந்தவர்போல் தட்டித் தட்டிக் கொடுத்தார்.

பின்பு ஒரே ஒரு வார்த்தை சொன்னார்.

''அழப்படாது!

வெளி வாங்கியது போல ஓ.வி. ஆசுவாசமானான்.

''ஏன் அழுதே....?''

''தெரியலே மாஸ்டர்.''

''இப்போ சொகமா இருக்கா?''

''ஆமாம்!''

''கமான், பிராக்டிஸை ஆரம்பி. நான் 'டைம் கவுண்ட்' பண்றேன்...''

இப்போது ஓ.வி. அவருக்குக் கீழ்ப் படியவில்லை. நின்றான்.

''என்ன ஓ.வி.?''

''ஸாரி மாஸ்டர். அழுகை வந்துட்டது!''

அவர் ஒன்றும் சொல்லவில்லை. அமைதியாக, ஆழத்தை அனுமானிப்பது போலப் பார்த்தார்.

''நேத்திக்கு விக்டரி ஸ்டாண்ட்லே நிக்கறப்பவே கண்ட்ரோல் பண்ண முடியலே.''

கேட்டுக் கொண்டு நின்றார்.

''ஒங்களையேதான் நெனெச்சுக்கிட்டேன். ஆனாலும்....''

அவர் கண்ணை மூடிக் கொண்டு தலையை அசைத்தார்.

''இதான் 'எக்ஸைட்மெண்ட்'டுங்கறது. இது வரும். வரவிடப்படாது!''

ஓ.வி. அவர் வார்த்தைகளை, அவர் முக பாவத்தை ஆரப் பருகுவது போல் கூர்ந்து கவனித்தான். அவனது முகத்தின் தீவிரத்தை அதன் ஏகாக்ரதையை அவர் கவனித்தார்.

''சகஜமா இருக்கணும், லகுவா.''

ஹண்ட்ரட்ஜிக்கு உபதேசம் வராது. பிடிக்காது. கேட்க வேண்டிய கட்டாயமோ சொல்ல வேண்டிய நிர்ப்பந்தமோ நேர்ந்தால், அலை மாதிரி நழுவிக் கொண்டு போய் விடுவார். தவிர்க்க முடியவில்லை என்றால்

தொட்டும்தொடாமலும்சுட்டிக்காட்டுவார்.

"விக்டரி ஸ்டாண்ட்ல ஏறி நின்னுண்டு என்ன பண்ணினே? கர்ச்சிப்பை எடுத்து கண்ணு மூக்கெல்லாம் தொடச்சிவிட்டியா?"

ஓ.வி.க்கு மெதுவாக ஒரு சிரிப்பு குமிழ் விட்டது.

"ஸ்டேட்ஸ் போறச்சே பெரிய கர்ச்சிப் வாங்கி வச்சுக்கோ. நேஷனல்ல நாப்கின். ஏஷியாட்டுக்கு ஒரு கைத்தறித் துண்டு. ஒலிம்பிக்ஸுக்கு மறக்காம ஒரு டர்க்கி டவல் கொண்டு போயிடு!"

ஓ.வி.யின் முகம் மலர்ந்துவிட்டது. கண்கள் இடுங்கி ஒரு சிரிப்பு.

அவரும் கூடச் சிரித்தார்.

"வெற்றி வந்தா சாதாரணமா ஏத்துக்க வேணுமா? இல்லேன்னு தோல்வி வர்றச்சே எப்படி ஏத்துக்கறதாம்? எங்கடா போயிட்டான் இந்த ஹண்ட்ரட்ஜின்னு தேடிட்டு வந்து கட்டி அழத் தோணும் அப்புறம்."

இன்னும் கூட சிரிப்பு அடங்க மாட்டேனென்கிறது. இவர் பாட்டுக்கு வாழைப் பழத்தில் ஊசியாக ஏற்றிக் கொண்டே போகிறார்.

"இப்ப ஓடறதுதானே! காலேலே வேறே ஒண்ணும் ஒனக்கு வேலையில்லையே...."

"எதுக்கு மாஸ்டர்?"

"ஒன்னை ஒரு இடத்துக்கு அழைச்சுட்டுப் போகப் போறேன். இப்போ இல்லே. ப்ராக்டிஸ் முடிச்சப்பறம்..."

"சரி மாஸ்டர்."

"ஒரு கண்டிஷன்."

"சொல்லுங்க மாஸ்டர்."

"அங்கே வந்து 'ஒ'ன்னு அழப்படாது."

ஓ.வி. சிரித்தான்.

"ஆங்.... இதே மாதிரி சிரிக்கணும்! நான் அப்படித்தான் சிரிச்சுக்கிட்டிருக்கேன். இப்ப இல்லே. ரொம்ப நாளா... பைத்தியம் பிடிக்காம இருக்கு!"

ஓ.வி. சிரிப்பை நிறுத்திக் கொண்டான்.

"எனக்கு ஏன் ஹண்ட்ரட்ஜின்னு பேரு வந்தது தெரியுமா?"

"தெரியாது மாஸ்டர்."

"நூறு மீட்டர்.... அதாவது ஹண்ட்ரட் மீட்டர்ஸ்தான் என் ஸ்பெஷாலிட்டி. ஏஷியாட்லாம் அப்ப இல்லே." அவர் சிரித்துக் கொண்டேதான் சொன்னார்.

"ஒலிம்பிக்ஸ்தான்! செலக்ஷனுக்கு டெல்லி வரையிலே போயிட்டேன். ம்ஹ்ம்ஹ்ம். ஒரு சின்ன எக்ஸைட்மெண்ட். கோட்டை விட்டுட்டேன்."

தோல்விகூட ஹண்ட்ரட்ஜிக்கு சகஜம் தான். இது மாதிரியே புன்னகையோடுதான் ஏற்பார்.

"சரி.... பிராக்டீஸ் ஆரம்பி."

ஹண்ட்ரட்ஜி டைம் பார்த்தார். இடைவெளிவிட்டு இடைவெளி; கொஞ்சம்கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு!

ஒருமுறை ஓ.வி. கையை இரண்டு பக்கமும் இறக்கை மாதிரி ஆட்டிக் கொண்டே பரத்தியவாறு ஓடினான். ஹண்ட்ரட்ஜி வேஷ்டி ஜிப்பாவை அவிழ்த்து வைத்துவிட்டு ஓடிக் காட்டினார்.

"எனர்ஜியை அனாவசியமான மூவ்மெண்ட்ஸ்லே விரயமாக்கப்படாது ஸ்டெப்ஸ் லகுவா இருக்கணும். ஒடம்பு வெய்ட்டையெல்லாம் குதி கால்லே எறக்கிண்டு தன்தன்னென்று பாங்ரா டான்ஸர்

இதுபோன்ற ரேடியோ கேஸட் டேப் ரிகார்டர் ஒன்றைப் பாலமுரளி கிருஷ்ணா அவர்களிடமிருந்து பரிசாகப் பெற நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

பிரதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு டி. வி. பார்க்க வேண்டும். டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா அளிக்கும் சுவர ராக சுதா நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும். அதுபற்றி கல்கியில் ஒரு பக்கத்துக்கு மேற்படாத அளவில் ஒரு குட்டி விமர்சனம் எழுதி அனுப்ப வேண்டும்.

பாராட்டி மட்டுமல்ல, உங்களுக்குத் தென்படுகிற குறைகளையும் சுட்டிக் காட்டி எழுதலாம். உங்கள் சிந்தனையைத் தூண்டிவிட இதோ சில கேள்விகள்:

கர்நாடக இசையில் அதிக நாட்டம் இல்லாதவர்களைக் கூட ஈர்ப்பது நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம். அதில் வெற்றி பெற்றுள்ளதா? முன் பகுதியில் பாலமுரளி பாட, பிற்பகுதியில் சினிமா பாடல்கள் ஒலிப்பது உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? இம்மாதிரி சாஸ்திரிய இசை அல்லது இதர கலை நிகழ்ச்சிகளை மேலும் கொடுத்தால் விரும்பிப் பார்ப்பீர்களா? ஒளி, ஒலிப்பதிவுகளின் தரம் எப்படி? பாலமுரளி அளிக்கும் முன்னுரைகள் பற்றி உங்கள் கருத்து?

உங்கள் விமர்சனம் இதுபோன்ற மேலும் பல கேள்விகளுக்கு விடை அளிப்பதாக இருக்கலாம். இந்த விமர்சனத்தை எழுத, போட்டியில் பங்கேற்க நீங்கள் கர்நாடக இசையைப் பயின்றவராகவோ அறிந்தவராகவோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

ஏற்கெனவே ஆறு வாரங்கள் ஓடிவிட்டன. அவற்றைப் பார்த்தவர்கள் எழுதலாம்; பார்க்காதவர்கள் பாக்கியுள்ள ஏழு வார நிகழ்ச்சிகளைப் பார்த்துவிட்டு எழுதலாம்.

ஆறுதல் பரிசுகள் பல உண்டு.

வெற்றி பெற்றவர்களுக்கு பாலமுரளியைச் சந்தித்து அளவளாவ வாய்ப்பு கிடைக்கலாம்.

உறையின்மேல் "சுவர ராக சுதா" என்று குறிப்பிட்டு "கல்கி காரியாலயம், சென்னை — 32" என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

முடிவு தேதி 11, செப்டம்பர் 1986.



அருள்வாக்கு

ஒரே எலெக்டிரிஸிடி வேறே வேற பல்புகளில் நூறு 'வாட்', அறுபது 'வாட்' என்றும், பச்சை சிவப்பு முதலான பல நிறங்களிலும்; டேப் ரிகார்டரில் சப்தமாகவும்; ஏர் கண்டிஷனரில் ஜில்லிப்பாகவும்; ஹீட்டரில் சூடாகவும் — இப்படிப் பல தினுஸாக வெளிப்படுகிறது. எலெக்டிரிஸிடி இல்லாமல் இந்த எதுவும் வேலை செய்வதில்லை. ஆனாலும் இதை வைத்து எலெக்ட்ரிஸிடி இத்தனை வாட், அது இன்ன நிறம், அது இன்ன பாட்டுப் பாடுவது, அது இத்தனை சூடாக அல்லது குளிர்ச்சியாக இருப்பது என்று முடிவு பண்ணலாமா? இந்த எதுவுமாக இல்லாமல், இந்த எல்லாவற்றையும் இப்படியிப்படி ஆக்கிக் கொண்டு ஒரே மின்ஸார சக்தி பல ரூபங்களில் பல கார்யங்களை ஆக்குவிப்பது போல்தான் ஒரே ஆத்மா பலவிதமான ஜீவ ஜந்துக்களில் பலவிதமான மனப்போக்கு, சக்தி முதலியவற்றை ஏற்படுத்தி, பலவிதமான கார்யங்களையும் செய்து கொண்டிருக்கிறது; ஆனால் இந்த மனோபாவங்கள், சக்தி ஸாமர்த்யங்கள், கார்யங்கள் ஏதாவது அதற்குரிய லக்ஷணங்களா என்றால் அதுதான் இல்லை. இவற்றை அதன் லக்ஷணமாகச் சொல்வது பச்சை பல்பைப் பார்த்துவிட்டு எலெக்டிரிஸிடி பச்சை நிறமானது என்று சொல்கிற மாதிரிதான்; டேப் ரிகார்டர் கேட்டுவிட்டு எலெக்ட்ரிஸிடிக்கு அஞ்சு கட்டை ச்ருதி என்கிற மாதிரிதான்!

பல எலெக்ட்ரிஸிடிகள் இல்லை. ஒரே எலெக்ட்ரிஸிடிதான். அத்வைதம்! அதுவே அநேக வஸ்துக்களில் அநேக கார்யங்களைச் செய்து த்வைதங்களுக்குக் காரணமாகிறது. இப்படி ஒரே ஆத்மாதான் மாயா சக்தியால் ஸகல ஜீவ—ஜட ஸமூஹ வ்யாபாரங்களுக்கும், அதாவது ப்ரபஞ்ச நாடகம் முழுவதற்கும் காரணமாயிருக்கிறது.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

மாதிரி குதிக்கப்படாது. யூஸ் ஒன்லி தி ஃப்ரண்ட் புட்.''

மறுபடியும் அவர் சொன்ன கட்டளைகளை நிறைவேற்றுகிற மாதிரி ஓடிக் காட்டினான் ஓ.வி.

பெருவிரலில் பிடித்திருந்த வாட்சைப் பார்த்துவிட்டு, ''அரை செகண்ட் கெய்ன் பண்ணியிருக்கே! மூணு செகண்ட் கெய்ன் பண்ணினியானா நான் உன்னை ஒலிம்பிக்ஸுக்கு அனுப்பறேன். செலவு என்னுது.''

ஓ.வி. அவரை பக்தியோடு நிமிர்ந்து பார்த்தான்.

''போவோமா!'' என்றார்.

கழற்றி வைத்திருந்த ஷர்ட்டை அவனும், வேஷ்டி ஜிப்பாவை அவரும் அணிந்தனர்.

''மைதானத்திலே ஒரு மயக்கம் இருக்கு.''

ஓ.வி. கூர்ந்து கவனித்தான்.

''டார்ஜட் முடிஞ்சா மயக்கம் தீந்துடும். டார்ஜட் முடியலே, மயக்கம் ஏக்கமாயிடும். ஒன் வே ஆர் தி அதர். மயக்கத்தைத் தீர்த்துடணும்.''

ஓ.வி.யின் முக தீட்சண்ணியத்தைப் பார்த்ததும் பையன் உபதேசம் கேட்கிறான் என்று அவருக்குப் பட்டுவிட்டது. கொஞ்சம் விளையாடத் தொடங்கினார்.

''இல்லே நெஜம்மா கிறுகிறுன்னு மயக்கம் வந்து மைதானத்திலேயே விழுந்துடுவே! எலுமிச்சம்பழம் போட்டுத் தேய்க்கணும். அப்பத்தான் தெளியும்.''

அவன் சிரிக்கத் தொடங்கினான்.

''தட்ஸ் குட்! வா போவோம்.''

எக்ஸ்டென்ஷன் பக்கம் எங்கோ இழுத்துக் கொண்டு போனார். மெதுவாகப் பேசி, மெல்ல மெல்ல சிரிப்புக் காட்டிக் கொண்டு இரண்டு தெரு வளைந்து பர்மா தேக்கு போட்டுக் கட்டிய பழைய பிரிட்டிஷ் மாடல் வீடு ஒன்றின் முன் நின்று மெதுவாகக் கதவைத் தட்டினார்.

''யாரது?''

''நான்தான்.''

குரல் தூரத்திலிருந்து வந்தது.

''நான்தான்னா யாரு?''

''பாரூ. நான்தான் ஹண்ட்ரட்ஜி.''

''அப்பா.... நீங்களா.... அம்மா குளிச்சிட்டிருக்காப்பா.''

''கொஞ்சம் வெய்ட் பண்ணுவோம்.''

பேசியது அவர் பையன். இது அவர் வீடு என்று அப்போதுதான் புரிந்தது. ஹண்ட்ரட்ஜியைப் பற்றி அவனுக்கு வேறு எதுவும் இதுவரை தெரியாது.

''தோ வந்துட்டேன்.''

சடக்கென்று கதவு திறந்தது. எதிரே தாழ்வாரத்தில் இரு கால்களும் சூம்பிப் போனவனாக எழுந்து நடமாட முடியாதவனாக ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான்.

''என் மகன்'' என்றார்.

படாரென்று பிடரியில் அறைந்தது போலிருந்தது. உள்ளே அவர் அறையில் தனிமையில் ஓ.வி. அழமுயன்றபோது அடக்கினார்.

''டில்லி செலக்ஷன்லே இவனுக்கு ஆக்ஸிடெண்டான தந்தி வந்தப்ப இப்படித்தான் அழுதேன்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் ஹண்ட்ரட்ஜி.



ஆல்பர்ட் A/C
மகாராணி
உதயம் A/C
3 காட்சிகள்
அபிராமி A/C
பகல் 11-30 காட்சி
மற்றும் தமிழகமெங்கும்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிக்கும்
K.R.G பிலிம் சர்க்யூட்
தாய்க்கு ஒரு தாலாட்டு
பாலச்சந்திரமேனன்
K.R.கங்காதரன்
இளையராஜா
விஜய்கிருஷ்ணராஜ் • ஜெ. ஜான் வின்சென்ட் • வைரமுத்து
CROWN



லோகநாதன், ஸ்டேஷன் மாஸ்டரின் கோலிக் குண்டு கண்களையே உறுத்துப் பார்க்கிறார்.

''நீங்க என்ன சொல்றீங்க?''

''இன்னும் என்ன சொல்றதுக்கு இருக்கு.... அதான் அவர், ஒரு இண்டு இடுக்கு விடாம புட்டுப் புட்டு வச்சிட்டார் இல்லே....

— இது டாக்டர்.

அவருக்கு உள்ளூர பயம்.

என்னதான் ஸ்டேஷன் மாஸ்டர் வாய்ச் சாலகம் மிகுந்தவர்தானென்றாலும், ஒரே கேள்வியைப் பத்துத் தரம் எதிராளி கேட்டால்.... அதுவும், மாற்றி, மாற்றிக் கேட்டால், ஆசாமி எங்கேயாவது உளறியடித்து விடப் போகிறாரே என்று....

பொய் சொல்வது அத்தனை சுலபமில்லையே.... அதுவும் ஏகப்பட்ட பொய்களை சேர்த்து, அடுக்கடுக்காய்ச் சொல்லும்போது எல்லாவற்றையும் வரிசையாய், மனத்துக்குள் பதிய வைத்துக் கொண்ட பிறகுதானே சொல்ல முடிகிறது... அதற்கு எத்தனை தேர்ந்த அனுபவமும், கற்பனைச் செறிவும், ஞாபக சக்தியும் வேண்டியிருக்கிறது...!

இத்தனை தகுதிகளும் இவரிடம் இருக்கிறதா என்பதுபோல், ஸ்டேஷன் மாஸ்டரை அளப்பது போல் பார்க்கிறார் டாக்டர்.

அவரோ எக்ஸ்பிரஸ் ரயில் மாதிரி, வேகமாய் அளந்து கொண்டேயிருந்தார்.

சும்மாவா? டாக்டரிடம் கை நீட்டிப் பணம் வாங்கியிருக்கிறாரே...

அதுவும் நூறு, இரு நூறு இல்லையே.... முள்ளங்கிப் பத்தை கணக்காய் ஆயிரம் ரூபாய்.

டாக்டரின் அருமைப் புதல்வி மல்லிகாவின் ஜாதகத்திலுள்ள நவகிரகங்களையும் மாற்றி வைக்க — ஒரு கிரகத்துக்கு நூறு ரூபாய் வீதம் தொள்ளாயிரம் ரூபாய். கடைசி நூறு ரூபாய், ஜமீன்தாரின் கிரகத்தில் இப்பொழுது குடி கொண்டிருக்கிற இன்பாவை வெளியேற்ற....

ஸ்டேஷன் மாஸ்டருக்கு இருக்கிற செலவுக்கு இதெல்லாம் போதாதுதான்.

டாக்டரின் மனைவி பரிமளா, பத்து நூறு ரூபாய்த் தாள்களை எண்ணி, இவர் கையில் வைத்தபோதே, முணுமுணுத்தா ர்:

''உங்க ஒய்ஃப் இன்னும் அந்தக் காலத்துலேயே இருக்கா.... ஆயிரம் ரூபாய் எதுக்குக் காணும்? பெரியவன் காலேஜ்ல படிக்கிறான். ஹாஸ்டல் பில்லே ஆளை முழுங்கறது...

அவன் ஹாஸ்டல்லே ஆடு, கோழிய முழுங்குவானாயிருக்கும். அதான் பில் உங்களை முழுங்கறது.... விரலுக்குத் தகுந்த வீக்கம்தான் வேணும் சுவாமி. இப்ப, இந்தக் காரியத்தை நல்லபடியா முடிச்சுக் கொடும்.''

''எப்ப என்கிட்ட விஷயத்தை விட்டாச்சோ, அப்புறம் அதை நீர் மறந்துடலாம்.''

''அது சரி.... இருபது வருஷத்துக்கு முன்னாலே மங்களாம்பாள் விஷயத்தை கவனிச்சு விட்டீரே, அது மாதிரியா...?''

ஸ்டேஷன் மாஸ்டர், டாக்டரை, தலையைச் சாய்த்து ஒரு காக்காய்ப் பார்வை பார்த்துவிட்டு, முகத்தைப் பரிதாபமாய் வைத்துக் கொண்டார்.

''அது.... அப்ப எனக்கு கல்யாணமான புதுசு. ஸ்டேஷன்லே நைட் ட்யூட்டி.... வீட்டுல பகல் டியூட்டி. அன்னிக்கு ராத்திரி நான் கண் அசந்த மாதிரி அப்புறம் வாழ் நாள்லே ஒரு மணி நேரம்கூட கண் அசரலே ஓய்.... நீர் நம்பினாலும் சரி, நம்பாட்டாலும் சரி...''

''குறை பட்டுக்க வேண்டாம். நிம்மதியாக் கண் அசரும் காலம் வராம போயிடாது. இப்ப, காரியத்தைப் பாருங்க....''

டாக்டர் இந்த மனிதரின் கழுத்து வரைக்கும் பொய்களை திணித்து அழைத்து வந்திருக்கிறார்.

இவரும், டாக்டரின் நம்பிக்கைக்கு எந்த விதக் குந்தகமும் ஏற்படாத வகையில் சரடுகளைத் திரிக்கிறார்.

சாதாரணமாகவே, மாலை நேரங்களில், அந்தக் கல்யாணக்கூடத்தில் மூன்று சாய்வு நாற்காலிகளைப் போட்டுக்கொண்டு, நடுவில் வட்ட வடிவ டீபாயின் மீது உயர் ரக மது வகைகளையும், வறுத்த முந்திரி, உருளைக் கிழங்கு வறுவல் முதலியவைகளையும் வைத்துக் கொண்டு மூவரும் உட்கார்ந்து — ஏதோ கோட்டையைப் பிடிக்கப் போவதுபோல ஆழ்ந்து பேசுவதும், நடுவில் ரகசியமாய் உரையாடுவதும், சில சமயங்களில் சத்தம் போட்டுப் பேசுவதும் உண்டு.

...டரைத் தவிர, மற்ற இருவருக்குமே ...ன 'ஆல்கஹால்' சமாச்சாரங்களில் பிரேமை அதிகமில்லை.

ஜமீன்தார் லோகநாதன் சுகவாசி. ஒரு காலத்தில் அவர் மதுவையும் மாதுவையும் தவிர, பூலோகத்தில் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவ ராசிகள் அனைத்துமே வீண்தான் என்று சொல்லக் கூடிய அளவுக்குப் பைத்தியமாயிருந்தார்.

இப்போது இல்லை. அவர் இப்போது தேடுவது இந்த அல்ப விஷயங்களை அல்ல. வேண்டியது அனுபவித்தாகிவிட்டது. தற்போது இருக்கிற சூழ்நிலையில், ஒரு கணமும் தன்னை இழந்துவிட அவர் தயாராக இல்லை.

ஒரு சின்னக் கோப்பையில், சோடா கலந்த திரவத்தை வைத்துக் கொண்டு, மணிக் கணக்கில் உட்கார்ந்திருப்பார்.

ஸ்டேஷன் மாஸ்டர் கதையே வேறு. அவருக்கு இதெல்லாம் ஒத்துக் கொள்வதில்லை. முதல் தடவை 'ஓசியில் கிடைப்பதை அனுபவித்துத்தான் வைப்போமே' என்று ஏகத்தாறுய், வாய்க்கும் வயிற்றுக்குமாய் விளாவிவிட்டு வீட்டுக்கு வந்து மூன்று நாளைக்கு வாந்தி எடுத்துக் கொண்டு கிடந்தார். வயிற்றில் நெருப்புப் பந்தம் பிடித்தாற்போல் தவித்துப் போய்விட்டார்.

போதாக்குறைக்கு, பெண்டாட்டி வேறு, 'குடிகாரக் கணவனுக்கு, ஏமாந்து போய்க் கழுத்தை நீட்டிவிட்டதாக' அழுது புலம்பி, பிறந்த வீட்டுக்கு ஒரு முழ நீளத்துக்குக் கடிதம் எழுத, மாமனார், மாமியார், மைத்துனன் என்று சாரி சாரியாய் வந்துவிட்டார்கள். ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே வீடாததால், மாமனாரோ, மைத்துனரோ வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்து, இவரைக் கண்காணித்து.....

ஐய்யோ, அதையெல்லாம் இப்பொழுது நினைத்தாலும் எதையும் குடிக்காமலேயே தலையைச் சுற்றும் அவருக்கு.

அன்றிலிருந்து, இள நீர், சப்போட்டாப் பழம், ஏன் பூவன் பழத்தின் பக்கத்தில் கூடப் போவதில்லை ஸ்டேஷன் மாஸ்டர்.

சும்மாவாவது இவர்களுடன் உட்கார்ந்திருப்பார். முந்திரியோ, பக்கோடாவோ ·



இருந்தால் வளைத்துக் கட்டுவார். வீட்டுக்கும் பொட்டலம் கட்டி எடுத்துப் போவார்.

கொண்டு வந்து வைக்கப்படும் சரக்கை யெல்லாம் காலி செய்வது டாக்டர் ஒருத்தர் தான்.

பல நாட்கள், போதையில் — இரவு வீடு திரும்பும்போது, காரைக்கிளப்பாமல், ஜமீன் தார் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தபடியே வண்டியை ஓட்டுவதாய்க் கற்பனை செய்து கொண்டிருக்கிறார். மாதையன், அவரை இறக்கி, பங்களாவுக்குள் அழைத்துப்போகும் போது மட்டும் இப்படிச் சொல்வார்:

''பரிமளா... நான் ஓவரா டிரிங்க் பண்ணிட்டேன்னு நினைக்கறியா... நெவர்... எப்பவும் ரெண்டு பெக்தான். பாரேன்... இல்லாட்டி, இந்தக் காட்டுப் பகுதியில இத்தனை ஜாக்கிரதையா டிரைவ் பண்ண முடியுமா?''

இவர் இப்படி உளறும்போதெல்லாம், தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடிக்குள் விழிகள் ஜொலிக்க, இவரையே பார்த்துக் கொண்டிருப்பார் லோகநாதன்.

''முதலாளி..... இவரை நம்ம வண்டியிலப் போட்டு இவர் வீட்டுல கொண்டு போய் விட்டுட்டு வர்றவா....''

மாதையன் எத்தனையோ நாள் கேட்டிருக்கிறான்.

''வேண்டாம்.... இங்கேயே, 'கெஸ்ட் ரூமை' திறந்து விடு.''

இப்படிச் சொல்வாரே தவிர, ஒருநாள் கூட குடி போதையோடு டாக்டரை தனியே அனுப்பியதில்லை....


ஸ்டேஷன் மாஸ்டர் அடிக்கடி, வேடிக்கையாய்ச் சொல்வதுண்டு.

''உங்க மேல, ஜமீன்தாருக்குத் தனிப் பிரியம்... பாருங்களேன். நீங்க 'லிமிட்'டைத் தாண்டிட்டா, உடனே, உங்களைத் தனியா அழைச்சுண்டு போயிடறார்.''

''பின்னே.... போதையிலாவது ஏதாவது உளர்றேனான்னு கவனிக்க வேண்டாமா!''

''உளற என்ன இருக்கு?''

''இருபது வருஷக் கதை இருக்கேய்யா... மறந்துட்டீரா... ஜமீன்தார், என்கிட்டயிருந்து எதையாவது மறைக்கறாரான்னு நான் தேட





றேன். எனக்கு ஏதாவது விஷயம் தெரிஞ்சிருக்குமோன்னு அவர் சிண்டைப் பிய்ச்சுக்கிறார். இப்படி கிட்ட வாங்க. காதோட சொல்றேன்."

டாக்டர், ரொம்ப ரகசியமாய் அழைப்பார். ஸ்டேஷன் மாஸ்டர், 'என்ன' என்று அதை மிகவும் பரம ரகசியமாய் கேட்டு, காதைத் தீட்டுவார்.

"எங்க ரெண்டு பேருக்குமே அப்பப்போ, உங்க மேலேயும் சந்தேகம் வரும்..."

"சிவசிவா."

ஸ்டேஷன் மாஸ்டர் விழி பிதுங்க அலறுவதைப் பார்ப்பதில் டாக்டருக்கு பரம திருப்தி.

"அப்புறம் நாங்களே சந்தேகத்தை வாபஸ் வாங்கிப்போம். ஏன்னு கேட்டா, முழுப் பூசணிக்காய சோத்துல மறைக்க உங்களாலே முடியாதுன்னு எங்களுக்குத் தெரியும். மறைச்சிருந்தா இந்நேரம், உம்ம பெண்டாட்டி, பிள்ளைகள் ஒழுங்கா இருக்க முடியாதே..."

"அப்ப... ஜமீன்தார்தான் பொய் சொல்றார்ங்கறீரா?"

"அவர் பெண்டாட்டி, பிள்ளைக்கு நேர்ந்த கதிய வச்சுச் சொல்றீங்களா... அதெல்லாம், மங்களாம்பாளை அழ விட்டதோட பலன்...."

தனியே இருவரும் இத்தனை ஒற்றுமையாய்ப் பேசினாலும் ஜமீன்தார் எதிரில் அதிகம் பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கியே இருப்பார்கள். டாக்டர், 'ஜோஸியமே பொய்' என்பார். இவர் 'இங்கிலீஷ் வைத்தியத்தில் ஒன்றுமே இல்லை' என்பார். எப்பொழுதாவது இருவரும் ஒரே பக்கத்தில் வாதிடுவதும் உண்டு. அது அபூர்வம்.

இப்பொழுது அந்த அதிசயம்தான் நடந்து கொண்டிருக்கிறது.

ஸ்டேஷன் மாஸ்டர், சினிமாவுக்குக் கதை சொல்லும் கதாசிரியன் மாதிரி, அடிக்கொரு தரம், லோகநாதனின் முகபாவனையைப் பார்த்தபடி உணர்ச்சி பாவம் குன்றாமல் ஆக்ஷனோடு சொல்கிறார்:

"நேத்து விடிகாலம்பற.... நாலு மணி சுமார் இருக்கும். படுக்கையில இருப்புக் கொள்ளலே. பாத்ரூம் போயிட்டு வந்து படுத்தேன். பக்கத்துல யாரோ உட்கார்ந்து தோளைத் தட்டின மாதிரி இருந்தது. படக்குனு எழுந்து உட்கார்ந்தேன். மெல்லிசா.... மஸ்லின் துணியாட்டம்.... புகையாட்டம்..... உங்க மூத்த சம்சாரம்....'உச்சந் தலையிலேயிருந்து, உள்ளங்கால் வரைக்கும் வேர்த்துப் போச்சு ஜமீன்தார்வாள்...."

"நல்லாப் பார்த்தீங்களா.... நம்ம ஜமீன்தாரிணிதானு.... எதுக்குக் கேட்கறேன்னு, நம்ம அம்மா, காஞ்சிபுரம் சேலைதானே கட்டுவாங்க.... நீங்க என்னவோ மஸ்லின், மிஸ்லின்கறீங்களே...."

டாக்டர் கவலையுடன் இடையில் புகுந்து கேட்கிறார்...

"டாக்டர் சார்.... சூட்சும சரீரத்துக்கும், மனுஷ சரீரத்துக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் உண்டு. இது பேப்பர்ல எழுதின படம் மாதிரி..காத்துல பறக்கும். பின்னது கல்லுல வடிச்ச சிலை மாதிரி.... த்ரீ டைமன்ஷன்லே இருக்கும். உங்களுக்கு பின்னதைப் பத்தித்தான் தெரியும். முன்னாலே சொன்ன விவகாரம், என்னை மாதிரி இட்சிணி உபாசகர்களுக்குத்தான் தெரியும்."

"சரிதான். சொல்லுங்க."

"சாட்சாத் நம்ம மங்களாம்பாள்தான். அபச்சாரம்... ஜமீன்தாரிணி பேரைச் சொன்னதுக்கு மன்னிக்கணும்...."

"நீர் விஷயத்துக்கு வாருமய்யா!"

லோகநாதன் பொறுமையிழந்து, சீறுகிறார்.

"அம்மா, என்னை எழுப்பிட்டு, கடகடன்னு ஒரு சிரிப்புச் சிரிச்சாப் பாருங்கோ... 'ஹக்'குனு தொண்டையில பந்தோ, என்னமோ வந்து அடைச்ச மாதிரி இருந்தது... 'த்தூ'ன்னு துப்பினேன். கிராங்காய் அளவு ரத்தம். அதுக்குள்ளே அம்மா, என்னைத் தொட்டு, என் காதோட சொன்னா, இப்ப நீ கக்கினது கொஞ்சம்டா... இன்னும் சில நாள்லே, உங்க ஜமீன்தாரும், அவரோட குடும்பமும், கடைசித் துளி ரத்தம் வரைக்கும் ஒட்ட கக்கி உயிரை விடப் போறாங்க. பார்த்துண்டேயிரு'ன்னு சொன்னா."

"............"

"அப்பத்தான் எனக்கு கொஞ்சம் பேச்சு வந்தது. 'தாயே, அதான் வருஷா வருஷம் ஜமீன்தார் படையல் போடறாரே... வாங்கிண்டு போகாம இது என்ன துவேஷம். யார் மூலமாப் பழி தீர்த்துக்கப் போறே'ன்னு கேட்டேன். அதுக்கு சொன்ன பதில்தான் தூக்கி வாரிப் போட வச்சுடுத்து...."

"என்ன....."

"நான்தான் நந்தகுமாரோட ஜோடியா வந்திருக்கிறவளை, எப்பவோ, பிடிச்சுட்டேனேன்னு சொன்னா பாருங்கோ, அதிர்ந்து போயிட்டேன்!"

லோகநாதனும் இந்த வார்த்தைகளால் தாக்குண்டு, பேச்சே எழாமல் உட்கார்ந்து விட்டார்.

(தொடரும்)

இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால், லிக்னைட் கனிமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாபெரும் ஒருங்கிணைந்த தொழில் வளாகம் நெய்வேலியில் உருவாக இயற்கை அடித்தளம் அமைத்தது. இது இன்று ஆசியாவிலேயே மிகப் பெரிய சுரங்கத் தொழிலகம்.



இந்தியாவிலேயே 95 சதவிகிதம் பழுப்பு நிலக்கரி இருப்பு கொண்ட நெய்வேலி, இன்று ஏராளமான மின்சக்தி, உரம் மற்றும் இரசாயன பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது.

லிக்னைட் உருவான வரலாறு...

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு, நெய்வேலியைச் சுற்றியுள்ள பரந்த பகுதிகளில் அடர்ந்த ஆதிகாலக்காடுகள் செறிந்து இருந்தன. யுகயுகமாக நிகழ்ந்த பூகோள மாற்றங்களின் காரணமாக இந்தக் காடுகள் மண்ணில் புதையுண்டு பழுப்பு நிலக்கரியாக உருமாற்றம் பெற்றன.

பழுப்பு வைரம்...

"பழுப்பு வைரம்" எனப்படும் பழுப்பு நிலக்கரி (லிக்னைட்) நிலக்கரிக் குடும்பத்தின் இளைய தலைமுறையைச் சேர்ந்த எரிபொருள். நெய்வேலிப் பகுதியில் சுமார் 33000 இலட்சம் டன் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதை பக்கெட் வீல் எக்ஸ்கவேட்டர் என்ற இராட்சத இயந்திரங்களைக் கொண்டு பழுப்பு நிலக்கரியை மின்சாரமாக, உரமாக, உலைக் கரியாக, இரசாயனமாக ரசவாதம் செய்து வருகிறது 1956ல் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன்.

வெற்றிப்பாதையில்...

இரவு பகலாக இராட்சத இயந்திரங்களைக் கொண்டு ஆண்டுக்கு 65 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரியை முதல் சுரங்கத்தில் வெட்டி எடுக்கப்படுகிறது. அதன் மூலம் முதல் அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

உருவாகிவரும் இரண்டாம் அனல் மின் நிலையம், சுரங்கம் விரைவில் தர இருப்பது 2070 மெகாவாட் மின்சாரம். எதிர்வரும் நூற்றாண்டை நெய்வேலி 320 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரியுடன், 3990 மெகாவாட் மின்சக்தியுடன் வரவேற்கத் தயாராகிறது.

நெய்வேலி யூரியா விவசாயிகளால் பெரிதும் விரும்பப்படும், வரப்பிரசாதம். நிலக்கரியையும், எரி எண்ணெயையும் மிச்சப்படுத்தும் 'லிக்கோ' தொழிலகங்களுக்குத் தரமான உலைக்கரி.

உன்னதம் – ஒரு வாழ்வு முறை :

ஆண்டுதோறும் பல்வேறு துறைகளில் அடுக்கடுக்காய் பரிசுகள் — காரணம் ஒரு குடும்பமாக உழைக்கும் 20,000 ஊழியர்களின் செயல்திறன்.

அதிக லாபம் ஈட்டும் 10 முதன்மைப் பொதுத்துறை நிறுவனங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள நெய்வேலி நாட்டின் பொருளியல் தொழிலியல் துறைகளில் தன் இணையில்லா முத்திரையைப் பதித்துள்ளது.



நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிட்.

(இந்திய அரசு நிறுவனம்) நெய்வேலி-607 801 ■ தமிழ்நாடு

நாளும் வளரும் நெய்வேலி

போதுமுங்க, சாமி....! போதுமடா சாமி!

—கா.சு. வேலாயுதன்

அவர்கள் நால்வரும் அழுத்தமாகச் சொல்லிவிட்டனர். அறுபது ரூபாய்க்குக் குறைவாக முடியாது என்று. அதை மீண்டும் ஆட்சேபிக்கும் வகையில் அத்தியப்பன் வாதிட்டுக் கொண்டிருந்தார்.

பழைய சுவர். அதுவும் பூச்சு வேலை எதுவும் செய்யாமல், மழையில் செம்மண் எல்லாம் கரைந்து, செங்கற்கள் முழுவதுமாகத் தலையை நீட்டிக் கொண்டிருந்தன. அத்தியப்பன் அந்த வீட்டை வாங்கி, குடி வந்து இரண்டு வாரம்தான் ஆகியிருந்தது! வீடு அழகாக இருந்தது. வாங்கிவிட்டார். ஆனால் அதற்கு முன்புறம் எதற்கோ கட்டப்பட்ட இந்தக் குட்டிச் சுவரை மட்டும் அப்படியே பாதியில் நிறுத்தியிருந்தனர். அது ஏன் என்று புரியவில்லை. அது அந்த வீட்டின் அழகைப் பாதிக்கிறது என்பதை உணர்ந்து, அதை இடித்துவிட்டு, அழகான பூந்தோட்டம் போட நினைத்தார் அவர்.

அந்தச் சுவரை இடிப்பதற்குத்தான் ஆட்களை வரச் சொல்லியிருந்தார். அவர்கள் என்னடாவென்றால், கூலி அதிகமாகக் கேட்டுவிட்டு இறங்கி வர மறுத்தனர்.

''இதப் பாருங்கப்பா.... நீங்க நாலு பேரும் சேர்ந்து என்ன செய்வீங்களோ தெரியாது. முப்பது ரூபா கொடுத்துடறேன். இந்தச் சுவத்தை இடிச்சு, கல்லு மண்ணெல்லாம் தனியாப் பிரிச்சுப் போட்டுடுங்க....''

''அதெல்லாம் ஒண்ணும் முடியாதுங்க. இந்த வேலையை நூறு ரூபாய்க்குக் கொறைஞ்சு யாருமே செய்யமாட்டாங்க! நாங்களாகக் கொண்டு அறுபது ரூபாய்க்குச் செஞ்சிடறோம்னு சொல்றோம்.... அதுக்காக நீங்க இவ்வளவு குறைவா 'ரேட்' பேசக்



கூடாது....!''

அந்தக் கூலியாட்கள் பேச்சிலிருந்து இனி 'ரேட்' இறங்கி வர மாட்டார்கள் என்பதை ஓரளவு யூகித்துக் கொண்டார் அத்தியப்பன்.

''சரீப்பா... உங்களுக்கும் வேண்டாம், எனக்கும்வேண்டாம்.நாற்பதுரூபாகுடுத்துட றேன்! என்ன அரை நேரத்து வேலைதானே? தாராளமாச் செய்யலாம்! செய்யறதுன்னுச் செய்யுங்க! இல்லையின்னு போயிட்டு வாங்க....!''

உறுதியாகச் சொல்லிவிட்டு நகர்ந்து கொண்டார்.

அவர்கள் மேலே எதுவும் பேசாமல் நகர்ந்துவிட்டனர். அத்தியப்பன் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டபடி, தன் மனைவி வசந்தா விடம் காப்பித் தயாரிக்கச் சொல்லிவிட்டு, வீட்டுக் கூடத்தில் ஈஸிச் சேரில் சாய்ந்தார்.

சிறிது நேரம்தான் ஆகியிருக்கும்.

''ஐயா.... சாமீ....!'' — வெளியே அழைப் புக் குரல் பவ்வியமாய்க் கேட்க அத்தியப்பன் வாசலில் எட்டிப் பார்த்தார்.

கூலி பேசிவிட்டுக் கட்டுப்படியாகாது என்று திரும்பிச் சென்ற நால்வரில் ஒருவன் மட்டும் அங்கு வந்து கைகட்டியபடி நின்று கொண்டிருந்தான். அவர் வீட்டிலிருந்து வெளியே வந்து, 'என்ன....?' என்னும் பாவனையில் அவனைப் பார்த்தார்.

''சாமீ.... அவுங்க வேலை செய்யமாட் டேனுட்டுப் போயிட்டாங்க....! நான் மட்டும் அதைச் செஞ்சு முடிச்சுடறேங்க....!''

''என்ன..... நீ மட்டுமா....?''

''ஆமாங்க சாமி.... இந்தச் சுவத்தை இடிச்சு, கல்லு மண்ணெல்லாம் பிரிச்சுப் போட்டுடறேன்! ஒருவேளை சோறு போட்டு இருபது ரூபா குடுத்துடுங்க சாமி....!''

முதலில் இருந்த பவ்யம் மாறாமல் கை கட்டிக் கொண்டு கேட்டான். இல்லை, கெஞ்சி னான்!

அத்தியப்பனுக்கு ஆச்சரியம்தாளவில்லை! நால்வரும் சேர்ந்து அறுபது ரூபாய்க்குக் குறைவாக ஆகாது என்று கூறிவிட்டுச் சென்ற வேலையை, இவன் மட்டும் இருபது ரூபாய்க்குச் செய்கிறேன் என்கிறானே...? பாவம் இவனுக்கு மட்டும் என்ன பசிக் கொடுமையோ, குடும்பத்தில் என்ன கஷ் டமோ, யார் கண்டது?

மனத்திற்குள் பரிதாபப்பட்டுக் கொண்ட வர், எப்படியோ காரியம் ஆனால் சரியென்று அவனை வேலை செய்யும்படி உத்தரவிட்டார். அவனும் தன் சட்டையைக் கழற்றி ஒரு புதருக்குள் வைத்துவிட்டு, கடப்பாரையை யும், இரும்புச் சட்டியையும் எடுத்துக் கொண்டு சுவரை இடிக்க ஆரம்பித்தான்.

அவன் ஒருவனேயானாலும் வேலையை வெகு துரிதமாகச் செய்யத் துவங்கினான். அவனுடைய முறுக்கேறிய உடல் வியர்வை யில் குளித்து, புழுதி மண்ணால் பிசுபிசுக்க ஆரம்பித்தது!

அவன் வேலை செய்யும் சுறுசுறுப்பை ஆச் சரியம் மாறாமல் பார்த்த அத்தியப்பன்





சுமார் முப்பது வருடங்களுக்கு முன் பெங்களூர் கன்டோன்மெண்ட் ஒடுகத்தூர் சுவாமி மடத்தில் ஃப்ளூட் மாலியின் கச்சேரி. மிகவும் உற்சாகமாக ராகம் தானம் பல்லவி வாசித்து முடித்ததும் கரகோஷம். அடுத்து என்ன வாசிக்கப் போகிறாரோ என்ற எதிர்பார்ப்புடன் கூடிய நிசப்தத்தில் பெண்கள் பக்கத்திலிருந்து ஒரு குழந்தைக் குரல், "மாமா, குழந்தை அழற மாதிரி வாசியேன்" என்று உரக்கக் கேட்டது! சபையினர் அனைவரும் திகைத்து, கோபத்துடன் குரல் வந்த திசையைப் பார்க்க, மாலியோ மிகவும் அமைதியான புன்முறுவலுடன், புல்லாங்குழலை உதட்டில் பொருத்தினார். சுமார் இரண்டு நிமிஷம் குழந்தை அழுவது போலவே பலவிதமாகப் புல்லாங்குழலில் இசைத்து சபையினர் எல்லோரையும் குதூகலிக்க வைத்து, கரகோஷத்தையும் பெற்றார்!

— சே. சுபாஷி.

விட்டினுள் நுழைந்தார்.

"வசந்தா...." என்று மனைவியை அழைத்தார்.

"என்னங்க?"

"வேலைக்கு ஒருத்தன் மட்டும் வந்திருக்கான்! அவனுக்கு ஒருவேளை சோறு போடறதாப் பேச்சு. அதனாலே அவனுக்குத் தனியா சோறு வடி....!"

உத்தரவிட்ட அவர், அந்தக் கூலிக்காரன் பற்றிய முழு விஷயத்தையும் தன் மனைவியிடம் கூறினார்.

"அப்படியா.... ஆச்சரியமா இருக்கே! அது சரிங்க... அவனுக்கு நாம சாப்படற சாப்பாடு போட்டா கட்டுப்படியாகாதே... நெறையச் சாப்பிடுவானே....?"

"ஆமாமா.... அவன் நெறையச் சாப்பிடுவான். அதனாலே போன வாரம் வாங்கின ரேஷன் அரிசியைப் போட்டுத் தனியா சாப்பாடு செய்."

"சரிங்க...." என்றபடி நகர்ந்தாள் வசந்தா.

சிறிது நேரம் கழித்து அந்தக் கூலியாளின் வேலையைப் பார்வையிட வெளியே வந்த அத்தியப்பன் ஆச்சரியத்தில் அமிழ்ந்து போனார்.

அங்கு —

அவ்வளவு சீக்கிரத்தில் சுவரை இடித்து முடித்து, செங்கல்லையும் மண்ணையும் தனித் தனியே பிரித்துப் போட்டுக் கொண்டிருந்தான் அவன்! அவனுடைய அபரிமித சுறுசுறுப்பினால் அவன்மேல் ஒருவிதக் கனிவு பிறக்க, அவனை நெருங்கினார் அவர்.

"என்னப்பா, வேலை முடிஞ்சுதா....?"

"என்னங்க....?"

"வேலை முடிஞ்சுதான்னு கேட்டேன்..."

"முடியப் போவுதுங்க....!"

"பரவாயில்லையே... சீக்கிரமா முடிச்சுட்டையே....! ஆமா, உம் பேரென்ன?"

"காளப்பனுங்க...."

"சரி, வேலையை முடிச்சுட்டுச் சாப்பிட வா!"

அழைத்துவிட்டு வந்து மீண்டும் கூடத்தினுள் அமர்ந்தார். வேலையைச் சுத்தமாக முடித்த காளப்பன், கை, கால் கழுவிக் கொண்டுசாப்பிடஉட்கார்ந்தான். அவனுக்கு வாசலில் ஓர் இலையைப் போட்டுச் சாப்பாடு பரிமாறினாள் வசந்தா.

"போதுமுங்க சாமி!"

ஒரு பிடி சோறு வைத்தவுடனேயே தடுத்தான் அவன். அதைச் சாப்பிட்டு முடித்தவுடன் மீண்டும் சோறு வைக்கப் போன வசந்தாவை,

"போதுமுங்க... போதுமுங்க சாமீ..."

என்று அவசரமாகத்தடுத்துவிட்டுஎழுந்து இலையை வீசிவிட்டுக் கைகழுவிக் கொண்டான்.

அத்தியப்பனுக்கும் வசந்தாவுக்கும் மேலும்மேலும் ஆச்சர்யம். இவனைப்போன்ற உழைப்பாளிகள் வயிறு முட்டத்தின்பார்கள் என்றுதான் கேட்டும், பார்த்தும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓர் உழைப்பாளி பட்டும்




அறிவு வளர இருமொழி

சிங்கப்பூர் அரசு, குழந்தை பெற ஆஸ்பத்திரிக்கு வரும் கர்ப்பிணிகளுக்குச் சில விளம்பரத் தாள்களைத் தருகிறது! இவை கு. க. பிரசாரம் அல்ல, இருமொழிக் கொள்கைப் பிரசாரம்! பிறந்த குழந்தைகளிடம், தாயையும் தந்தையையும் இரு வெவ்வேறு மொழிகளில் பேசும்படி இத்துண்டுப் பிரசுரம் கோருகிறது! இப்படிப் பிறந்த குழந்தையிடம் பேசினால், அது பள்ளிக்குப் போகுமுன் இரு மொழிகளிலும் பேச நன்கு தயாராகிவிடுமாம்! இரு மொழிகள் தெரிந்த மாணவ மாணவிகள், மற்றவர்களை விடப் பொது அறிவில் முன்னணியில் இருப்பார்களாம்! அதற்குத்தான் குழந்தை பிறக்கும் போதே அக்கறை காட்டுகிறது சிங்கப்பூர் அரசு!

ஆதாரம்: 'காரவான்.' சம்பத்குமாரி.



இதன் வகையிலுள்ள இதர ரகங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள் நியூட்ரமுல் விலைகளை. அனைத்தையும் விட மிக மிகத் தாழ்வு.
இதன் தரம் பிறவற்றை விட எப்படி மிக உயர்வாக இருக்கிறதோ அதேபோலத்தான்.



கேட்டீர்களோ என்னவோ, இதோ இன்னுமொரு காரணம் 'நியூட்ரமுல் வஸ்தாத்'தாக விளங்க.

நியூட்ரமுல்

daCunha/GCM/134/86 TM / R

* 86 பிப். நிலவரப்படி, தயாரிகள் உள்ளிட்டாகள், அனுபோகிப்பருக்கான உச்ச விலைகள்

படாமல் சாப்பிட்டுவிட்டு; 'போதும், போதும்' என்கிறானே!

அந்த ஆச்சர்யம் தீருவதற்குள் இன்னொரு ஆச்சர்யப்படக்கூடிய நிகழ்ச்சி நடந்தது.

அவனிடம் இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை நீட்டினார் அத்தியப்பன். அதை கை நீட்டி வாங்கியவன்,

''ஐயோ சாமீ.... எனக்கெதுக்குங்க இவ்வளவு ரூவா....? இது போதுமுங்க!''

ஒரு பத்து ரூபாயை எடுத்துக் கொண்டு, ஒரு பத்து ரூபாயை அவர் கையிலேயே திணித்துவிட்டு,

''அப்பப் போயிட்டு வர்றேங்க சாமீ...!'' என்று கூறிவிட்டு ஓட்டமாக ஓடிவிட்டான்.

''ஏ காளப்பா.... காளப்பா...!''

அத்தியப்பன் அவனை எவ்வளவு தரம் கூப்பிட்டும், காது கேளாதவன்போல் சென்றுவிட்டான்.

'இப்படியும் ஒருவனா? சரியான பைத்தியக்காரன்....!' என்று ஆச்சரியப்பட்ட அத்தியப்பனும், வசந்தாவும் வீட்டிற்குள் சென்ற பின்பும் அவனைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

எவ்வளவு நேரம் அவனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்களோ, அவர்களுக்கே தெரியவில்லை!

வாசலில் திடீரென கூச்சலும், குழப்பமும் கேட்டுப் பேச்சை நிறுத்திவிட்டு அதிர்ச்சியுடன் எழுந்தனர்.

''டேய், எவண்டா அவன், ஒண்ணும் தெரியாத பையன்கிட்ட ஏமாத்தி வேலை வாங்கினது....?''

''வெளியே வாடா....!''

''கொஞ்சம் ஏமாந்திருந்தா ஏச்சுப்புட்டுப் போய்டுவான்களே....

தொடர்ந்து பல கொச்சையான கெட்ட வார்த்தைகள்!

அத்தியப்பன் மிரண்டு போய் வெளியே வந்தார். வசந்தா அவர் பின்னாலேயே பதுங்கினாள்.

வெளியே —

பேரம் பேசிவிட்டுத் திரும்பிச் சென்ற மற்ற மூவரும் காளப்பனும் நின்றிருந்தனர். காளப்பன், 'திருதிரு'வென விழித்தபடி அவர்களுக்கு மத்தியில் ஏதும் பேசாமல் நின்று கொண்டிருந்தான். மற்ற மூவரும் தம் இஷ்டப்படி வாய்க்கு வந்த வார்த்தைகளால் அத்தியப்பனைத் திட்டிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் வார்த்தைகளிலிருந்து, அவர்களுக்குள் 'தண்ணி' புகுந்திருப்பது அத்தியப்பனுக்குப் புலப்பட வெகு நேரம் ஆகவில்லை! விவரம் புரியாத அந்த அப்பாவிக் காளியப்பனைக் காட்டிப் பணம் பறிப்பதே நோக்கமாய் அவர்கள் வந்திருப்பதையும் உடனே அவர் உணர்ந்து கொண்டார்.

அவர்களைச் சிறிது நேரம் அப்படியே நிற்க விட்டால் இந்த வீதிக்குப் புதிதாய்க் குடி வந்திருந்த தன்னுடைய மானத்தை அவர்கள் கப்பலேற்றி விடுவார்கள் என்பது தெளிவாகப் புரிந்தது அத்தியப்பனுக்கு.

எனவே, மேலே எதுவும் பேசாமல் அவர்களைச் சமாதானப்படுத்தி, அவர்கள் கேட்ட தொகையைக் கொடுத்தனுப்பிவிட்டு, 'போதும்டா சாமி....' என்று கூடத்து ஈஸி சேரில் மீண்டும் சாய்ந்தார் அத்தியப்பன்.

புதிய ஆறு



• பழனியாண்டி



• டி. ஆர். பாலு

எம்.பி.க்கள்



• ஜெயந்தி



• ஆர். ஏ. கோபால்

பலரும் அறியாத செய்திகள்!



• தாத்தியல் வின்சென்ட்



• ஜி. சுவாமிநாதன்

பழனியாண்டியைத் தேடினார்கள்!

ஸ்டீபன் காங்கிரஸின் செயலாளராக இருந்தபோது தமிழ்நாடு காங்கிரஸின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பிரச்னை வந்தது. பல் வேறு பெயர்கள் பரிசீலனைக்கு வந்தன. ஆனால் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நபர் கிடைக்கவில்லை. இந்தச் சமயத்தில்தான் பழனியாண்டியின் பெயர் சிபாரிசு செய்யப் பட்டது. ஸ்டீபனிடம் தெரிவிக்கப்பட்ட போது, 'உடனே அவரைச் சந்திக்க வேண் டுமே' என்றார். சென்னை முழுவதும் வலை விசித் தேடினார்கள். எந்தப் பெரிய ஹோட்ட லிலும் அவரைக் காணவில்லை. கடைசியில் தேனாம்பேட்டையில் உள்ள, தொழிலாளர் கள் தங்கும் விடுதியான ஜீவா இல்லத்தில் தான் அவரைக் கண்டு பிடித்தார்கள். தலைவ ராவதற்கு முன்னால் சென்னை வந்தால் பழனி யாண்டி தங்கியது ஜீவா இல்லத்தில்தான். மிகவும் குறைந்த வாடகை என்பதால் மட்டு மல்ல; தாம் ஒரு தொழிலாளர் சங்கத்தின் தலைவர் என்றாலும் தம்மைத் தொழிலாளர் களுடன் முழுமையாக இணைத்துக் கொண் டுள்ளதை உணர்த்துவதற்காகவும்தான்.

டி. ஆர். பாலுவின் மாமனார்!

சென்னை மாநகராட்சி தேர்தல் நடந்த நேரம். தி.மு.க.வில் ஒரு பிரச்னை தோன்றி யிருந்தது. அண்ணா அவர்களை 'அறிஞர்' என்ற அடைமொழியுடன் கூப்பிடக்கூடாது

என்று சி.பி. சிற்றரசு போன்றவர்கள் கூறினார்கள். அப்போது சென்னை மாநகர தி.மு.க. செயலாளராக இருந்தவரும் சிற்றரசு பக்கம் சேர்ந்துவிட்டார். துணைச் செயலாளராக இருந்த செங்குட்டுவன், தேர்தலில் பொறுப்பேற்று துடிப்புடன் செயல்பட்டார். தி.மு.க. வெற்றி பெற்றது. அதே போல் அவரது மருமகனை டி.ஆர். பாலுவும் சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளராக விளங்கி, தி.மு.க. வெற்றி பெறுமா என்ற சந்தேகம் நிலவியபோது முதல் சுற்றிலேயே வெற்றி பெற்று தி.மு.க.விற்கு ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியிருக்கிறார். ஆனால் இப்போது மாமனார் செங்குட்டுவன் அ.தி.மு.க.வில் இருக்கிறார்!

ஜெயந்தி பறந்தார்; திரும்பி விரைந்தார்!

சென்னை டீ.வி.யில் ஆங்கிலச் செய்தி வாசித்துக் கொண்டிருந்தபோது ஜெயந்தி நடராஜன் முகம் நேயர்களைக் கவர்ந்திருக்கிறது. ராஜ்ய சபா தேர்தலில் காங்கிரஸ் டிக்கெட் தமக்குக் கிடைக்கும் என்று சிறிதும் நினைக்கவில்லையாம் இவர். ஒரு வழக்கில் வாதாடிவிட்டு வெளியே வருகையில், காங்கிரஸ் தலைமைப் பீடம் இவரை டெல்லி வருமாறு அழைத்தது தெரிவிக்கப்பட்டது. அன்று மாலையே டெல்லி விரைந்தார். தங்கபாலு டெல்லி விமான நிலையத்தில் அவரை வரவேற்று பிரதமர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். மறுநாள் காலையில் சென்னை திரும்பி உடனே மனு தாக்கல் செய்தார் ஜெயந்தி. பிரபல வக்கீல் வி.பி. ராமனிடம் ஜூனியராக இருந்துவிட்டு இப்போது தனியாகவே பிராக்டீஸ் செய்கிறார் இவர்.

ஆர். டி. கோபாலுக்கு ஆறுதல்

மதுரை சம்பத்தைச் சேர்ந்த இவர், ஓர் உடற்பயிற்சி ஆசிரியர். 1980 எம்.எல்.ஏ. தேர்தலில் வெற்றி பெற்ற இவருக்கு 1984ல் டிக்கெட் கிடைக்கவில்லை. காரணம்? இவர் ஜெயலலிதா கோஷ்டியைச் சேர்ந்தவர். எம்.ஜி. ஆர். அமெரிக்காவில் இருந்து வந்த பிறகு டிக்கெட் கிடைக்காத விஷயத்தைச் சொன்னாராம். அடுத்த வாரத்திலேயே மதுரை பல்கலைக் கழக சிண்டிகேட் உறுப்பினர் பதவி கிடைத்தது. பின்னர் சமீபத்தில் எம்.ஜி. ஆர். நெல்லைக்குச் சென்றபோது மதுரை விமான நிலையத்தில் தலைவரைச் சந்திக்கலாம் என்று கோபால் சென்றிருந்த போது ஒரே கூட்டம். ஒதுங்கிநின்றுவிட்டார். ஆனால் எம்.ஜி. ஆர். இவரைப் பார்த்துவிட்டார். "என்ன, உன்னை சென்னைக்கு வரச் சொன்னேனே? ஏன் வரவில்லை?" என்று கிட்டே அழைத்துக் கேட்டவுடன், ஒரு சந்தோஷ அதிர்வு கோபாலுக்கு. சென்னைக்கு வந்து தலைவரைச் சந்தித்தபோது, 'மனு தாக்கல் செய்துவிடு' என்று சொல்லிவிட்டார் தலைவர். 'எங்கத் தலைவர் கட்சித் தொண்டனை என்றைக்கும் மறக்க மாட்டாருங்க' என்று சொல்லி மகிழ்கிறார் கோபால்.

நாஞ்சில்வின்சென்ட்பெற்றதண்டனை

திருச்சி கிளைவ் ஹாஸ்டலில் (கருணாநிதி காலத்தில்) மாணவர்கள் தாக்கப்பட்ட நேரம். சட்டசபையில் பார்வையாளர்கள் காலரியிலிருந்து இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நோட்டீஸ் வீசப்பட்டது. வீசியவர்களில் ஒருவர் இன்றைய எம்.பி. நாஞ்சில் வின்சென்ட். அதற்காக இவருக்கு கிடைத்த தண்டனை ஒரு நாள் சிறைவாசம். அ.தி.மு.க.வில் பேண்ட் போடும் நபர்கள் மிகவும் குறைவு. அவர்களில் இவரும் ஒருவர்.

ஹோமியோபதி சுவாமிநாதன்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜி. சுவாமிநாதன் பல்வேறு கட்சிகளில் இருந்திருக்கிறார். தமிழரசுக் கழகம், சுதந்திரா கட்சி, காங்கிரஸ், பின்னர் சுயேச்சையாக சில காலம்; அப்புறம் அ.தி.மு.க. மா.பொ.சி.க்கு ரொம்ப வேண்டியவர். அ.தி.மு.க.வில் இவர் சேர்ந்த பிறகு தஞ்சை மாவட்டத்தில் சுவாமிநாதன் என்றால் இரண்டு பேர் பெயர் ஞாபகம் வரும் எம்.ஜி. ஆருக்கு. ஒருவர் மாவட்டச் செயலாளராக இருக்கும் வி.வி. சுவாமிநாதன். இன்னொருவர் இவர். தஞ்சையில் ஒரு ஹோமியோபதி மருந்து தயாரிக்கும் கம்பெனி நடத்துகிறார். 'காங்கிரஸ் கட்சியில் இவரைச் சேர்த்துக் கொள்ள மாட்டேன்' என்று பிடிவாதமாக இருந்தார் ஜி. கே. மூப்பனார். ஆனால் சுவாமிநாதனும், இப்போது அ.தி.மு.க.வில் மந்திரியாக இருக்கும் ஒருவரும் அப்போது கவர்னராக இருந்த ராஜஸ்தான்காரர் ஒருவரைப் பிடித்து காங்கிரஸில் நுழைந்த கதை சுவாரஸ்யமானது!

— கௌசல்யா

படங்கள்: சுபா



"தினசரி ஆறு மணி நேரத்துக்கு மேல் யாரும் தூங்கக் கூடாதுன்னு மானேஜர் அவசர உத்தரவு போட்டுவிட்டார்.—"

"ஏன்?—"

"அவனவன் ஓவர் டைம் போட்டுக் கொண்டல்லவா ஆபீசில் தூங்கறான். அதனால்தான்!—"

— லலிதா செல்லப்பா



'பாரிஸ் அமெரிக்காவில் தானே இருக்கிறது?'



பெங்களூர் ராஜாஜி நகரிலுள்ள போஸ்டாபீசுக்குப் போய் பாரீஸுக்கு ரிஜிஸ்தர் தபாலில் அனுப்ப வேண்டிய ஒரு கடிதத்தைக் காட்டி, 'இதற்கு எவ்வளவு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும்?' என்று கேட்டேன். போஸ்ட் மாஸ்டர், அதை எடை போட்டுப் பார்த்து, ரூ. 4.90க்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும்' என்று சொன்னார். ஆனால், 'இன்று ரிஜிஸ்தர் தபால் களை வாங்கும் நேரம் தாண்டிவிட்டது. அதனால் மொபைல் போஸ்டாபீசுக்கு போங்கள்'' என்று கூறினார். நடமாடும் நிலையத்தில் ரூ. 5.40க்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும்' என்று ஒருவர் சொன்னார். 'போஸ்டாபீசில் 4.90க்குத்தான் ஸ்டாம்பு ஒட்டச் சொன்னார்கள்' என்று எவ்வளவோ நான் எடுத்துச் சொல்லியும் அவர் கேட்கவில்லை! வேறு வழியில்லாமல் அவர் கேட்டபடி ஸ்டாம்பு ஒட்டிக் கொடுத்தேன். ரசீது வாங்கிக் கொண்டு அங்கிருந்து கிளம்பும்போது அந்தக் கிளார்க் தன் சகாவிடம் கேட்டுக் கொண்டிருந்தார்: 'பாரீஸ் அமெரிக்காவில்தானே இருக்கிறது?' என்று!

('இந்தியன் எக்ஸ்பிரஸ் கடிதம்')

— அனிதா ராமச்சந்திரன்

* *



சாப்பிடுபவர்: ''என்னப்பா இது... சாப்பாட்டில நரைமுடி இருக்கு பார்த்தியா...?''

சர்வர்: ''என்ன சார் பண்றது.. 'ஹெட்குக்' இன்னைக்கு தலைக்கு 'டை' அடிக்கலிட்டு வரலியே...!''

— ஆர். ஸ்ரீ வெங்கடேஷ்.



அவர்: ''ஆபீஸ்ல கையை நீட்டி லஞ்சம் வாங்கக் கூடாதுன்னு எங்க மானேஜர் கண்டிப்பா சொல்லிட்டார்...''

இவர்: ''அதுக்குன்னு! இப்படி எல்லார் டேபிள் மேலேயும் உண்டி வைச்சிருப்பது கொஞ்சமும் நல்லாயில்லே...''

— வி. சாரதி டேச்சு.



அவன்: ''நேத்து நான் தூங்கும்போது சரியா மணி ஒன்னு...!''

இவன்: ''அது வரைக்கும் என்ன செஞ்சே?''

அவன்: ''காலையிலே ஆபீசிலே நுழைஞ்சதிலேர்ந்து நல்லா வேலை வாங்கிட்டார் மேனேஜர்...!''

— ஆர். ஸ்ரீ வெங்கடேஷ்.

''உங்க பையனை ஸ்கூலுக்கு அனுப்ப ஏன் இரண்டு சைக்கிள் ரிக்ஷா ஏற்பாடு பண்ணியிருக்கிங்க?—

''ஒன்னுல பையன் போவான், மத்ததுல அவன் புத்தகங்கள் போகும்.''

— ராதா வாசுதேவன்

லதா: ''என்ன உன் கணவர் காலேல ஒரு தடவை ஷேவ் பண்ணிக்கிறார், சாயங்காலம் ஒரு தடவை ஷேவ் பண்ணிக்கிறார் போலிருக்கே?''

சுதா: ''ஆமாம், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுதாம்...!''

— வி. சாரதி டேச்சு.



அந்தக் கனிவுதான் கண்ணதாசன்!

ஏ.பி. நாகராஜனைத் 'தென்றல் திரை' இதழில் பலமுறை தாக்கி எழுதி வந்தார் கண்ணதாசன். ஏ.பி.என். கதாநாயகனுக நடித்த 'பெண்ணரசி' என்ற படத்திற்குக் கவிஞர் எழுதிய விமரிசனம் பயங்கரமானது. "ஏ.பி. நாகராஜன் இனிமேல் திரைப் படத்தில் நடிக்காமல் இருப்பது நல்லது" என்றே அந்த விமரிசனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அவரது எழுத்து பலித்ததோ, யோசனை சரியானது என்று ஏ.பி.என். ஏற்றுக் கொண்டாரோ தெரியவில்லை. 1955 ஆம் ஆண்டிலிருந்து 1965 ஆம் ஆண்டு வரை பத்து ஆண்டுகள் வெள்ளித் திரையில் அவர் தலை காட்டவில்லை. திருவிளையாடலில்தான் (1965ல்) நக்கீரராக சிறு பாத்திரம் ஏற்ருர். 1956ல் சாட்டை என்ற வார இதழ் ஒன்றினை நடத்தி கவிஞரையும் அவர் சார்ந்திருந்த இயக்கத்தையும் ஏ.பி.என். தாக்கி எழுதி வந்தார். அதைப் பொறுத்துக் கொள்ள இயலாத கவிஞர், சாட்டையை அடக்குவதற்குச் சண்டமாருதம் என்ற வார ஏட்டைத் தொடங்கி ஏ.பி.என்னுக்கும் ஏனையவர்களுக்கும் அர்ச்சனையை வழங்கி வந்தார்.

1963ல் ஏ.பி.என். நவராத்திரி என்ற படத்தைத் தயாரித்து வந்த சமயத்தில் தமிழ்த் திரை உலகில், கவிஞரின் பாடல்கள் உச்சம் பெற்றிருந்தன. அதனுல் நவராத்திரிக்குப் பாடல் எழுதும் பொறுப்பை க்விஞரிடம் ஒப்படைத்தார் ஏ.பி.என். கவிஞரும் பழைய பகைமையை நினைக்காமல், பாசத்துடன் சென்று அற்புதமான பாடல்களை உருவாக்கித் தந்தார். அந்தப் படத்தில் ஒலித்த பல பாடல்கள் இன்னும் கணீர் என்று காதில் ஒலிக்கின்றன.

அந்தச் சமயத்தில் கவிஞர் கந்தலீலாவைத் தயாரிக்க முனைந்திருந்தார். திடீரென்று ஒரு நாள், "இந்தப் படம் புராண சம்பந்தமாக இருப்பதால் இதற்கு வசனம் எழுதுவதற்கு ஏ.பி. நாகராஜனை ஒப்பந்தம் செய்தால் என்ன?' என்று இயக்குனர் ஜி. ஆர். நாதனிடமும், தமது உதவியாளரிடமும் கேட்டார் கவிஞர். அவர்கள் ஏற்றுக் கொண்டனர். உடனே ஏ.பி.என். வரவழைக்கப்பட்டார். அவரிடம் விஷயத்தைச் சொன்னுர் கவிஞர். அவரும் ஒப்புக் கொண்டார்.

சில நாட்கள் கடந்தன. திடீரென்று ஒரு

வாசகர் குமுறல்

தீக்குளிப்பது

பக்கத்துத் தெருவில் எவர் மனத்தையும் கரைய வைக்கும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. தன்னைப் பெண் பார்க்க வந்தவர் 'பிடிக்கவில்லை' என்று சொல்லிவிட்டதால் மனம் நொந்துமண்ணெண்ணெய் ஊற்றிக்கொளுத்திக் கொண்டு இறந்துவிட்டாள் ஒரு பெண். வயது இருபது! பெண் பார்க்க வந்தவர்தன் பஸ் ஏறுவதற்குள் இப்படி நடந்து விட்டது! ஒருமாப்பிள்ளை'வேண்டாம் என்றுசொல்லி விட்டால் வேறு ஆண்களே உலகில் இல்லையா? அப்படி யாருமே மணம் புரிய முன் வராவிட்டால்தான் என்ன? உலகில் பிறந்ததே திருமணம் செய்து கொள்ளத்தானு? வேறு எத்தனையோ நற்பணிகளில் கவனத்தைச் செலுத்தி சமூகத்தில் ஓர் இடத்தைப் பெற முயலலாமே? ஆத்ம திருப்தி அடையலாமே! இனியாகிலும்இதுபோன்றகோழைத்

நான் காலையில் "ஆமா இது புராணப் படமா இருக்கிறதுனாலே நாகராஜனையே 'டைரக்ட்' செய்யச் சொன்னால் என்ன?" என்று இயக்குனர் ஜி. ஆர். நாதனிடமே கேட்டார் கவிஞர். அவரும் பலமாக ஆதரித்தார். திட்டம் ஏ.பி.என்னுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் ஒப்புக் கொண்டார். என்றாலும், படம், ஏற்கெனவே எடுக்கப்பட்டிருந்த பாடற் காட்சிப் படப்பிடிப்புடன் நின்று விட்டது.

இறுதியில் ஏ.எல். சீனிவாசன் 'கந்தன் கருணை' என்ற தலைப்பில் அந்தப் படத்தை உருவாக்கி வெளியிட்டார். 'கவிஞர் ஏற்கெனவே எழுதிய பாடல்களில் ஒன்று இந்தப் படத்தில் பயன்படுத்தப்பட்டது.''

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் கவிஞரும், ஏ.பி.என்னும் ஒருவரையொருவர் பத்திரிகையில் தாக்கி மிக மோசமாக விமரிசனம் செய்தபோதிலும் அவற்றையெல்லாம் மறந்துவிட்டு இவர் திறமையை அவரும், அவர் திறமையை இவரும் உணர்ந்து தத்தமது படங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டதுதான்.

கவிஞரின் தென்றல் வார இதழில் பல அச்சுக்கோப்பாளர்களில் பதினைந்து வயதுள்ள துரை என்னும் பையனும் இருந்தான். அவன் உருவத்தில் சிறியவனாக இருந்ததால் உதவி ஆசிரியர் ஏ.கே. வில்வம், 'நைன் பாயிண்ட்' என்று அச்சக மொழியில் அவனுக்குப் பெயர் சூட்டியிருந்தார். அது புதுமையாக இருந்ததால், அலுவலகத்தில் பணி புரிந்த அனைவரும் 'நைன் பாயிண்ட்' என்றே அச்சிறுவனை அழைத்து வந்தார்கள். ஆனால் கவிஞர் மட்டும் அவனை துரை என்றே கூப்பிடுவார். அச்சுக்கோப்பதுடன், ஊழியர்களுக்கு தேநீர் வாங்கி வருவதும் துரையின் பணிகளில் ஒன்று.

ஒருநாள் தேநீர் வாங்கி வர கவிஞர் அவனைத் "துரை! துரை!" என்று அழைத்தார். அவர் அழைத்தது அவன் காதில் விழவில்லை. கோபமுற்ற கவிஞர், "டேய் நைன் பாயிண்ட்" என்று கூக்குரலிட்டார். அந்தக் குரல் அவனுக்குக் கேட்டுவிட்டது. உடனே கவிஞர் இருந்த அறைக்கு ஓடிச் சென்றான். கவிஞர் டீ வாங்கி வரச் சொன்னார்.

துரை தேநீர் வாங்குவதற்குச் செல்ல முயன்றான். ஆனால் அதற்குள் அவன் கண்களில் நீர் துளிர்த்துவிட்டது. ஓவென்று அழுதேவிட்டான்.

கவிஞருக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னடா ஆச்சு?" என்று பதறினார்.

"இந்த ஆபீசில் எல்லோரும் என்னை நைன் பாயிண்ட்டுன்னுதான் கூப்பிடுறாங்க! அதைப் பற்றி நான் கவலைப்படாததற்குக் காரணம் நீங்கள் துரைன்னு கூப்பிட்டு வந்ததுதான். ஆனா இப்போ நீங்களும் நைன் பாயிண்ட்டுன்னு கூப்பிட ஆரம்பிச்சிட்டீங்களே'' என்று சொல்லியபடி விசும்பி விசும்பி அழுதான்.

கவிஞர் அவனைத் தட்டிக் கொடுத்து சமாதானப்படுத்தி அனுப்பினார். அறைக்குச் சென்ற உதவியாளரிடம், "இந்தச் சின்னப் பய எவ்வளவு சென்சிடிவாக இருக்கான்?" என்று சொல்லி வியந்தார். அப்போது அவரது கண்களும் கலங்கின. அந்தக் கனிவுதான் கண்ணதாசன்!

— தமிழ்ப்பித்தன்.

எதற்காக?

தனமான காரியங்களில் பெண் குலத்தைச் சேர்ந்த யாரும் இறங்கக் கூடாது என்ற ஆதங்கத்தில் இதை எழுதுகிறேன்.

— லால்குடி சக்தி. முத்தையன்னா.

புத்தகம் கொடுத்தும் புண்ணியமில்லை

ஏழைக் குழந்தைகளுக்கெல்லாம் அரசாங்கம் பாட நூல்களை இலவசமாகத் தருவதாய் வாக்களித்து, இந்த இலவசப் பாடநூல்கள் அரையாண்டுத் தேர்வின் போதுதான் முக்கால்வாசி மாணவர்களுக்குக் கிடைக்கிறது. இந்நிலையில் ஆசிரியர்களோ பள்ளி தொடங்கிய நாளிலேயே புத்தகம் கொண்டு வரும்படி கட்டளையிடுகிறார்கள். புத்தகம் கொண்டு வராதவர்களை தண்டிக்கிறார்கள்.

அடிக்கு அஞ்சும் குழந்தைகள் அழுது அடம் பிடிப்பதால் பெற்றோரை வற்புறுத்திப் புத்தகத்தை ஆரம்பத்திலேயே வாங்கி விடுகின்றனர். தாமதமாய் அரசு புத்தகம் கொடுத்தும் பிரயோஜனம் இல்லை.

— கலைப்பிரியன், காரைக்குடி.

சரியான தழுவல்!

சமீபத்தில் மதியம் டி.வி.யில் 'Adaminte Variyellu' என்ற மலையாளத் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. அப்படம் பள்ளி செல்லும் இளம் பருவத்தினரோடு பார்க்கத் தக்க படமல்ல. 90% சோரம் போன பாத்திரங்களின் திமலாட்டமாகவே படம் அமைந்திருந்தது. (அலுவலகம் செல்லும் ஒரு பெண்மணி மட்டும் விதிவிலக்கு.)

முதலாளி வேலைக்காரியோடு தொடர்புடையவர். அவர் மனைவி — மது அருந்தும் எஜமானிக்கு ஒரு கள்ளப் புருஷன். இவர்களின் மகள் ஒரு விடலைப் பையனுடன் காதல் கடிதங்கள் பரிமாறிக் கொள்கிறாள். 'இப்படத்தில் மூன்று பெண்களின் பிரச்னைகள் அலசப்பட்டிருக்கின்றன' என்பதெல்லாம் சரியான தழுவல்! டைரக்டர் ஜார்ஜுக்கு சமுதாயப் பொறுப்பு இருப்பதற்கு இப்படத்தில் ஆதாரம் இல்லை. இத்தகைய படங்களைக் 'கலைப்படம்' என்று கூறிக் கொண்டு மதிய நேரத்தில் அகில இந்திய ரீதியில் ஒளிபரப்ப வேண்டுமா?

— வி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்.



இவரை....

......வர்ணித்தவர்



* பிரும்மரிஷி.



* "ஓவர் உழைப்பு!"



* ஆர். மைதீன் பாட்சா, வல்லம்

? வைஜயந்தி மாலாவை தலைமைச் செயலாளர் அந்தோணி வர்ணித்துப் பேசியிருப்பதைப் பற்றி....?

! இது என்ன ஸார் பெரிய விஷயம்? அவங்க அம்மா வஸுந்தரா தேவி மங்கம்மா சபதத்துல அளித்த தோற்றத்தை நினைச்சுப் பார்த்து மகிழ்கிற கிழவர்கள்கூட இன்னிக்கும் இருக்காங்களே!

* கே.வி.எஸ். மணியன், குடியாத்தம்

? 'ஆகஸ்டு 15 குடியரசு தினமா, சுதந்திர தினமா என்றுகூடத் தெரியாதவர்கள் காங்கிரஸ்காரர்கள்' என்று காளிமுத்து கிண்டல் செய்கிறாரே?

! எல்லாம் எம்.ஜி. ஆர். இருக்கவே இருக்கிறார்; மன்னிப்புக் கேட்டுக் கொள்வார்' என்கிற தைரியம்தான்!

* யசோதா மைந்தன், பெங்களூர்

? கொடை, நன்கொடை — என்ன வித்தியாசம்?

! முன்னது சரித்திர புராண கால அரசர்களைப் பற்றி இலக்கியங்கள் பேசுவது. இன்றைய நன்கொடை சமாச்சாரம் கழுத்தில் துண்டு போட்டுப் பெறப்படுவது!

* டி. எல். ரெட்டி, வேளிடுபட்டி *

? தமிழகத்தைப் பாதிக்கும் எய்ட்ஸ் எது— லாட்டரி இட்டமா? சாராயக் கடையா?

வைஜயந்திமாலாவைத் தலைமைச் செயலர் வர்ணித்துள்ளாரே?

* ஆர். எஸ். இராஜ், சீர்காழி

? அந்தக் கால ஆட்சி முறைக்கும் இப்போதைய ஆட்சி முறைக்கும் என்ன வித்தியாசம்?

! அப்போது இரவில் மன்னர்கள் மாறு வேஷம் போடுவார்கள்; இன்று அரசியல்வாதிகள் பகல் வேஷம் போடுகிறார்கள். அப்போது சிலர் சாசனங்கள் எழுதினார்கள்; இன்று சாதனைத் தூண்கள் நடுகிறார்கள். அன்று குறுநில மன்னர்கள் மட்டும் கப்பம் செலுத்தினார்கள்; இன்று காரியம் ஆக வேண்டும் என்பதற்காகத் தொழிலதிபர் முதல் தொழிலாளி வரை எல்லாரும் கப்பம் செலுத்துகிறார்கள்.... எட்செட்ரா, எட்செட்ரா.....



"இந்திராவே சொன்னது!"

* ஒண்டம்



! இவ்விரண்டையும்விடக் கொடுமையானது கத்தி அரசியல்.

* எம். எம். ஷர்புதீன், தோப்புத்துறை

? அப்துல் ரகுமான், மேத்தா, மீரா — யாருடைய புதுக் கவிதையில் மனத்தைப் பறிகொடுப்பீர்கள்?

! அப்துல் ரகுமானின் பால் வீதியைப் படித்து சிந்தனை வயப்படலாம். மேத்தாவின்

கண்ணீர்ப் பூக்களில் நெகிழ்ந்து போகலாம். ஆனால் நெஞ்சத்தைப் பறிகொடுக்க வேண்டுமானால் மீராவின் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் படித்தாக வேண்டும்.

* வி. பாலன், கொடைக்கானல்

? அரசியல்வாதிகளின் பொய்யைக் கேட்டு சிரித்ததுண்டா?

! 'இந்திரா காந்தியே என்னிடம் கூறினார்' 'காமராஜரே என்னிடம் சொன்னார்' என்றெல்லாம் அரசியல்வாதிகள் பேசுகிறார்கள். சமீபத்தில்கூட, 'எம்.ஜி. ஆர். ரசிகர்களை நாம் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று இந்திராவே என்னிடம் சொன்னார்' என்று மின்துறை அமைச்சர் ராமச்சந்திரன் பேசியதாகச் செய்தி வந்திருக்கிறது. இவையெல்லாம் மெய்யா பொய்யா என்று நிரூபிக்க நம்மால் முடியாது என்றாலும் சிரிப்பு வருவது என்னவோ நிஜம்!

* கே.வி.எஸ். மணியன், குடியாத்தம்

? தங்க நெல்லிக் கனி, வெள்ளிச் செங்கோல் என்று ஒவ்வொரு கூட்டத்திலுமா? எப்படி சார்?

! சமீபத்தில் சென்னைக்கு வந்த வி.பி. சிங்குக்கு சென்னை தொழில்—வர்த்தக சங்கம் ஒரு நினைவுச் சின்னம் பரிசளிக்க முற்பட்டபோது அவர் அதை வாங்கிக் கொள்ளத் தயங்கியதை நிதர்சனமாகப் பார்க்க முடிந்தது. அப்படித் தயங்குவதுதான் நியாயம். பெற்றுக் கொண்டே ஆக வேண்டிய தர்ம சங்கட நிலை தோன்றுமேயானால் அத்தகைய பரிசுகளைத் தனக்குத் தரப்பட்டதாக எண்ணாமல் பதவிக்குத் தரப்பட்டதாகக் கருதி அரசு கஜானாவில் சேர்ப்பிப்பதே நேர்மை. அல்லது கட்சி சார்பில் தரப்பட்டிருந்தால் கட்சி அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும். ஆனால் நியாயம், நேர்மை, தர்மம் இவையெல்லாம் நம் நாட்டில் மதிப்பிழந்து வெகு காலம் ஆகிவிட்டதே!

* எம். சிவக்குமார், குடியாத்தம்

? எம்.ஜி. ஆர். ஆட்சியில் அதிகம் அவதிப்படுவது அதிகாரிகளா? மக்களா?

! சபாஷ்! எதிர் கட்சிகள் நடத்தக் கூடிய பட்டிமன்றத்துக்குச் சரியான தலைப்பு!

* ஜி. ராஜசேகரன், வலங்கைமான்

? '25 மந்திரிகளில் 15 பேரை பொது மக்களில் யாருக்குமே தெரியாது' என்று முசிறிப்புத்தன் கூறியுள்ளாரே?

! 'ஒவராய் உழைத்துவிட்டார்; ஓய்வு கொடுக்கலாம்' என்று கூறியதன் மூலம் அவரையே இருக்குமிடம் தெரியாமல் அடிக்க முடிவெடுத்துவிட்டாரே எம்.ஜி. ஆர்!

* மூ. நவீன், பெங்களூர்

? நடிகர் நடிகையரின் திறமைகளை ஒப்பிட்டுக் கேள்வி கேட்காமல் மூக்கு உதடு போன்றவைகளை ஒப்பிட்டுக் கேள்வி கேட்போர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! நடிப்புத் திறமையை நம்பி ஃபீல்டுக்கு வராமல், பலர் கண், மூக்கு, உதடு போன்றவற்றை நம்பித்தானே ஃபீல்டுக்கு வருகிறார்கள் என்பதால் அத்தகைய கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேனோ இல்லையோ, பொறுத்துக் கொள்வேன்.

* பாளை உதயம், நெல்லை—2

? நெல்லை மாவட்டம் வீரவநல்லூரில் புதிய வழித் தடங்களில் பஸ் விடும் அரசு விழாவில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுக்குப் பதில் எம்.ஜி. ஆர். சினிமாப் பாடல் ஒலி பரப்பப்பட்டது பற்றி?

! கட்சிக்கும் ஆட்சிக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கும் தமிழகமே எம்.ஜி. ஆரின் தனிச் சொத்து என்பதுபோல் எண்ணம் வளர்த்துக் கொண்டிருக்கிறது என்பதற்கும் மேலும் ஒரு சான்று.

* என். கல்யாண் குமார், ஈரோடு

? அண்மையில் படித்த நல்ல புத்தகம் ஒன்று....?

! 'சென்ற தலைமுறை எழுத்தாளரான எஸ்.வி.வி. பற்றி ஏகமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அவர் எழுத்தைப் படிக்கக் கொடுத்து வைக்கவில்லையே' என்ற தாபம் எனக்கு ரொம்ப நாளாகவே உண்டு. அந்த தாபத்தைத் தணிக்கும் விதமாக அல்லயன்ஸ் கம்பெனியார் (த.பெ. எண்: 617, சென்னை—4) ஒரு சிறுகதைத் தொகுப்பையும் ஒரு நாவலையும் வெளியிட்டிருக்கிறார்கள். தலைப்பை எப்படி கவர்ச்சிகரமாக வைக்கலாம் என்று மண்டையை உடைத்துக் கொள்கிற இந்நாளில் வெளி வந்திருக்கும் இந்த நூல்களின் தலைப்புக்கள் முறையே, 'கோபாலன் ஐ.ஸி.எஸ்'; 'ராமமூர்த்தி!'; இந்தத் தலைப்புக்களே இன்றையத் தமிழ் இலக்கியச் சூழலை நையாண்டி செய்வதற்காக வைக்கப்பட்டதுபோல் தோன்றுகிறது! படிக்க ஆரம்பித்துவிட்டாலோ பக்கத்துக்குப் பக்கம் இயல்பான யதார்த்தமான உரையாடல்களில் மெலிதான அங்கதப் பாணி நகைச்சுவை! 'ராமமூர்த்தியைத் தமிழில் வெளி வந்திருக்கிற மிகச் சிறந்த நாவல்களில் ஒன்றாக நான் கருதுகிறேன். மனித உள்ளங்களைப் பற்றி கன்ஃபூசியஸ் தன் ஆயுள் பூராவும் சொன்ன விஷயங்களை எஸ்.வி.வி. ஒரு நாவலில் அடக்கிக் காட்டுகிறார்' என்று க. நா. சுப்பிரமணியமே முன்னுரையில் கூறிய பிறகு, 'வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி' என்பது தவிர நாம் வேறென்ன கூற இருக்கிறது!

ரூ. 10 பரிசு பெறுபவர்:
டி. எஸ். ரெட்டி, வேலிடெட்டி,
[illegible],
627 902.

இன்னும் இரண்டு கிலோ மீட்டர் நடக்க வேண்டும். தங்களின் லஞ்ச லாவண்யங்கள் ஊர் மக்களுக்குத் தெரியக் கூடாதென்று நினைத்தோ என்னவோ அந்த அரசு அலுவலகங்களை ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாய்க் கட்டியிருந்தார்கள். இரண்டு மாதங்களுக்கு முன் அந்தக் கட்டடத் திறப்பு விழாவுக்கு மூன்று 'மாண்புமிகு'க்கள் வருகை தந்ததற்கான செலவில், நெடு நாளாய் நிறைவேறாதிருக்கும் இந்த ஊர்க் கழிவு நீர்த் திட்டத்தையே செயல்படுத்தியிருக்கலாம்!

பட்டம் பெற்று வந்த நாளில், ''இனிமே கவலைப்படாதீங்கப்பா.... உங்களையும் அம்மாவையும் உட்கார வச்சுச் சோறு போட வேண்டியது என் பொறுப்பு.... எப்படியாவது வேலை தேடிக்கிறேன், பாருங்க!'' என்று வீராப்புப் பேசினான். ஆயிற்று ஐந்து வருடங்கள். வீராப்பு விரக்தியானது. சோகம் தாடியாய் முளைத்துச் சொரிந்து கொள்ளும்போது மட்டும் சுகம் தந்தது.

அரசாங்க வேலைக்கு அப்ளிகேஷன் போடும் வயதின் கடைசி மாதத்தில் இவன். அந்த அப்ளிகேஷனை அனுப்பவும் இன்று தான் கடைசி நாள்.

இந்த வேலைக்கு 'கம்யூனிட்டி சர்ட்டிஃபிகேட்' இணைக்கக் கோரியிருந்தார்கள். அதனை இணைத்துவிட்டால் மட்டும் வேலைக்கு உத்தரவாதம் என்பது இல்லை; என்றாலும் ஏதாவது உதவலாம்!

'வி.ஏ.ஓ.' விடமும், 'ஆர்.டி.ஓ.' விடமும் கடந்த ஒரு வாரமாய் அலைந்து, திரிந்து — இடையில் வீட்டில் அப்பாவிடம் திட்டு வாங்கி அவர்களிடம் கையெழுத்து வாங்கியாயிற்று. தாசில்தார் அலுவலக முத்திரையோடு 'அட்டெஸ்ட்' பண்ணினால்தான் அந்தச் சான்றிதழ் செல்லுபடியாகும். அதற்குத்தான் வேகாத வெயிலில் பயணம் மேற்கொண்டிருந்தான்.

இவன் சென்று தாலுகா ஆபீஸ் கட்டடத்தின் படியில் கால்வைத்துப் பெருமூச்செறிந்த போது சரியாய் மணி பத்து ஆகியிருந்தது. வேலை நேரம் பத்து மணியில் இருந்துதான் துவக்கம் என்றாலும் ஆபீஸ் இன்னும் களை கட்டத் துவங்கியிருக்கவில்லை!

எதிரே தார்ச்சாலைக்கு மறுபுறத்தில் ஒரு சின்னக் கீற்றுக் கொட்டகையில் அமைந்திருந்த நாயரின் டீக்கடையைத் தவிர வேறு கடைகளுமில்லை. அங்கே வருகிற மக்களின் தேவையை நானாவட்டத்தில் புரிந்து கொண்ட நாயர் வெற்றிலை, பாக்கு, பீடி, சிகரெட் இவைகளோடு வெள்ளைத்தாள்கள், ஆபீஸ் கவர், இங்க் இவற்றையும் வியாபாரத்தில் சேர்த்து பக்கத்திலேயே சின்னப் பெட்டிக் கடையையும் அமைத்திருந்தார்.

''என்ன தம்பி வேணும்?'' என்றார் சற்றே வயதான ஒருவர். காக்கி யூனிஃபாரத்தில் இருந்த அவர் பியூனாகத்தானிருக்கும்.

''இந்த கம்யூனிட்டி சர்ட்டிபிகேட்ல தாசில்தார்கிட்ட கையெழுத்து வாங்கணும்.''

''அப்படிங்களா, இப்படிக் கொடுங்க தம்பி.... அதோடயே உங்களோட படிப்பு சர்ட்டிபிகேட் எல்லாத்தையும் கொண்டாங்க. எல்லாத்தையும் பார்த்துத்தான் கையெழுத்துப் போடுவார். தாசில்தார் வந்ததும் முதல்ல உங்களோடதைப் பார்க்கிற மாதிரி டேபிள்ல மேல வைக்கிறேன்!''

— என்றவர் பிடரியைச் சொறிந்து தனது காவிப் பற்களைக் காட்டிச் சிரித்தார்.

'என்னைக் கவனிங்க!' என்ற அந்தச் சங்கேத மொழி இவனுக்குப் புரிந்தது. பத்து ரூபாய்த் தாளை எடுத்து அவரிடம் கொடுக்க, அவர் அதை யாரும் பார்க்காத வகையில் லாகவமாய்ப் பெற்றுக் கொண்டார். லஞ்சம் கொடுப்பதும், குற்றம்தான் — என்ன செய்வது?

''ஆமாம். தாசில்தார் எப்ப வருவாரு?''

''சரியாப் பதினொரு மணிக்கெல்லாம் வந்திடுவாரு.... நீங்க கவலைப்படாதீங்க தம்பி.... உங்களுக்குக் கையெழுத்து வாங்கித் தர வேண்டியது என் பொறுப்பு.... நீங்க அப்படிப் போய் உட்காருங்க!'' என்று சிமெண்ட் பெஞ்சைக் காட்டினார். இவனுக்கு அந்த வார்த்தைகள் கொஞ்சம் திருப்தியைத் தந்தன.

மணி பதினொன்றை நெருங்க நெருங்க ஆபீஸ் களை கட்டத் துவங்கியது. இன்னும் யார் யாரோ, என்னென்ன தேவைகளோடோ வந்து காத்திருக்க ஆரம்பித்தார்கள். பியூனும் பலபேருக்கும் பணத்துக்கு ஏற்றபடி பல்லைக் காட்டி வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு கேனில் டீ விற்றுக் கொண்டு வந்தான் ஏழு வயது மதிக்கத்தக்க சிறுவன். பள்ளி செல்ல வேண்டிய வயதில் பணி செய்யும் அவனைக் கண்டதும் இவனுக்குப் பரிதாபமாய் இருந்தது.

''இங்க ஒரு டீ கொடுப்பா!'' என்று அவனை அருகழைத்தான். துளி கூட சிந்தாமல் கேனிலிருந்து டீயைப் பிடித்து அவன் தந்த லாகவம் இவனைக் கவர்ந்தது.

டீயை வாங்கிச் சுவைத்துக் கொண்டே, ''உன் பேரு என்னப்பா?'' என்றான்.

''இளங்கோ!''

''நல்ல பேரு..... படிக்கலையா?''

''படிக்கவசதியில்லீங்க....படிச்சுப்புட்டா மட்டும் வேலை கிடைச்சிடவா போகுது!'' என்று பட்டென்று அவன் சொன்ன வார்த்தைகள் இவனை மனத்தில் அறைந்தன.

அதை வெளிக்காட்டாமல், ''ஆமா, அந்த நாயர் உனக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பளம் தர்றாரு?''

''ஒருவேளை சோறு போட்டு, நாலு ரூபா

பட்டுக்கோட்டை ராஜா

கொடுப்பாரு..... சரி சார், சீக்கிரம் டீயைக் குடிச்சிட்டு கிளாசைக் குடுங்க.... அடுத்த யாவாரத்தைப் பார்க்கணும்!'' என்றான் அவன்.

தனது தொழிலின் மேல் அவனுக்கிருந்த அக்கறை இவனை வியக்க வைத்தது. கிளாசையும், டீக்கான காசையும் கொடுத்து, அவனை அனுப்பிவிட்டுத் திரும்பியபோது தாசில்தாரின் ஜீப் வந்து நின்றது.

இவன் மனத்தின் மூலையில் லேசாய், ஒரு மலர், இதழ் விரித்தது.

பியூனின் சல்யூட்டையும், கூடி நின்றவர்களின் கும்பிடுகளையும் அலட்சியமாய்ப் பெற்றுக் கொண்ட தாசில்தார் விடுவிடு வென மாடிப்படிகளில் ஏறித் தனது அறைக்குள் நுழைந்தார்.

அவரைப்பின்தொடர்ந்தேசென்றபியூன் சற்றைக்கெல்லாம் 'ஃபிளாஸ்க்'கோடு வெளியே வந்தார்.

இவன் அந்த பியூனைப் பார்த்துச் சிநேகமாய்ச் சிரித்ததை அவர் கண்டு கொண்டதாய்த் தெரியவில்லை. பத்து ரூபாய் பத்து நிமிடங்களுக்குத்தான் வேலை செய்யுமோ?

அவர் நேரே நாயரின் கடைக்கு நடத்தார்... திரும்பினார். அவரை ஒரு கூட்டமே வழி நெடுகத் தொடர்ந்தது.



மீண்டும் தாசில்தாரின் அறைக்குள் நுழைந்த பியூன் அப்புறம் வெளிப்படவே யில்லை.

'இந்நேரம் கம்யூனிட்டி சர்ட்டிபிகேட்டில் தாசில்தார் கையெழுத்துப் போட்டிருப் பார்' என்றிவன் நினைத்துக்கொண்டான்.

நெடுநேரம் இடைவெளிவிட்டதால் வயிறு இன்னொரு டீ கேட்டது.

கட்டடத்தை விட்டிறங்கி நாயர் கடைக்கு நடந்தபோது சூரியன் உச்சிக்கு வந்து இன்னும் உக்கிரமாய்த் தாக்கினான்.

"ஒரு டீ போடுங்க நாயர்!" என்ற இவன் சுறுசுறுப்பாய் டீ கிளாசைக் கழுவிக் கொண் டிருந்த அந்தச் சிறுவன் இளங்கோவையே கவனித்தான். இந்தச் சிறு வயதிலேயே அவ னுக்கு எத்தனை பொறுப்புணர்ச்சி?

இவன் டீயைக் குடித்துக் கொண்டிருக்கும் போதே தாசில்தாரின் ஜீப் வளாகத்தை விட்டு வெளியேறித் தார்ச் சாலையில் ஓடி யதைக் கவனித்தான். அவசரமாய்க் குடித்து முடித்து அலுவலகத்துக்கு ஓடி வந்தான்.

வெளியே பளர் சூழ நின்றிருந்த பியூனைப் பிரயத்தனப்பட்டு நெருங்கி, "பியூன் சார்; என்னோட கம்யூனிட்டி சர்ட்டிபிகேட் கையெழுத்தாய்டுச்சா?"

"இன்னும் எதிலுமே அவர் கையெழுத் துப் போடலய்யா... ஆபீஸ் ஃபைல்களைப் பார்த்திட்டுச் சாப்பிடக் கிளம்பிட்டார்!" என்று பியூன் எரிந்து விழுந்தார்.

இவன் அதைப் பொருட்படுத்தாமல், "திரும்ப எத்தனை மணிக்கு வருவாரு?" என்று கேட்டான்.

"இனிமே ரெண்டு மணிக்குத்தான்!"

"தயவு பண்ணி அவர் வந்தும் முதல்ல என்னோட கம்யூனிட்டி சர்ட்டிபிகேட்டில் கையெழுத்து வாங்கிக் கொடுத்திடுங்க... ஏன்னா மூணு மணிக்குள்ளே இந்த அப்ளி கேஷனை ரிஜிஸ்தர் பண்ணியாகணும்...மூணு மணியோட ரிஜிஸ்டிரேஷன் கவுண்டரை மூடிடுவாங்க! இன்னிக்குத்தான் இந்த அப்ளி கேஷனை அனுப்பக் கடைசி நாள்!" என்றான் இவன் பணிவோடு.

"சரி பார்க்கலாம்" என்ற பியூன் சைக் கிளை மிதித்துச் சாப்பிடக் கிளம்பினார். மீண்டும் இரண்டு கி. மீ. வெயிலில் வீட்டுக்கு நடந்துவிட்டுத் திரும்புவது துர் லபம். எனவே மதியச் சாப்பாட்டைத் தியாகம் பண்ண முடிவெடுத்தான். மனம் ஏனோ தனிமையை விரும்பியது. காக்கை கூட உட்காராத அந்தக் கருவை மரத்தடி நிழலை(!) நோக்கி நடந்தான்.

"தன்னையே நினைத்தபடி அமர்ந்திருந் தவன் மனத்தில் கார்ப்பண்யம் சூழ்ந்து கொண்டது. உச்சியில் சுட்டெரித்த சூரியன் உடனே இவனுக்குக் குளிர்நிலவாய் உரு மாறியது!

பிற்பகல் இரண்டு மணிக்குத் தாசில் தாரின் ஜீப் மீண்டும் வளாகத்திற்குள் நுழைந்தபோது இவன் பழையபடி மீண்டும் உத்வேகம் பெற்றான்.

பியூனை நெருங்கிச் சென்று கெஞ்சும் பாவனையில் கண்களால் பேசினான். பியூன், தாசில்தாரின் அறைக்குள் நுழைந்தார்.

மணி 2.30, 2.45, 2.50 ஆகியும் பியூன் வெளியே வரவில்லை. இனிமேல் டவுனில் இருக்கும் போஸ்ட் ஆபீஸுக்கு நடந்து சென்று, 'ரெஜிஸ்ட்ரேஷன்' செய்வது இய லாத காரியம். மனம் ரணமாகியது.

ஏதோ ஒரு வேகம் இவனை உந்தித் தள்ள நேரே தாசில்தாரின் அறைக்குள் அனுமதி யின்றி நுழைந்து, "குட்மார்னிங் சார்" என் றான்.

அவர் இவனது 'குட்மார்னிங்'கைப் பெற்றுக்கொள்ளும்நிலையில் இல்லை. தொலை பேசியில்ஏதோபரபரப்பாய்ப்பேசிக்கொண் டிருந்தார் — "என்னது, தஞ்சாவூர் ரோட்ல பஸ் ஆக்ஸிடெண்ட்டா... ரெண்டு பஸ் மோதிக்கிடுச்சா...? சரி... இப்பவே நான் புறப்பட்டு வர்றேன்!" என்று ரிஸீவரை வைத்தவர் நகத்தைக் கடித்தார்.

பியூன் இவனைப் பார்த்து உதட்டைக் கடித்து என்னென்னவோ சைகையில் உணர்த்த முயன்று தோற்றுக் கொண்டிருந் தார்.

சட்டென்று சீட்டை விட்டெழுந்த தாசில் தார், "என்ன மிஸ்டர் வேணும்?" என்றார் இவனிடம்.

"கம்யூனிட்டி சர்ட்டிஃபிகேட் சார்!"

"எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கலாம்... இப்ப நான் அவசரமாப் போய்ட்டிருக் கேன்!" என்றவர் இவனது அடுத்த வார்த் தையைக் கேட்கக் கூட நேரமின்றி வேக மாய்ப் படியிறங்கி ஜீப்புக்குள் நுழையவும் ஜீப் சீறிப் பறந்தது.

அந்த ஜீப் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த இவனது கைகளுக் குள் எஜுகேஷன் சர்ட்டிஃபிகேட்டுகளைக் கொண்டு வந்து திணித்த பியூன், "ஸாரிப்பா, என்னை மன்னிச்சிடு!" என்றார்.

"இதில் உங்களைக் குறை சொல்ல என் னய்யா இருக்கு...? எல்லாம் என் விதி!" என்றவன் வெறி பிடித்தவனைப் போல் கல்லூரிச் சான்றிதழ்களைச் சுக்கல்சுக்கலாகக் கிழித்து வீசிவிட்டு, "இதெல்லாம் இருக்கிற துனாலேதான் போலிக் கௌரவம் பார்க்க வேண்டியிருக்கு... இனி அது இருக்காது!" என்று புலம்பியபடி நடந்து தார்ச் சாலை யைத் தாண்டியிருந்த நாயர் கடையை அடைந் தான்.

"என்ன சார், டீ போடவா?"

"வேணும் நாயரே, உங்க கடையில் எனக்கு ஒரு வேலை தர முடியுமா?"

நாயர் உடனே அதிர்ச்சியானார் — "என்ன தம்பி, விளையாடறீங்களா?"

"இல்லை நாயரே! நெஜமாத்தான் கேட் கிறேன்...! ஒரு நாளைக்கு நாலு ரூபா போதும்!" என்ற இவன் நாயரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவரின் பார்வை இவனைவிட்டு விலகிப் பக்கத்தில் செல்வதைக் கவனித்த இவன் அந்த இடத்தில் திரும்பிப் பார்த்தபோது, அங்கே சிறுவன் இளங்கோ இவனையே நட்புறவோடு பார்த்தபடி நின்றிருந்தான்.

பிரிவோம் சந்திப்போம்

-மு.மேத்தா-

''**போ**ய் வருகிறேன்'' என்றது பூ.

செல்லமாகத் தட்டிக் கொடுத்தது செடி. தோட்டக்காரன் தொலைவில் வந்து கொண்டிருந்தான்.

''கோவிலுக்குப் போகிறேனோ? கூந்தலுக்குப் போகிறேனோ?'' — பூ மீண்டும் புலம்பியது.

செடி ஆறுதல் சொன்னது:

''எங்கு போனால் என்ன? மயானத்தில் தூவப்பட்டாலும் மலர் எப்போதும் மலர்தானே! உன்னுடைய மரியாதை உன்னை விட்டுப் போகாது. கவலைப்படாதே...''

மலர் மௌனமாக இருந்தது.

''மகிழ்ச்சியாக இரு. மறுபடியும் சந்திப்போம்'' என்று செடி கூறியது.

''மறுபடியுமா? நானெப்படி மறுபடியும் உன்னிடம் வர முடியும்?'' என்றது மலர். செடி சிரித்தது:

''நீ நீயாகவே வரவேண்டும் என்பதில்லை. உனக்குப் பதிலாக இன்னொரு பூ. நீ உதிர்ந்த இடத்தில் மற்றொரு மலர். நீ பறிக்கப்படலாம். ஆனால்... உன்னுடைய நினைவுகள் ஜனித்துக் கொண்டேயிருக்கும். நீ கூதிர்ந்து போகலாம். ஆனால் உன்னுடைய சகோதரர்கள் முளைத்துக் கொண்டே இருப்பார்கள்!''





''போய் வருகிறேன்'' என்றான் காதலன்.

''போகிறாய்! — எப்போது வருவாய்?'' என்றாள் காதலி.


''பிரிவு தற்காலிகமானது'' என்றான் அவன்.

''சந்திப்பும் தற்காலிகமானதுதான்'' என்றாள் அவள்.

''நினைவுகள் நிரந்தரமானவை'' என்று காற்று அவர்கள் காதோடு சொல்லியது.

''போய் வருகிறேன்'' என்றது மைத்துளி.

''புறப்படு மகனே! உன்னுடைய பிரயாணம்தான் என்னைப் பெருமைப்படுத்துகிறது! நீ என் இடுப்பை விட்டு இறங்கிய பிறகுதான் எல்லாரும் உன்னை ஏறெடுத்துப் பார்க்கிறார்கள். நீ பாராட்டப் பெறும்போதுதான் எனக்கு ஈன்ற பொழுதைவிடவும் இன்பம் கிடைக்கிறது!'' என்றது பேனா.



மைத்துளி மறுபடியும் சொன்னது:

''என்னதான் இருந்தாலும் உன்னைப் பிரியும்போது என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் கண்ணீர்த் துளிபோலக் கசிகிறேன்.''

''எனக்கும் அப்படித்தான். உன் கடைசித் துளியும் என்னை விட்டுப் பிரியும் நேரத்தில் குமுறலைத் தாங்க முடியாமல் நான் கொட்டத் தொடங்குகிறேன்.



''போய் வருகிறேன்'' என்றது அருவி.

மார்பின் மீது மத்தளம் கொட்டிக் கொண்டிருந்த அருவியைப் பார்த்து மலை கூறியது:

''புறப்படு. தாகமாக இருப்பவர்களுக்குத் தண்ணீராய் மாறு! வயல்வெளிகளுக்குப் பாலூட்டு! நதிகளின் மேனிகளில் நர்த்தனமாடு. கடலிடமிருந்து கப்பம் வசூலித்துக் கொண்டு மேகமாக மாறி மேலே எழு! மீண்டும் சந்திப்போம்!''

''போய் வருகிறேன்'' என்கிறேன் நான்.

பழிவாங்கும் பழைய கதை!



ஜாலியாய் மனைவி மகனுடன் பிக்னிக் போன இடத்தில் மோட்டார் படகில் வெடிகுண்டு வெடிக்க, அந்த அமெரிக்க வீரன் தன் மனைவியையும், மகனையும் இழக்கிறான். அவ்வளவுதான். உடனே பழி வாங்கப் புறப்படுகிறான். ஒரு பெரிய மிஷின் கன்னைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் நுழைந்து விடுகிறான். துப்பாக்கிகள் குண்டுகளைப் பொழிகின்றன. நிறைய மனிதர்கள் மரணமடைகிறார்கள். கதாநாயகன் ஒரு பெரிய படையையே ஒற்றை ஆளாக நின்று நிர்மூலம் ஆக்குகிறான். எங்கேயோ கேள்விப்பட்ட கதை மாதிரி இல்லை? பழி வாங்கும் கதை பழசாக இருப்பதால் படமும் நம்மைப் பழி வாங்கி விடுகிறது!

அதே ஃபர்ஸ்ட் ப்ளட் கதைதான். அந்தப் படத்தில் செக்ஸ் இல்லை என்பதற்காக இந்தப் படத்தில் அதைச் சேர்த்துவிட்டிருக்கிறார்கள் போல. ஆனால் இந்தியாவில் அந்த செக்ஸ் ஸீன்களை எல்லாம் சென்ஸார் சுபளீகரம் பண்ணிவிட, விளம்பரத்தைப் பார்த்துவிட்டு வரும் ரசிகர்களுக்குப் படு ஏமாற்றம்!

ஃபர்ஸ்ட் ப்ளட்டில் நாயகன் உடம்பில் ஊசியால் தையல் போட்டுக் கொள்வான். இதில் நாயகன் உடலில் புகுந்த குண்டை வெகு நிதானமாகத் தோண்டி எடுக்கிறான்.

மற்றபடி நாயகன் காட்டில் புகுவது, இருட்டுக்குள் பிசாசு போல் அலைவது, ஒவ்வொரு போர் வீரனைக் கொல்வது —


ஃபர்ஸ்ட் ப்ளட் யாராவது மிஸ் பண்ணியிருந்தால் அதனுடைய இன்னொரு பிரதியை இப்போது பார்க்கலாம்.

சினிமா சினிமா



தக்களி நூலிழை அளவுக்கு ஒரு கதை.

ஓர் அப்பாவி டைரக்டர். ஒரு படு அப்பாவி காமிராமேன். இவர்கள் இருவருமாகச் சேர்ந்து பகீரத முயற்சிகளைச் செய்து ஒரு படம் எடுக்கிறார்கள். சினிமாவில் நடிப்பதற்காக வீட்டை விட்டு ஓடி வந்த ஒரு கிராமத்துப் பெண்ணை கதாநாயகி ஆக்குகிறார்கள். கடைசியில் இவர்கள் படம் முடிவடைவதற்குள் அந்தக் கிராமத்துப் பெண் பெரிய கதாநாயகி ஆகி இவர்களுக்கு 'பெப்பே' காட்டிவிடுகிறாள். பணம் இல்லாமல், படம் எடுக்க வழியில்லாமல் இவர்கள் பீச்சாங் கரை ஓரம் அலைகிறார்கள்.



இங்கிலீஷ் விக்ரம்!

இஸ்தான்புல்லிற்கு ஓர் இரும்புப் பணப்பெட்டியைத் திறக்கும் வேலையாக வருகிறான் ஹீரோ. யாராலுமே திறக்க முடியாத அந்தப் பெட்டியை ஹீரோ திறந்தவுடன் விளக்குகள் எரிகின்றன. கைதட்டல் கேட்கிறது. பின்னால் திரும்பினால் ஹீரோவின் பழைய தோஸ்த். அந்த நண்பன் சூரியக் கடவுளிடம் இருக்கும் ஒரு விலைமதிப்பற்ற பொக்கிஷத்தை எடுத்துவருமாறு ஹீரோவை ஏவி விட, ஹீரோ பாலைவனம், மலை, குகைகள் எல்லாம் தாண்டிப் போகிறார்.

தொடக்கத்திலிருந்து கடைசி வரை விறுவிறுப்பான சீன்கள் தான். கார்கள் ஒன்றை ஒன்று துரத்துகையில் ஓடும் ரயிலுக்கு இடையில் கார் நுழைந்து தப்பிப்பது என்று தொடங்கி, தண்ணீரில் படகுச் சண்டை, பாலைவனத்தில் கார் சேஸிங், சுரங்க வழியில் இருக்கும் பெருச்சாளிகளிடமிருந்து தப்பித்தல், கடைசியில் நெருப்புக்கு இடையில் ஹீரோ இறங்கி அந்தத் தங்கக் கதவைத் திறக்க வழி கண்டுபிடிக்கும்வரை காட்சிகள் மடிந்து மடிந்து விழுந்து ஓடுகின்றன. இந்தப் பொக்கிஷத்தைக் கைப்பற்ற இன்னொரு க்ரூப் முயல, துப்பாக்கிகள் சீறுகின்றன. பாறைகளில் குடைந்து அமைக்கப்பட்ட அவ்வளவு பெரிய கோவில் தரை மட்டமாகிறது. கடைசியில் வில்லன் க்ரூப் தோல்வியைத் தழுவ, ஹீரோ ஹீரோயினைத் தழுவுகிறார்.

இங்கிலீஷ் விக்ரம் (விறுவிறுப்பான!)



ஐந்து நிமிஷத்தில் சொல்லக் கூடிய இந்தக் கதையை எப்படியெல்லாம் இழுத்துக் கொண்டு போகிறார்கள் என்பதுதான் படம்.

காதலிக்க நேரமில்லை, ஒளி விளக்கு, கர்ணன், நீரும் நெருப்பும், தர்ம யுத்தம், மீண்டும் கோகிலா, தில்லானா மோகனாம்பாள், பெயர் தெரியாத ஒரு குங்ஃபூ படம்—எல்லாவற்றிலிருந்தும் பாடல் காட்சிகளையும், சண்டைக் காட்சிகளையும் வேறு சில பல நல்ல காட்சிகளையும் உருவி நிரவி (ஓர் ஒளியும் ஒலியும், ஒரு திரை மலர், ஒரு மலரும் நினைவுகள்) படத்தை ஒப்பேற்றி இருக்கிறார்கள்.

எஸ்.எஸ். சந்திரனும், லூஸ் மோகனும் போடும் கிந்தனார் பாணி நவீன திருவிளையாடல் நாடகம் கொஞ்சம் சிரிக்கும்படி இருக்கிறது.

மற்றபடி — ?

— ஜெயமன்மதன்



ஞானபீடத்தில் அமரும் பன்னலால் படேல்!

1985ம் ஆண்டுக்கான ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ஞான பீடப் பரிசு குஜராத்தி நாவலாசிரியர் பன்னலால் நானலால் படேலின் 'மானவினி பவாயி' நாவலுக்குக் கிடைத்துள்ளது.

குஜராத்—இராஜஸ்தான் மாநிலங்களின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மேக்ராஜ் என்ற சிறு கிராமத்தில் பன்னலால் 74 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தார். தொடக்க காலப் பள்ளிப் படிப்பு (ஐந்தாம் வகுப்பு) அன்றிப் பட்டங்கள் எதையும் இவர் பெறவில்லை. ஏட்டுக் கல்வியைக் காட்டிலும், வாழ்க்கை அனுபவக் கல்வியே எழுத்தாளனின் 'ஜீவ நாடி' என்பது, இவருடைய வாழ்க்கை உணர்த்தும் பாடம்!

சிறு வயதில், செய்வது இன்னது என்பது புரியாத நிலையில், ஒரு துறவியுடன் தம் இல்லத்தைவிட்டு ஓடினார். அவருடன் ஊர் ஊராய், நாடோடியாய்ச் சுற்றினார். பல இடங்களுக்குச் சென்று உழன்று, அனுபவத்தால் மக்களின் வாழ்க்கை முறைகளை முழுமையாகக் கண்டறியும் வாய்ப்பினைப் பெற்றார்.

வாழ்க்கையின் ஓட்டத்தில், பல இன்னல்களை இவர் சந்தித்தார். பல இடங்களில் பணியாற்றினார். ஆனால் மன நிறைவினை இவரால் பெற முடியவில்லை. இந்நிலையில் பள்ளித் தோழராய் மட்டுமல்லாமல், நெருங்கிய நண்பராகவும் இருந்த உமா சங்கர் ஜோஷியின் தூண்டுதலால் எழுத்துலகத்தில் அடியெடுத்து வைத்தார். அங்கும், ஏமாற்றங்களே இவரை எதிர்கொண்டு வரவேற்றன! இவருடைய படைப்புக்கள் பொது மக்களிடையே பரவவில்லை. பொறுத்திருந்தார்.

காலம் மாறியது. 1936 ஆம் ஆண்டு இவருடைய படைப்பு வானில் ஒளி உதயமாகியது. 'ஷேக்னி சாரதா' என்ற சிறுகதை, புகழ் பெற்ற குஜராத்தி இதழில் அச்சேறியது. மக்களின் கருத்துக்கு விருந்தாகியது. தொடர்ந்து பல கதைகள், குறு நாவல்கள், நாவல்கள் வெற்றி தேடித் தந்தன. 'பிணைந்த ஜீவன்கள்' சாகித்திய அகாதமியின் பாராட்டைப் பெற்று இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

இடையே, எலும்புருக்கி நோயின் பிடியில் சிக்கினார் பன்னலால். பஞ்சகனி சானடோரியத்தில் சிகிச்சை பெற்றார். குஜராத்தி மொழியின் சிறந்த கவிஞர் சுந்தரத்தின் நட்பு அங்கு இவருக்குக் கிட்டியது. அதன் விளைவாகப் பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்திற்குச் சென்றார். அன்னையின் அருளில் அளவிறந்த நம்பிக்கையும் பற்றும் கொண்டார். 'நீ பேசாதே; உன் எழுத்து பேசட்டும்' என்று அன்னை அன்று இவருக்கு அருளிய வாக்கு இன்று மெய்யாகிவிட்டது.

இன்று ஞானபீடப் பரிசினைப் பெற்றுள்ள 'மானவினி பவாயி' (1946) என்ற நாவல் ஏற்கெனவே 1950 ஆம் ஆண்டில் ரஞ்ஜித்ராம் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது. இதுவும் ஒரு காதல் காவியம்தான் என்றாலும் நாவலின் முன்னணியில் நிற்பது இந்திய விவசாயிகளின் கடினமான, துன்பம் நிறைந்த வாழ்க்கையே! பஞ்சத்தால் தாக்குண்ட கிராமத்து மக்களின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

நாவலின் தலைப்பு ஆழ்ந்த அர்த்தமுள்ளது. மானவி என்றால் மனிதத் தன்மை; பவாயி என்றால் தீர்க்க முடியாத துன்பங்கள், போராட்டங்கள். மேலும் 'பவாயி' என்பது உழவுத் தொழிலைக் குறிக்கும் ஒரு கிராமிய வழக்குச் சொல். விவசாயி அடையும் முடிவில்லாத் துன்பத்துக்கும் அவனிடம் உள்ள மனிதாபிமானத்துக்கும் இடையில் நடக்கும் போராட்டமாக நாவலைக் கருதலாம்.

காலு இக்கதையின் தலைவி. உயர்ந்த மனிதத் தன்மைகள் அனைத்திற்கும் ஒரு வடிவம் கொடுத்தால், அவள்தான் காலு. ராஜுவிடம் கொண்ட காதலில் தோல்வி கண்டதற்குக் காரணம்—கிராமத்து மக்களின் உள்ள நிலை! கிராம மக்களின் சிறுமையை, கற்பனைக்கும் எட்டாத வறுமையை, அறியாமையை, மூட நம்பிக்கையை, கோழைத்தனத்தையெல்லாம் வெளிப்படுத்தும் பன்னலாலின் எழுதுகோல், அதே நேரத்தில் அம்மக்களின் அன்பின் ஆழத்தை, பாசப்பிணைப்பினை, பெருந்தன்மையை, அனைத்திற்கும் மேலான தன்மான உணர்ச்சியை ஓவியமாகத் தீட்டத் தவறவில்லை.

குஜராத்தி இலக்கியத்திற்கு 30 நாவல்களையும், 27 சிறுகதைத் தொகுப்புக்களையும், 5 நாடகங்களையும் குழந்தைகளுக்கான சில நூல்களையும் எழுதி அளித்துள்ள பன்னலாலின் பெயர் 'இந்திய எழுத்தாளரில் யார் எவர்?' என்ற நூலில் ஏன் இடம்பெறவில்லை? பெரிய கேள்விக்குறி! பலருக்கும் புரியாத புதிர்!

— கலா தாக்கர்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543).
Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

